# ஞானச்சுடர்



ஐப்பசி 2017

238 ஆவது மலர்





வெளியீடு:

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறள் வழி



நத்தம்போற் கேடும் உளதாகுஞ் சாக்காடும்
வித்தகர்க் கல்லால் அரிது.

**பொருள்:** பொருளைக் கொடுத்துப் புகழைச் சம்பாதித்தலும் புகழ் உடம்பை நிறுத்திப் பூத உடம்பை விடுதலும் அறிவாற்றல் உள்ளவர்க்கே முடியும்.

(235)

தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று.

**பொருள்:** மனிதராய்ப் பிறக்கில் புகழ் தோன்றுதற்கு ஏதுவாகிய குணங்களோடு பிறக்கவேண்டும்; அக்குணங்கள் இல்லதார் பிறவாதிருத்தல் நல்லது.


(236)

# நற்சிந்தனை

## மறப்பேனோ குருநாதன் தன்னை

### முத்தி நல்குமே

### ஊதூது சங்கே ஊதூது – 1



ஊதூது சங்கே ஊதூது
ஓம்சிவாய நமவென் றூதூது 01

ஊதூது சங்கே ஊதூது
ஒருபொல்லாப் பில்லையென் றூதூது 02

ஊதூது சங்கே ஊதூது
உட்பகையை விட்டிடென் றூதூது 03

ஊதூது சங்கே ஊதூது
உங்கள்பிரான் இங்குவர ஊதூது 04


ஊதூது சங்கே ஊதூது
ஒருவருக்குந் தெரியாதென் றூதூது 05

ஊதூது சங்கே ஊதூது
ஐம்பூதம்நா மல்லவென் றூதூது 06

ஊதூது சங்கே ஊதூது
ஐம்பொறி நாமல்லவென் றூதூது 07

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானச்சுடர்



வெளியீடு:

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# ஞானச்சுடர்

வெளியீடு - 2 சுடர் - 238

2017 ஐப்பசி

## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| கந்தவேள்புராணந்தனை... | கே.எஸ். சிவஞானராஜா | 01 -03 |
| திருச்சதகம் | சு. அருளம்பலவனார் | 04 -07 |
| ஆலய வழிபாடு | சி. பரணீதரன் | 08 -11 |
| திருவருட்பயன் | ஆ. ஆனந்தராசன் | 12 -16 |
| கேதாரகௌரி நோன்பின்... | க. லோகேஸ்வரன் | 17 -18 |
| பகவத்கீதையின் உலகம்... | பூ. சோதிநாதன் | 19 -20 |
| ஜீவகாருண்யம் | சர்வமத பிரியன் | 21 -23 |
| சமய வாழ்வு | இரா. செல்வவடிவேல் | 24 -27 |
| சிவ சின்னங்கள் | திருமதி ந. பரமேஸ்வரி | 28 -30 |
| சித்தர்களின் ஞானம் | சிவ. மகாலிங்கம் | 31 -36 |
| இறைவனால் புடம்போட்டு... | பு. கதிரித்தம்பி | 37 -39 |
| கண்டோம் கதிர்காமம் | அன்னைதாசன் | 40 -41 |
| காயத்திரி மந்திரம் | ம. சிவயோகசுந்தரம் | 42 -44 |
| நித்திய அன்னப்பணி... | சந்நிதியான் ஆச்சிரமம் | 45 -46 |
| சோமசுந்தரப்பெருமான்... | அ. சுப்பிரமணியம் | 47 -49 |
| வழித்துணை | செ. சிவசுப்பிரமணியம் | 50 -51 |
| அன்பும் பக்தியும் | திருமதி ஜெ. இராஜேஸ்வரி | 52 -53 |
| திருமுறை பாடிப் பணிவோம் | திருமதி சி. யோகேஸ்வரி | 54 -56 |
| கோவில்களில் செய்யக்... | சி.வ. இரத்தினசிங்கம் | 57 -58 |
| நல்லவர் மனங்கள்... | நீர்வைமணி | -59 |
| 2017இல் சந்நிதியான் ஆச்சிரம... | தொகுப்பு | -60 |


வருட சந்தா: 500/= (தபாற் செலவுடன்)

**சந்நிதியான் ஆச்சிரம**

**சைவ கலை பண்பாட்டுப் பேரவை**

தொலைபேசி இலக்கம்: 021 321 9599, 021 226 3406

அச்சகம்: சந்நிதியான் ஆச்சிரமம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானச்சுடர் புரட்டாதிமாத வெளியீடு

## வெளியீட்டுரை:-

ஞானச்சுடர் புரட்டாதி மலருக்காகிய வெளியீட்டுரையினை ஆச்சிரம செயற்பாட்டில் நீண்டகாலமாக ஈடுபட்டுக்கொண்டிருக்கும் சமாதான நீதவான் திரு சிவ. ஆறுமுகஸ்வாமி அவர்கள் ஆற்றியிருந்தார்கள்.

அவர் தமதுரையில் ஒரு ஆன்மீக மலர் எவ்வித விளம்பரமும் அற்ற வகையில் தொடராக இருநூற்றி முப்பத்தேழு மாத காலமாக வெளிவருவதென்பது ஒரு சாதனை என்றே கூறவேண்டும். இதற்கு மூலகாரணமாக சந்நிதி வேற்பெருமானின் கருணையோடு ஆச்சிரம சுவாமி அவர்களின் முயற்சியும்தான் காரணம் என்று கூறித் தனது வெளியீட்டுரை யினை நிறைவு செய்தார்.

## மதிப்பீட்டுரை:-

மலருக்குரிய மதிப்பீட்டுரையினை யாழ்ப்பாணக் கல்லூரி ஆசிரியரும் சொற்பொழி வாளருமான திரு துரை. கணேசமூர்த்தி அவர்கள் ஆற்றினார்கள். அவர் ஆச்சிரமம் ஆற்றும் காத்திரமான பணிகளையும் விபரமாக எடுத்துக் கூறியதுடன், "ஞானச்சுடர்" மாதாந்த சமய சஞ்சிகையின் உள்ளடக்கம், புதிய எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் தன்மை ஆகியனபற்றி விபரித்தார். எல்லாவற்றிற்குமே முதலும் மூலமாயுமுள்ள சந்நிதி வேலவனின் திருவருட் கருணையை ஏற்றிப் போற்றி தனது மதிப்பீட்டுரையினை நிறைவு செய்தார்.

## ஞானச்சுடர் சந்தாதாரரின் கவனத்திற்கு...

வணக்கம்!

தாங்கள் காட்டிவரும் பேராதரவுக்கு மனமார்ந்த நன்றிகள். 2018ஆம் ஆண்டுக் கான உங்களுடைய சந்தாப் பணத்தினைச் செலுத்தித் தங்கள் பதிவினைப் புதுப்பித்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம். புதிய ஆண்டில் பிரதிகளைத் தவறாது பெற்றுக் கொள்வதற்கு வசதியாக தங்கள் சரியான முகவரியைத் தபால் மூலமோ - தொலைபேசி மூலமோ தெரியப்படுத்துமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

-சைவ கலை பண்பாட்டுப் பேரவை-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடர் தரும் தகவல்

14.10.2017 வலம்புரி நாளிதழில் ஆசிரியர் தலையங்கத்தினை வாசித்தபோது, அதன் உள்ளடக்கம் எத்துணை கனதியானது என்பதை நாம் உற்றுநோக்கவில்லை. புலம்பெயர் நாடுகளில் தமிழ் - சமய வளர்ச்சிக்கான பல்வேறு நிகழ்வுகளையும் பத்திரிகையின் வாயிலாகவும், இறுவெட்டுக்கள் மூலமாகவும் நாம் அறிந்திருந்ததால் ஆசிரிய தலையங்கம் நமக்கு ஒரு பொருட்டாகப் படவில்லை.

அன்று மாலையே, ஆச்சிரமத்திற்கு முன்பாக என்னால் அவதானிக்கப்பட்ட ஒரு நிகழ்வு, "வலம்புரி" ஆசிரியர் தலையங்கத்தின் அவசியத்தை எமக்கு உணர்த்தி நின்றது. தொண்டைமானாறு செல்வச்சந்நிதிச் சூழலில் பிறந்து- தவழ்ந்து- வளர்ந்து- படித்த ஒரு தம்பதியர் தங்களுக்குள் பிறமொழியில் உரையாடிச் சென்றதை யான் அவதானித்தேன். சொந்த ஊரிற்கூட தமிழ் மொழியில் உரையாட முடியாத அளவிற்கு அவர்களிடம் பிறமொழி மோகம் புகுந்திருந்தது நெஞ்சினை நெருடியது.

"வலம்புரி" நாளிதழ் ஆசிரியர் தலையங்கத்தின் கருத்தாழம் கருதி அதன் மேற்பகுதியினை மட்டும் இங்கு தந்திருக்கிறோம். நன்றி... வலம்புரி...

## தமிழை எம் உயிர் என்போம்

கனியிடை ஏறிய சுளையும் - முற்றல்
கழையிடை ஏறிய சாறும்,
பனிமலர் ஏறிய தேனும் - காய்ச்சுப்
பாகிடை ஏறிய சுவையும்,
நனிபசு பொழியும் பாலும் - தென்னை
நல்கிய குளிரிள நீரும்
இனியன என்பேன் எனினும் - தமிழை
என்னுயிர் என்பேன் என்றார் பாவேந்தன் பாரதிதாசன்.

அவரின் முடிவு நமக்கும் பொருத்தமானது. நம் தமிழ்மொழி செம்மொழி எனப் போற்றப்படுவது. உலகில் தோன்றிய ஆதி மொழிகளில் நம் தமிழ்மொழி முதன்மையானது. இக்கால சூழ்நிலைகள் தமிழ் மொழிக்கு இந்த உலகில் தனியான நாட்டைத் தராவிட்டாலும் தமிழ் என்பதன் உச்சரிப்பே அமிழ்தத்தைத் தருவதாகும். எனவே எங்கள் உயிரினும் மேலான தமிழ் மொழி வாழவேண்டும். தமிழ்மொழி வாழ்ந்தால் மட்டுமே தமிழன் வாழமுடியும். அந்தவகையில் எங்கள் எதிர்காலச் சந்ததியினரிடம் தமிழ்மொழி மீதான பற்றை, விருப்பை ஏற்படுத்துவது எங்கள் ஒவ்வொருவரினதும் தலையாய கடமையாகும். அதேவேளை எமது புலம்பெயர் உறவுகளும் தங்கள் பிள்ளைகளுக்கு தமிழ் மொழியைப் போதிப்பதன்மூலமாகவே அவர்கள் வெளிநாடுகளிலும் தமிழர்களாக வாழமுடியும். இல்லையேல் எங்கள் தாய்மண்ணில் இருந்து சென்ற தமிழ் மக்கள் தாம் வாழும் நாட்டின் சனத்தொகைக்கு பங்களிப்புச் செய்தனர் என்பதே வரலாறாகிவிடும். இந்த வரலாறு எங்கள் இனத்துக்கு எந்தவகையிலும் பெருமை சேர்க்காது. ஆகையால் புலம்பெயர் தமிழ் உறவுகளின் பிள்ளைகள் தமிழ் கற்கவேண்டும். அதனூடு வெளிநாடுகள் முழுவதிலும் ஈழத் தமிழன் வாழ்கிறான். அந்தந்த நாடுகளின் ஆட்சி அதிகாரத்தில் பங்குகொள்கிறான். எனவே எதிர்காலத்தில் ஈழத்தமிழர்களுக்கு ஏதேனும் ஆபத்து என்றால் உலகம் முழுவதிலும் அதன் எதிரொலிப்பு பிரதிபலிக்கும் என்ற ஒரு பெரும் வரலாற்றுச் சாதனை நிலைநிறுத்தப்படும். ஆக, யுத்தத்தில் இழப்புக்களைச் சந்தித்தபோதிலும் ஈழத் தமிழர்கள் உலகெங்கும் ஆட்சிசெய்யும் அளவில் தம்மை உயிர்ப்பித்துக்கொண்டனர். தமிழை வளர்த்துக் கொண்டனர் என்று இந்த உலகம் பெருமையோடு கூறிக்கொள்ளும். ஆகையால் தமிழ்மொழியைப் பேசவும் அதன் சுவையை உய்த்துணரவும் பொருத்தமான ஏற்பாடுகளைச் செய்தாக வேண்டும்......

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ அருணகிரிநாத சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளிய திருவகுப்பு

## 04. திருவேளைக்காரன் வகுப்பு

ஆனபய பத்திவழி பாடுபெறு முத்தியது
வாகநிகழ் பத்தசன வாரக் காரனும்
ஆரமது ரித்தகனி காரணமு தற்றமைய
னாருடனு ணக்கைபரி தீமைக் காரனும்
ஆகமம்வி ளைத்தகில லோகமு நொடிப்பளவி
லாசையொடு சுற்றுமதி வேகக் காரனும்
ஆணவவ முக்கடையு மாவியை விளக்கியது
பூதியடை வித்தொரு பார்வைக் காரனும்
ஆடலைவு பட்டமரர் நாடதுபி ழைக்கவம
ராவதிபு ரக்குமட லாண்மைக் காரனும்
ஆடகவி சித்ரகன கோபுரமு கப்பிலரு
ணாபுரியி னிற்குமடை யாளக் காரனும்
ஆயிரமு கத்துநதி பாலனும கத்தடிமை
யானவர்தொ டுத்தகவி மாலைக் காரனும்
ஆறுமுக வித்தகனு மாறிருபு யத்தரசு
மாதிமுடி வற்றதிரு நாமக் காரனும்:,
யானெனதெ னச்சருவு மீனசம யத்தெவரும்
யாருமுணர் தற்கரிய நேர்மைக் காரனும்
யாதுநிலை யற்றலையு மேழுபிற விக்கடலை
யேறவிடு நற்கருணை யோடக் காரனும்
ஏரகமி டைக்கழிசி ராமலைதி ருப்பழநி
யேரணிசெ ருத்தணியில் வாசக் காரனும்
ஏழையினி ரட்டைவினை யாயதொரு டற்சிறையி
ராமல்விடு வித்தருள்நி யாயக் காரனும்
யாமளைம ணக்குமுக சாமளைம ணிக்குயிலை
யாயெனவ ழைத்துருகு நேயக் காரனும்
ஏதமற நிச்சயம னோலயவி ளக்கொளியும்
யாகமுநி வர்க்குரிய காவற் காரனும்
ஈரிரும ருப்புடைய சோனைமத வெற்பிவரும்
யானையள விற்றுவளு மாசைக் காரனும்
ஏடவிழ்க டப்பமலர் கூதளமு டிக்குமிளை
யோனுமறி விற்பெரிய மேன்மைக் காரனும்:,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐப்பசிமாத சிறப்புப்பிரதி பெறுவோர் விபரம்

A. சண்முகராஜா
(லண்டன்)

M. சதாசிவமூர்த்தி
(கனடா)

சி. மகேஸ்வரன்
(பிரதிக் கல்விப்பணிப்பாளர், புத்தூர்)

செ. ஞானசபேசன்
(கிராம அலுவலர், ஏழாலை)

சி. உதயகுமார்
(கிராம அலுவலர், கைதடி)

தலைவர்
(ப.நோ.கூ. சங்கம், கட்டைவேலி)

தி. இரவீந்திரநாதன்
(அதிபர், கலைமணி வீதி, கட்டைப்பிராய்)

திருமதி கமலாம்பிகை ஸ்ரீஸ்கந்தராசா
(சுன்னாகம்)

ம. குகதாசன்
(வரணி)

க. கோபாலசுந்தரம்
(மாருதி மோட்டோர்ஸ், உடுப்பிட்டி)

உரிமையாளர்
(நந்தினி என்ரபிரஸ், யாழ்ப்பாணம்)

சி. துளசிங்கம்
(சந்நிதி, தொண்டைமானாறு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நா. செல்வராஜா

(கொக்குவில்)

சி. சேது

(அச்சுவேலி)

S. செல்வராசா (செல்வி)

(சேவிஸ் ஸ்ரேஷன், புலோலி)

மு. அப்புலிங்கம்

(கோண்டாவில் கிழக்கு)

S. தங்கசிவம்

(நல்லூர் யாழ்ப்பாணம்)

ந. சிவக்குமார்

(ராஜன் எலக்ரோணிக், அச்சுவேலி)

திருமதி சசிலேகா ஜெயராஜன்

(ஆசிரியர், தோப்பு, அச்சுவேலி)

ப. தியாகராஜசர்மா

(திருமகள் வாசா, ஆவரங்கால்)

மகாலிங்கம் செல்வமணி

(ஊரெழு மேற்கு, சுன்னாகம்)

K. முகுந்தன்

(ஞானபண்டிதர் பாடசாலை அருகில், கொக்குவில்)

நா. நாகராசா

(பக்கிஸ்லேன், மானிப்பாய்)

ந. மணிவண்ணன்

(இரும்புமதவடி, வதிரி)

இராதாகிருஷ்ணன் கிரிதரன்

(தம்பலடி, பொலிகண்டி)

யோகதாசன் றாஜனி

(பூதவராயர் கோவிலடி, உரும்பராய்)

செ. இராசநாயகம்

(காப்பாளர், இ.போ.ச, அல்வாய்)

K. சீவரெட்ணம்

(கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைரவன் கனகன்

(சிறுப்பிட்டி மேற்கு, நீர்வேலி)

வே. முருகவேள்

(நெடியகாடு, வல்வெட்டித்துறை)

க. சத்தியதாஸ்

(வில்லிசைக் கலைஞர், சிறுப்பிட்டி)

வ. இராசநாயகம்

(கவிதா பொடி பில்லேர்ஸ், கரவெட்டி)

ரூபினி வசந்தகுமார்

(யாழ்ப்பாணம்)

உரிமையாளர்

(ஸ்ரீதேவி தொலைத்தொடர்பகம், அச்சுவேலி)

விக்னேஸ்வரி கணேசநாதன்

(நீர்வேலி)

சி. பத்மராசா

(நவிண்டில், கரணவாய்)

T.R. இரத்தினவேல்

(அரசவீதி, உரும்பராய்)

A. முரளிகரன்

(ஊரெழு)

பா. இந்துராணி

(மல்ரி ஓயில், இணுவில்)

சு. சுந்தரலிங்கம்

(வேவில் லேன், வல்வெட்டி)

வீ. வடிவேலு

(தும்பளை தெற்கு, பருத்தித்துறை)

Dr தர்மலிங்கம்

(நீர்வேலி)

சிவலிங்கம் சுகந்திகா

(ஆதியாமலை, உடுப்பிட்டி)

த. கனகம்

(பன்னாலை, நீர்வேலி வடக்கு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவரத்தினம் இந்திரமோகன்
(சண்டிலிப்பாய் மேற்கு)

திருமதி சிவநிதி முருகானந்தன்
(கட்டுடை, மானிப்பாய்)

இராசரத்தினம் வேல்குமார்
(இணுவில்வீதி, மானிப்பாய்)

P. சபாநாதன்
(யாழ்வீதி, மானிப்பாய்)

M. செந்தூரன்
(வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்)

க. முருகானந்தம்
(காளிகோவிலடி, மல்லாகம்)

த. சொக்கலிங்கம்
(இணுவில் தென்மேற்கு)

பா. சியாமளநாயகி
(சுண்ணாகம் கிழக்கு)

கிட்டிணன் ஜெயக்குமார்
(சிவன்வீதி, சிறுப்பிட்டி மேற்கு)

கு. ஜெகதீஸ்வரன்
(இராசவீதி, கோப்பாய் வடக்கு)

கி. ஜெயக்குமரபதி
(இடைக்காடு, அச்சுவேலி)

க. துரைராசா
(சுதுமலை தெற்கு)

அருச்சுனன் சுனோஜா
(தும்பளை தெற்கு)

சி. புஸ்பரதி
(கரணவாய் மத்தி)

இ. சிவபாதம்
(நீலமயில் வாசா, அல்வாய்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தவேள் புராணந்தனை காதலித்து வாழ்வோம்

– திரு கே.எஸ். சிவஞானராஜா அவர்கள் –

சூராதி சூரர்களின் ஆணவ வலிமை குன்றுமாறு போர் புரிந்த கந்தக் கடவுளின் அற்புத வரலாற்றினைக் கற்பவர் யாவரும் இம்மையில் இந்திர வாழ்வு பெற்று, நிரந்தர இன்பங்களை நுகர்ந்து எண்ணிய அனைத்தையும் வரமாகப் பெற்று இகபர நலன்களை எளிதாக அடைவார்கள். மறுமையில் சிவகதி அடைந்து இந்த மண்ணுக்கு என்றும் பாது காப்பாக இருப்பார்கள்.

கந்தபுராண வரலாற்றினை ஆலயங்கள்தோறும் முன்னோர்கள் படித்தும், வாசித்தும், ஓதியும், வணங்கியும், வாழ்த்தியும், வாழ்ந்தும் வந்த காரணத்தினால்த்தான், இன்று யாழ்ப் பாணத்தின் மூலவேர் எவராலும் அழிபடாமல், அழிக்க முடியாமல் ஆழ வேரூன்றியுள்ளது. இதன் பிரகாரமே யாழ்ப்பாணம் கந்தபுராண கலாசாரத்தோடு தோய்ந்து. காயாமல், தேயாமல், வாடாமல் நல்லூரில் தொனிக்கிறது.

"கந்தபுராணம் என்ற நூலிருந்தாலே வீட்டில்
கவலைகள் பறந்தோடும்- அந்தக்
கந்தபுராண நூல் படித்தாலே வீட்டில்
கலை பண்பாடு செழித்தோங்கும் - அந்தக்
கந்தபுராணம் படிக்கக் கேட்டாலே வீட்டில்
காலமெல்லாம் வாழ்வு சிறக்கும் - அந்தக்
கந்தபுராணத்தைத் தொட்டு வணங்கினாலே
காலடியில் புண்ணியம் பூத்திருக்கும்"

ஆம்! கந்தபுராணத்தை வாசிக்க வாசிக்க எண்ணியவை யாவும் திண்ணியமாகச் சித்திக்கும். இந்தக் கருத்தினை நம்பிக்கையோடு ஏற்று, கந்தபுராணத்தினைத் தினமோ அல்லது வாரமோ ஒழுங்காகப் படிப்பீர்களாக இருந்தால், உங்கள் வீட்டில் நல்லது நடந்தே தீரும். அது போட்டியாக இருக்கலாம். பரீட்சையாக இருக்கலாம். திருமணமாக இருக்கலாம். ஆணவ எதேச்சாதிகார சண்டித்தனமாக இருக்கலாம். அது எதுவென்றாலும் எல்லாவற்றிலும் வெற்றி பெறலாம். எதிரிகள் கூட இறங்கி வருவார்கள். முருகனிடம் கேட்காமலேயே வரங்கள் வீடுதேடி வந்தே தீரும்.

## நூற்பயன்

இந்திரராகிப் பார்மேல் இன்பமுற்று இனிதுமேவிச்
சிந்தையில் நினைந்து முற்றிச் சிவகதியதனில் சேர்வர்
அந்தமில் அவுணர் தங்கள் அடல்கெடமுனிந்த செவ்வேல்
கந்தவேள் புராணந்தன்னைக் காதலித்து ஓதுவோரே!

*எல்லாம் கடவுள் செயல் என்று அறிந்தால் துன்பமுமில்லை, கவலையுமில்லை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆமாம். கந்தபுராணந்தன்னை மிகுந்த பயபக்தியுடன், அன்போடு காதலித்து ஓதுவோர், இப்புவியில் பேரானந்தப் பெருவாழ்வு பெற்று நீடு வாழ்வு பெறுவர். எப்படியெனில் இந்திர சாம்ராஜ்ஜியத்தில் அவ்வாறு பேரானந்தம் கொழிப்பதுபோல அனுபவிப்பர்.

வேத விழுப்பொருள்களை நுண்மையாகவும், துல்லியமாகவும் விளக்குவது புராணங்களே. அதிலும் கந்தபுராணமானது, சைவசித்தாந்த விழுமிய உட்பொருளைப் பழமை ததும்ப முக்காலத்துக்கும் ஏற்றவாறு இயம்பவல்லதாகும். இதன் நிமித்தம், நல்லூர் மகோற்சவ காலத்திலே அதனைச் செவிமடுக்கச் செய்வது சாலவும் பொருத்தமானதாகும். நல்லூர் ஆதீன மண்டபத்தில் உற்சவகால இருபத்தைந்து நாட்களும் கந்தபுராண விழிப் புணர்வு எழுச்சி விழா நடைபெற்று வருவது ஒரு புதிய சகாப்தம் என்று கூறலாம். இஃது ஒரு ஆரம்பமாகும்.

## வாழ்க்கை

நான் அறிந்த வகையில், 1960 - 1980 காலப்பகுதியானது, வடமாகாணத்தில் கந்தபுராண கலாசாரத்தின் சாராம்சமாகவே சைவ சமயத்தவரின் வாழ்க்கையும் வளமும் வனப்பும் இருந்ததெனலாம். ஒவ்வொரு குடும்பத்தின் கௌரவமும் சிவத்தோடு நிரம்பி வழிந்தோடியது. திருநீற்றொளியினால் பிரகாசித்தது. தீட்சை ஒவ்வொருவருக்கும் பிரதான மாகியது. இனசன பந்த உறவுகள் மேலோங்கியது. வயதில் மூத்தவரே சகல பொறுப்புக் களிலும் கடமை புரிந்தனர். குறிப்பாக ஊருக்கான எந்த நிறுவனங்களிலும் வயதில் கூடியவரே ஊருக்குப் பெரியவராக இருப்பார். இப்போ கதை வேறாகியுள்ளது.

## மன்றம்

மேற்படி கந்தபுராண கலாசாரங்களை மேம்படுத்தும் நோக்கிலே, யாழ்ப்பாணக் கந்தபுராண கலாசார மன்றம், 15.03.2017 புதனன்று, பண்டிதர் தியாகராஜா பொன்னம்பலவாணர் தலைமையில் உருவாக்கப்பட்டது. இதனுடைய பிரதான நோக்கம், தொன்மையான கந்த புராண கலாசாரத்தை இன்றைய சமூகம் உணர்ந்து ஒழுகுவதற்கான தொண்டுகளை நம்பிக்கையோடு செய்வதே ஆகும். நல்ல முயற்சி வரவேற்கத்தக்கதே. ஆரம்பம் எதுவுமே கடினமானதாகவே இருக்கும். போகப்போக எல்லாமே வெற்றியளிக்கும். இதனுடைய முதற் படியாக 19.07.2017 புதனன்று, நல்லூரான் திருப்பதியில், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பெருமான் எழுதி உதவிய "கந்தபுராண வசனம்", சைவப் பிரகாசப் பதிப்பகத்தின் முயற்சியால் இந்து கலாசார அமைச்சு அச்சிட்டு வெளியிட்டது. வெற்றியும் கண்டது.

"கந்தபுராண கலாசாரமென்றால் அது யாழ்ப்பாணமே" என்ற ஆன்றோர் பொன்மொழி புத்துயிர் பெறவேண்டும். தவத்திரு யோகர் சுவாமிகள் கூறிய ஒரு வார்த்தை இங்கு நோக்கத்தக்கது.

"எமது மக்கள் அழிவுப் பாதையில் போகாமல் உய்வு பெறவேண்டுமாயின் கோவில் களில் கந்தபுராண படனம் மகோற்சவம் நடைபெறுவதற்கு முன்னதாக ஆறுமாத காலம் இடம்பெற வேண்டுமென அறைகூவல் விடுத்தார்."

இக்கருத்தினை இற்றைக்கு அறுபது வருடங்களுக்கு முன்னதாகவே இந்து மக்களுக்கு வழங்கினார். நல்லூர் ஆதீனத்தில் அதன் மணம் வீசுகிறது. இன்று அந்த

*ஒருவன் தேவையற்றதை வாங்கினால் தேவையுள்ளதை விற்க நேரிடும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வார்த்தை உயிர் பெறுகிறது. பிரதானமான ஆலயங்களில் பாரம்பரியமாகக் கந்தபுராண படனம் வாசிக்கப்பட்டு வருகிறது. வலிகாமம், தென்மராட்சி, வடமராட்சி, தீவகம், வவுனியா, நல்லூர், கோப்பாய், இணுவில், அளவெட்டி, தெல்லிப்பளை, ஏழாலை, யாழ்ப்பாணம் என பிரசித்திபெற்ற ஆலயங்களில் இன்றும் புராணபடனம் ஓதப்பட்டு வருகிறது. அந்தந்த ஊரில் யாதொரு குறையும் ஏற்பட வாய்ப்பே இல்லை என்பது தெட்டத் தெளிவு.

தீயவை புரிந்தாரேனும் குமரவேள் திருமுன் உற்றால்
தூயவராகி மேலைத் தொல்கதி யடைவர் என்கை
ஆயவும் வேண்டுங் கொல்லோ அடுசமர் இந்நாள் செய்த
மாயையின் மகனும் அன்றோ வரம்பிலா அருள் பெற்றுய்ந்தான்!

ஆகவே, நாமனைவரும் தூயவராக வேண்டுமெனில் கந்தவேளின் கந்தபுராணந் தன்னைக் காதலித்து வாழ்வோமாக.

துறவியைப் பார்க்க வந்த பக்தர் ஒருவர் "சுவாமி நான் எனது பெற்றோர், மனைவி, குழந்தைகள் எல்லோருடனும் ஒரு சிறிய குடிசை வீட்டிலே வசிக்கிறேன். வீட்டில் இடக்கஷ்டம் தாங்க முடியவில்லை" என்றார். அதற்குத் துறவியும் "இவர்களோடு உன் ஆட்டையும் சேர்த்து வீட்டினுள் கட்டிவை" என்று கூறி பக்தனை அனுப்பி வைத்தார் துறவி.

துறவி கூறியதன்படி பக்தரும் வீட்டினுள் தனது ஆட்டையும் கட்டி வைத்தார். ஒன்றுமே நடக்கவில்லை. வீட்டில் மேலும் இடக்கஷ்டம் ஏற்பட்டது மட்டுமல்லாமல், வீடு முழுவதும் நாற்றம்வீச ஆரம்பித்துவிட்டது. இரண்டு வாரம் கழித்து திரும்பவும் துறவியைப் போய்ப் பார்த்த பக்தரும் "சுவாமி தாங்கள் கூறியதுபோலவே ஆட்டை வீட்டினுள் கட்டி வைத்தேன். எந்த முன்னேற்றமும் இல்லை. இடநெருக்கடி மேலும் அதிகரித்தது மட்டுமன்றி வீடும் ஆட்டுத்தொழுவம்போல் ஆகிவிட்டது" என்று வருத்தத்துடன் கூறினார். துறவியும் "அப்படியா! இனி ஆட்டை அவிழ்த்துவிடு" என்று கூறி அனுப்பிவைத்தார். வீட்டுக்கு வந்த பக்தரும் ஆட்டை அவிழ்த்து வெளியே செல்லவிட்டு, வீட்டையும் சுத்தம் செய்து சாம்பிராணித் தூபமிட்டார். அவரது மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. "ஆகா! எவ்வளவு இடவசதி!!! வீட்டிலும் சாம்பிராணி நறுமணம்!!! துறவியின் புத்திமதியே புத்திமதி" என்று துறவியைப் புகழ்ந்தார்.

ஆம்! அன்பர்களே வீடு அதே பழைய வீடுதான். வீட்டில் எந்தவிதமான இட விசாலமும் ஏற்படவில்லை. ஆனால் பக்தரின் மனம்தான் இப்போ விசாலமாகியுள்ளது.

தலைவலியால் அவதிப்படும்போது பல்வலி வந்தால் தலைவலி பரவாயில்லை என்று தோன்றும். வயிற்றுவலி வந்தால் இவையிரண்டும் பரவாயில்லை என்று தோன்றும். பொருளாதாரத்திலும், சாப்பாட்டுக்கும் கஷ்டம் வரும்போதெல்லாம், தன்னைவிட தன் தகுதிக்கும் அந்தஸ்துக்கும் குறைந்தவனை நினைத்தால் நமது கஷ்டம் பரவாயில்லை என்று தோன்றும். இதற்கெல்லாம் பொறுமையும் தன்னடக்கமும் தெய்வ நம்பிக்கையும் வேண்டும்.

*மகிழ்ச்சி நமக்குச் சொந்தமானது; ஆஸ்தி அப்படியல்ல.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருச்சதகம்

(தொடர்ச்சி...

## பக்திவைராக்கிய விசித்திரம்

(திருப்பெருந்துறையிலருளிச் செய்யப்பட்டது)

மறைந்த

– சங்கநூற் செல்வர் பண்டிதர் சு. அருளம்பலவனார் அவர்கள் –

(யாழ்ப்பாணம் – காரைநகர்)

## 05. கைம்மாறு கொடுத்தல்

45. இருகை யானையை யொத்திருந் தென்னுளக்
கருவை யான்கண்டி லேன்கண்ட தெவ்வமே
வருக வென்று பணித்தனை வானுளோர்க்
கொருவ னேகிற்றி லேன்கிற்ப னுண்ணவே.

**ப-ரை:**

வானுளோர்க்கு ஒருவனே- விண்ணுலகத்திலுள்ள தேவர்களுக்கும் ஒப்பற்ற முழுமுதலே, யான் இரு கை யானையை ஒத்து இருந்து- யான் இரண்டு கைகளையுடைய யானையை ஒத்து உயிர் வாழ்ந்திருந்து, என உள கருவை கண்டிலேன்- அதனால் என் உள்ளத்தின்கணுள்ள முதற் பொருளாகிய உன்னை அறியப்பெற்றிலேன்; கண்டது எவ்வமே- என உயிர் வாழ்வில் யான் கண்டது துன்பமேயாகும்; வருக என்று பணித்தனை- நின்னைக் காணும் முயற்சியில் ஈடுபடாத என்னை வருக என்று ஆதரவோடு அழைத்து ஆட்கொண்டருளி னாய்; கிற்றிலேன்- அங்ஙனம் பேரருள் செய்த நினக்கு யாதும் கைம்மாறு செய்யும் ஆற்ற லில்லேன்; உண்ணவே கிற்பன்- ஆயினும் அவ்வருளாரமுதை நுகர ஆற்றலுள்ளேன்.

வானுளோர்க்கு ஒருவனே, யான் இருகையையுடைய யானையை ஒத்து உலகத்தில் வாழ்ந்திருந்து என் உள்ளத்துள்ள முதற்பொருளாயுள்ள நின்னை அறிந்திலேன்; என் வாழ்க் கையிற் கண்டது துன்பமே; நின்னைக் காணும் முயற்சியில் ஈடுபடாத என்னை இங்கே வருகவென்று ஆதரவோடு அழைத்து ஆட்கொண்டருளினை; அங்ஙனம் செய்த நினக்கு யாதும் கைம்மாறு செய்யும் ஆற்றலில்லேன்; ஆயினும் அவ்வருளாரமுதத்தை நுகர ஆற்றலுள் ளேன் என்பதாம்.

இருகையானை- இல்பொருளுவமை. அடிகள் தமக்கு இருகை யானையை உவமான மாகக் கூறியது உடலுறுதியும் உள்ளவுறுதியும் பெற்று அதிகாரத்தில் இருந்தமைபற்றியாகும். அதனால் தமது உள்ளக்கருவாகிய முழு முதல்வனை அறியமாட்டாமையின் "என்னுள்ளக் கருவைக் கண்டிலேன்" என வருந்திக் கூறினார். அவ்வதிகார வாழ்வில் இருந்தபோதிலும் பின்னர் அவர் கண்டது இடையிடை மிகுதியுமுண்டாகிய துன்பமேயாதலின் "கண்டது எவ்வமே" என்றார். எவ்வம்- துன்பம். "யானுற்ற வெவ்வ முரைப்பின்" கலி 146:36. இனி, இருகை யானையை ஒத்து உளக்கருவை கண்டிலேன் என்பதனால் அடிகள் பேருணவினர் எனவும், பேருடலினர் எனவும், கருவுருவினர் எனவும், தம் உள்ளக் கருவைக் காணும் முயற்சி யின்றி அதற்கு மாறுபட்ட நெறியிற் செல்பவர் எனவும் கூறுவாருமுளர். அதற்கு, அடிகள்

கீழே விழுந்தவன் விழுவதற்குப் பயப்படத் தேவையில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரலாற்று நூலினுள்ளும் அடிகள் திருவாக்கினுள்ளும் ஆதாரமின்மையின் அவ்வாறு கூறுதல் பொருந்தாதென்க.

வருகவென்றது நின்னைக் காணும் முயற்சியில் ஈடுபடாதிருக்கவும் அதனைப் பொருட் டாக எண்ணாது தம்மை அருண்மிகுதியால் ஆதரவுடன் அழைத்தமையைக் குறிப்பதாகும். பணித்தல்- அழைத்தல் ஆட்கொள்ளல்.

வானுளோர்க்கும் என உம்மை விரிக்க. மண்ணுளோர்க்கும் பாதாளத்தார்க்குமின்றி வானுளோர்க்கும் எனப் பொருள் படுதலால் உம்மை எச்சவும்மை. வானுளோரைக் கூறியது துன்பவுலகினரிலும் இன்பதுன்பவுலகினரிலும் வானுளோர் இன்பவுலகினர்பற்றியென்க. "விண் ணோர் முழுமுதல் பாதாளத்தார் வித்து மண்ணோர் மருந்து" (தென்19) என அடிகள் பிறி தோரிடத்துக் கூறியிருத்தலும் அறியத்தக்கது.

கிற்றிலேன் என்பது தன்னைத் தாம் அறியாதிருக்கவும் வலிய வந்து ஆதரவுடன் அழைத்து ஆட்கொண்டருளிய இறைவனுக்குக் கைம்மாறாக ஒன்றுஞ் செய்யும் ஆற்றலில்லா திருத்தலைக் குறிப்பதாகும்.

"அன்றே யென்றன் ஆவியும் உடலும் உடமையெல்லாமுங்
குன்றே யனையாய் எனையாட் கொண்ட போதே கொண்டிலையோ" குழை7

எனவும்,

"தந்ததுன் றன்னைக் கொண்டதென் றன்னை" கோயிற்10

எனவும் அடிகள் பிறவிடங்களில் அருளிச் செய்தலால் தாமே இறைவனுக்கு அடிமையான இடத்து இறைவனுக்குக் கைம்மாறாகக் கொடுத்தற்குப் பிறிது எப்பொருளுமின்மைபற்றி வருந்துவதே கிற்றிலேன் என்பதன் உள்ளுறைப் பொருளாகும்.

உண்ணக்கிற்பன் என்றது, "அந்தமொன்றில்லா ஆனந்தம் பெற்றேன்" என அடிகள் கூறுமுகத்தால் இறைவனது அருளாமுதத்தை உண்ணுதற்கு ஆற்றலுள்ளேன் என்றவாறாம்.

இதன்கண், கிற்றிலேன் என்பதனால் கைம்மாறு கொடுக்க இயலாது வருந்தும் அடி களின் உள்ளக்கருத்து வெளிப்படுதலாற் கைம்மாறு கொடுத்தல் எண்ணும் பதிக நுதலிய பொருள் போந்தவாறு காண்க. 41

46. உண்டொர் ஒண்பொருள் என்றுணர் வார்க்கெலாம்
பெண்டிர் ஆண்அலி யென்றறி யொண்கிலை
தொண்ட னேற்குள்ள வாவந்து தோன்றினாய்
கண்டுங் கண்டிலேன் என்னகண் மாயமே.

**ப-ரை:**

ஓர் ஒண்பொருள் உண்டு என்று உணர்வார்க்கு எல்லாம் ஒரு சிறந்த முழுமுதற் பொருள் அழிவிலதாக என்றும் உள்ளது என்று பொதுவகையால் அறியும் அன்பர்களுக் கெல்லாம், பெண்டிர் ஆண் அலி என்று அறிய ஒண்கிலை- அம்முழுமுதற் பொருள் பெண்ணோ ஆணோ அலியோ இன்னது எனத் துணிந்து அறியமுடியாத நிலையில் உள் ளனை; அங்ஙனமாக, தொண்டனேற்கு உள்ளவா வந்து தோன்றினாய்- அடிமையாகிய எனக்கு நின் உண்மைத் தன்மை இருந்தவாறு வலிய எழுந்தருளி வந்து காட்சி தந்தருளினாய்;

*ஒவ்வொரு மலையும் பள்ளத்தாக்கைக் கொண்டுள்ளது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டும் கண்டிலேன்- அவ்வுண்மை இயல்பை நீ காட்டக் கண்டிருந்தும் இப்பொழுது காணாதவனாயினேன்; என்ன கண் மாயம்- இஃதென்னை கண்ணை மயக்கிய மாயவித்தை.

ஒரு சிறந்த முழுமுதற் பொருள் அழிவிலதாக என்றும் உள்ளது என்று பொதுவகை யான் அறியும் அன்பர்களுக்கெல்லாம் பெண்ணோ ஆணோ அலியோ இன்னதெனத் துணிந்து அறியமுடியாத நிலையில் உள்ளனை; அங்ஙனமாகவும் அடியேனுக்கு நின் உண்மைத் தன்மை இருந்தவாறு வலிய எழுந்தருளிவந்து காட்சி கொடுத்தருளினாய்; அவ்வுண்மை இயல்பை நீ காட்டக் கண்டிருந்தும் இப்பொழுது காணாதவனாயினேன்; இஃதென்னை கண்ணை மயக்கும் மாயவித்தை என்பதாம்.

ஓர் என்பது ஓர் எனச் செய்யுள் விகாரத்தாற் குறுகியது. "அண்டமார் இருளூடு கலந்து உம்பர், உண்டு போலு மொர்ரொண்சுடர்" எனத் தேவாரத்து (நாவு) வருதலும் காண்க. பொருள் ஒன்று உண்டு எனப் பொதுவகையால் உணரும் அன்பர்கள் அப்பொருள் பெண்ணோ ஆணோ அலியோ என்று இத்தன்மைத்து என அறிய முடியாத நிலையில் இருக்கின்றனர்.

"ஆணோ அலியோ அரிவையோ என்றிருவர்
காணாக் கடவுள்" திருப்பொன் 5.

என இத் திருவாசகத்தும்,

"ஆணலார் பெண்ணு மல்லார் அதிகைவீ ரட்டனாரே"
நாவு 27:8.

"பெண்ணொ டாணென்று பேசற் கரியவன்" நாவு 161:8. எனத் தேவாரத்தும் வருவன காண்க. அங்ஙனம் இருத்தல் அப்பொருள் இத்தன்மைத்தெனச் சுட்டியுணரப்படும் #பிரமேயப் பொருளாகாது அப் பிரமேயப் பொருளாயிருத்தல் பற்றியாகும். அங்ஙனமாயின் அதனை அறியுமாறென்னையெனின் அவனருளே கண்ணாகக் காட்டிற் காணலாமென்பது. பெண்டிர் என்பது பெண் என்னும் பொருளில் வந்தது. இனி, பெண்டிர் ஆண் அலி என்றது அவன் அவள் அவர் என்னும் முற்கூற்றுப் பிரபஞ்சத்தைக் குறிப்பதாகும். அலி என்பது ஆணுமல்லதாய்ப் பெண்ணுமல்லதாய் அமைந்ததொரு பிறப்பாயினும் அது இங்கே அஃறிணைப் பொருளைக் குறித்து நின்றது. சித்தும் அசித்துமாகிய பிரபஞ்சங்கள் முழுவதும் இறைவனது சர்வவியாபகத்துள் அடங்கி ஒன்றுபட்டு நிற்றலின் இறைவன் எல்லாமாய் அல்லதுமாய் நிற்பானாயினன். அவ்வுண்மையை இறைவனருளாலன்றி அறிதல் கூடாமையின் "பெண்டிர் ஆணலி யென்றறி யொண்கிலை" என்றார். எனினுமமையும் அறிய என்னும் வினையெச்சத்தீறு கெட்டது. உண்மை ஞானிகளுக்கும் பெண் ஆண் அலி என்று அறிய வொண்ணாத நீ, தொண்டனாகிய எனக்கு நின் உண்மைத்தன்மை இன்னது என உள்ளவாறு வலிய வந்து காட்டியருளினை என்பார் "தொண்டனேற் குள்ள வந்து தோன்றினாய்" என்றார். உள்ளவாறு என்பது உள்ளவா என ஈறுகெட்டது. "உள்ளவா காணவந்தருளாய்" (கோயிற் 1) எனப் பிறாண்டு வருதலும் காண்க. உள்ளவாறாவது உண்மை இயல்பு இருந்தபடி.

இறைவன் தனது உண்மை இயல்பு இருந்தபடி அடிகள் உணருமாறு தோன்றியது ஞானாசாரிய வடிவிலாகும். அவ்வடிவமே இறைவனுக்கு என்றுமுள்ள வடிவமோவெனின் எல்லாமா யல்லதுமாய் எங்குமுள்ள இறைவன் தகுதியுடைய உயிர்களுக்கு அருள்செய்ய

*தோல்விகளிடம் வழிகேட்டுத்தான் வெற்றியின் வாசற்படிக்கு வந்துசேரமுடியும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டி ஒவ்வொரு திருமேனி கொண்டருளுவான். அத்திருமேனிகளுள் அடிகளுக்கு அருள் செய்ய எழுந்தருளி வந்த ஞானாசாரிய வடிவுமொன்றாகும். இறைவன் கொண்டருளுந் திருமேனி அளவுக்குட்பட்டதாகலின் அதுவே இறைவனது உண்மையியல்பு எனல் அமையாது. அதனால் எல்லாம் வல்ல இறைவன் தனது ஆற்றலால் ஆங்காங்கு தோன்றி அருள் செய் வன் என்பதே உண்மை இயல்பாகும்.

"ஆட்பாலவர்க் கருளும் வண்ணமும் ஆதிமாண்பும்
கேட்பான் புகில் அளவில்லை கிளக்க வேண்டா" தே.312:4.

என ஆளுடையபிள்ளையார் அருளிய திருவாக்குங் காண்க.

வந்து என்பதன் ஆற்றலால் வலிய வந்து என உரைக்கப்பட்டது. "தானேவந் தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும், வான்வார் கழல்" (திருவெம் 6) என வருதலும் காண்க. இறைவனது அருட்டிருமேனியைக் கண்டுகொண்டிருந்த அடிகள் "நலமலி தில்லைப் பொதுவினில் வருகென அருளிச் செய்து இறைவன் மறைந்த விடத்துக் காணப்பெறாமையின் "கண்டுங் கண்டிலேன்" என்றார். இறைவன் அருட்டிருமேனி காட்டி ஆட்கொண்டருளி உடனே மறைந்தமை அடிகளின் கண்ணை மயக்கிய மாய வித்தை போறலின் "என்கண மாயமே" என்றார். "ஆய்ந்தே யிருப்பார் போய் ஆரூர் புக்கார் அண்ணலார் செய்கின்ற கண்மாயமே" (நாவு 238:5) எனத் தேவாரத்து வருதலும் காண்க. இது மருட்கை பற்றிய வியப்பாகும்.

இதன்கண், கண்டும் கண்டிலேன் என்றதனால் இறைவன் காட்சியை இழந்த அடிகள் கைம்மாறு கொடுத்தல் யாங்ஙனம் என வருந்துதல் புலப்படுதலின் கைம்மாறு கொடுத்தல் என்னும் ஐந்தாம்பத்து நுதலிய பொருள் போந்தவாறு காண்க. 42

(தொடரும்...

## ஐயம் தீர்ப்பாய் முருகா

ஆர்ப்பரிக்கும் அலைகடல் ஓரம் அமர்ந்திருக்கும் முருகா
ஆடற் கலையோன் அருமந்த புதல்வா
இசை கொண்டு நடமாடும் மயிலேறும் வீரா
ஈசனுக்கு உபதேசித்த குருவான வேலா
உலகைச் சுற்றி மயிலேறி வந்தே உறுதியாய் நின்றவா
ஊர் போற்றும் வேல் ஒன்று கையேந்தும் குமரா
எல்லோர்க்கும் எல்லாமும் தந்துவரும் துணைவா
ஏழைக்கிரங்கி ஏற்றம் தரும் கந்தா
ஐயம் கொண்ட மனிதர்க்கு அனைத்தும் தீர்க்கும் ஐயா
ஒலியெலாம் நீயே என்று ஊர்போற்றும் சோதரா
ஓசையில் உலகைக் காக்கும் ஓங்கார மைந்தா
ஔவைக் குபதேசித்து அறிவுச் சுடர் தந்தவா
சந்நிதி வேலவா உன் பாதமே சரணம் சரணம்.

-பொ. பாலேஸ்வரன்-

கோபப்பட்டு வென்றுவிட்டாய் என்றால் உன் கோபம் பெரிதென்று அர்த்தமல்ல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலய வழிபாடு

– திரு சி. பரணீதரன் அவர்கள் –

21ம் நூற்றாண்டில்த்தான் பிரபஞ்சம் பற்றிய பல அடிப்படை உண்மைகள் விஞ்ஞான ரீதியாகக் கண்டுபிடிக்க விஞ்ஞானிகளால் முடிந்தது. இன்னமும் பிரபஞ்ச ஆராய்ச்சி தொடர்கின்றது. ஆனால் மிகவும் தெளிவாக மாணிக்கவாசக சுவாமிகள் திருவாசகத்தின் திருவண்டப் பகுதியில் இந்த அற்புத உண்மைகளை வெளிப்படுத்தியுள்ளார். எவ்வாறிருந்த போதும் பிரபஞ்சத்தின் எல்லாக் கிரகங்களிலும் மனிதன் வாழ முடியாது. மனிதன் வாழ சுத்தமான காற்றும் நீரும் வேண்டும். குறிப்பிட்ட அமுக்கம், குறித்த வெப்பநிலை வேண்டும். இதில் சிறு மாற்றம் ஏற்பட்டாலும் மனித இனம் அழிந்துவிடும். எனவே மனிதன் வாழக்கூடிய சூழல் அவசியம்.

இவ்வாறுதான் ஆன்மாக்களும் புவியில் எல்லா இடங்களிலும் லயப்பட முடியாது. எனவேதான் ஆன்மாக்கள் லயப்படும் இடங்களை ஆலயங்கள் என்றார்கள்.

சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற வழிகளில் சரியைத் தொண்டிற்கும், கிரியைத் தொண்டிற்கும் ஆலயங்கள் மிகமிக அவசியம். எனினும் யோகம், ஞானம் கைவரப் பெற்றவர்களும் ஆலயங்களைப் பாடி வழிபட்டே அற்புதங்களைச் செய்தனர். தேவாரத் திருப்பதிகங்களில் சம் பந்தர், சுந்தரர், அப்பர் சுவாமிகள் தமது ஒவ்வொரு பதிகங்களிலும் அவ்வவ் ஆலயத்துள் உறைகின்ற இறைவனையே இறைஞ்சி வேண்டுகின்றனர். அப்பர் சுவாமிகள் ஆலயங்களின் சிறப்பை விளித்துப் பாடியுள்ளார். அதாவது, திருஅங்கமாலைத் திருப்பதிகத்தில்

"ஆக்கையாற் பயனென்- அரன் கோயில் வலம் வந்து
பூக்கையாலட்டிப் போற்றியென்னாதவிவ் ஆக்கையாற் பயனென்"
"கால்களாற் பயனென் கறைகண்டன் உறைகோயில்
கோலக் கோபுரக் கோகரணம் சூழாக் கால்களாற் பயனென்"
"உற்றாராருளரோ - உயிர்கொண்டுபோம் பொழுது
குற்றாலத் துறைகூத்தனல்லால் நமக்கு உற்றார் ஆருளரோ"

என்று பாடியுள்ளார். அதாவது ஆலய வழிபாடு செய்யாவிடின் இவ்வுடம்பு எடுத்ததன் பயன் என்ன என்று கேட்கிறார். மேலும் எமது இல்லற வாழ்விற்கும் ஆலயங்களே நிலைக்களன்களாக விளங்குகின்றன. எமது சமூகக் கட்டமைப்புகள் கூட ஆலயங்களை மையமாக வைத்தே அமைந்துள்ளன. ஊர்கூடி வாழ ஆலயம் அவசியம். இதனால்த்தான் நம்மவர்கள் தாம் புலம்பெயர்ந்த நாடுகளில் கூட ஆலயங்களை அமைத்து கும்பாபிசேகம் செய்கின்றனர். வாழ்க்கை நெறிகளை எமக்கு எழுதி வைத்த பெரும் பெண்புலவர் ஔவைப் பிராட்டியார் இதனையே உலக நீதியில் குறிப்பிடுகையில்,

"கோயில் இல்லாஊரில் குடியிருக்கவேண்டாம்
மற்றுநிகர் இல்லாத வள்ளிபங்கன்
மயிலேறும் பெருமானை வாழ்த்தாய் நெஞ்சே"

*இரக்கப்படுபவன் ஏமாந்து போகலாம் ஆனால் தாழ்ந்து போவதில்லை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று பாடியுள்ளார். எனவே கோயில் அமையாத ஊர் ஊரே அல்ல. இதனையேதான் நாவுக்கரசர் சுவாமிகளும்,

"திருக்கோயில் இல்லாததிருவி லூரும்
திருவெண்ணீறணியாத திருவி லூரும்
பருக்கோடிப் பத்திமையாற் பாடா வூரும்
பாங்கினொடு பலதளிக மில்லா வூரும்
விருப்போடு வெண்சங்கம் ஊதாவூரும்
விதானமும் வெண்கொடியு மில்லாவூரும்
அருப்போடு மலர் பறித்திட் டுண்ணா வூரும்
அவை யெல்லாம் ஊரல்ல அடவி காடே"

என்றார். எனவே திருக்கோவில் இல்லாத ஊர் ஊரல்ல அது காடு என்பதாகும். பார்க்கும் இடமெங்கும் பரம்பொருளின் ஆற்றல் நீக்கமற நிறைந்திருக்கும் ஆலயங்கள் எமது வாழ்வோடு பின்னிப்பிணைந்துள்ளன. நித்தமும் நாம் கோயிலுக்குச் செல்லவேண்டும். அங்கே தொண்டுகள் பல செய்திட வேண்டும். பூமாலை புனைந்தேத்தி இறைவனைப் பாட வேண்டும்.

நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சேநீவா
நித்தலும் எம்பிரானுடையகோயில் புக்குப்
புலர்வதன் முன் அலகிட்டு மெழுக்கு மிட்டுப்
பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்துபாடித்
தலையாரக் கும்பிட்டு கூத்து மாடிச்
சங்கரா சயபோற்றி போற்றி என்றும்
அலைபுனல்சேர் செஞ்சடையெம் ஆதியென்றும்
ஆரூரா என்றென்றே அலரா நில்லே.

மேலும் பேரவலப்பட்டு நின்ற எமது மக்களுக்கும் ஆற்றுப்பட ஆலயங்களே உதவின. பிணி கூடி மக்களெல்லாம் ஐயா! என்றும் அரனே! என்றும் முருகா! என்றும் அலறியதும், ஆறுதலடைந்ததும் ஆலயங்களிலேயே. எனவே உளவியல் ரீதியான ஆற்றுப்படுத்தலுக்கும் ஆலயங்களே அவசியமாயின.

எமது சமயத்தில் ஆலயங்களை ஆகமம் சார்ந்தவை என்றும் ஆகமம் சாராதவை என்றும் வகுத்துள்ளார்கள். அதாவது கிராமிய வழிபாடு என்பது எமது வாழ்வியலில் ஒன்றிணைந்தது. ஒவ்வொரு கிராமமும் ஒவ்வொரு ஆலயத்தை மையமாகக் கொண்டே விளங்குகின்றன. எனவே மக்கள் கிராமியக் கோயில்களை அமைக்கும்போது ஆகம விதிப் படி அமைக்க வேண்டும் என்பது அவசியமில்லை. ஆகமம் சாராத எமது செல்வச்சந்நிதியில் பலர் ஞானம் பெற்றனர். இலங்கையின் சோல்பரி யாப்பினை வரைந்த சோல்பரியின் மகன்கூட சந்தஸ்வாமி என்ற பெயர் கொண்டு செல்வச்சந்நிதியில் வழிபாடியற்றினார்.

எமது வாழ்வியலில் கோயில்களில் பூசை புரிவதற்கென்றே ஒரு குலத்தையும் தோற்று வித்து அவர்களுக்கு அந்தணர் என்றும் பெயரும் இட்டனர். ஆலயங்களில் இவ்வந்தணர்கள் மறைஓத வேண்டும்.

*வெற்றி வந்தால் பணிவு அவசியம். தோல்வி வந்தால் பொறுமை அவசியம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"காலையும் மாலையும் நான் மறைஓதா
அந்தணர் என்போர் அனைவரும் பதரே"

என்றார் ஔவையார். இவ்வாறு ஆலய வழிபாடு எம் வாழ்வியலோடு இணைந்தது. தன் வாழ்வில் இன்னல் வந்துற்றபோது செம்மனச்செல்வியும் அழைத்தது திருப்பெருந்துறை யுறை சிவனே என்றுதானே? எனவே எம் வாழ்வில் பிரச்சினைகளைப் போக்கவும், அன்பாகவும், ஒற்றுமையாகவும், மகிழ்ச்சியாகவும் வாழவும் கலைகளையும், அறத்தையும், அறிவையும் பெருக்கவும் ஆலய வழிபாடு அவசியம். எமது கிராமங்கள்தோறும் உள்ள கோயில்களில் அருள் பெருகுகின்றது. அவற்றை நாம்தான் கையேந்திப் பெறவேண்டும். நேரம் வந்தெய்தி திருக்கைலாயத்திற்கு இப்பூவுலகைவிட்டுச் செல்ல ஔவையார் ஆயத்தமானபோது பிள்ளை யார் தடுத்து தனக்கான ஆலய வழிபாட்டை நிறைவு செய் என்று அருளி ஆலய வழிபாட்டின் அவசியத்தை விநாயகப் பெருமானே உணர வைத்துள்ளார்.

எமது கோயில் அமைப்புக்கள் பற்றி இன்று விஞ்ஞானிகள் அதிசயிக்கின்றனர். அதாவது திருநள்ளாறு கோயில் கோபுரத்திற்கு மேலாக சனிக்கிரகத்திலிருந்து வரும் கதிர்கள் விழுகின்றன என்பது ஆராய்ச்சியில் தெரியவந்திருக்கின்றது. இதனால் இக்கோயிலின் நேர்மேலாகச் செல்லும் செயற்கைக் கோள்கள் மூன்று விநாடிகள் செயலிழக்கின்றனவாம். மேலும் கட்டடக் கலைக்கும் கோயில்கள் முன்னோடியாக அமைந்திருந்தன. கோயில் எனும் போதே தஞ்சைப் பெருங் கோயிலைக் கட்டிய இராஜராஜனுக்குத் தனியிடம் உண்டு. உலகம் வியக்கும் கட்டடக் கலையை ஐரோப்பாவில் கட்டடங்கள் உருவாகுமுன்னரே அவன் தோற்றுவித்தான். இன்றும் இது அதிசயமாக விளங்குகின்றது.

இறைவனே ஆலய தரிசனம் செய்ய விரும்பியதாக புராணங்கள் கூறுகின்றன. அதாவது திருக்காளத்தி தலத்தைக் கந்தபுராணத்தில் முருகன் வழிபட்டதாக ஒரு குறிப்பு வருகின்றது. இவ்வாறே சிவபெருமான் திருவவதாரம் எடுத்து தலங்களை வழிபட்டதாக புராணங்கள் கூறுகின்றன.

திருநாமம் அஞ்செழுத்தும் செப்பாராகில்
தீவண்ணர் திறமொருகால் பேசாராகில்
ஒருகாலுந் திருக்கோயில் சூழா ராகில்
உண்பதன் முன் மலர்பறித்திட் டுண்ணா ராகில்
அருநோய்கள் கெடவெண்ணீறு அணியாராகில்
அளியற்றார் பிறந்தரா றேதோ வென்னில்
பெருநோய்கள் மகிநலியப் பெயர்த்துஞ் செத்துப்
பிறப்பதற்கே தொழிலாகி இறக்கின்றாரே.

எனும் பாடல் திருக்கோயில் வலம் வருதலின் அவசியத்தைக் கூறுகின்றது. அவ்வாறே கோயில் கட்டுதல் கோடி புண்ணியம் ஆகின்றது.

புல்லினால் ஒன்றுகோடி
புதுமண்ணால் பத்துக் கோடி
செல்லுமாங் காலம் தன்னில்
செங்கலால் பதினாயிரம் கோடி
அல்லினும் குழலாய் கேளாய்

*பலவீனமான மனங்களே சோம்பலிடம் தஞ்சம் அடைகின்றன.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலய மடங்களெல்லாம் கல்லினால் கட்டுவோர்கள்
கயிலைவிட்டு அகலார் மாதோ.

இவ்வாறு வரலாற்றுக்கு முன்தொட்டு கோயில் கட்டி வாழ்ந்த எம்மினம் உலகுக்கே ஒளியைத் தந்தது. சுயகௌரவம் மதிக்கப்படவேண்டும். மனிதர்கள் கோயிலைத்தவிர எதற்கும் பணியத் தேவையில்லை. மனிதன் சுதந்திரமாகவே பிறக்கின்றான். எம்பெருமான் உறைகின்ற கோயிலிற்குப் பணி செய்வோர் சமூகத்திற்கே தொண்டு செய்வோராவார். சங்ககாலப் புலவரொருவர்,

"மன்னுபெருமமகாதேவன் கோயிலன்றி - நின்
மணி முடி தாழற்க" என்று பாடினார். நாமும் எம்பிரான் பணி செய்து தலைநிமிர்ந்து வாழ்வோம்.

---

## நல்வாழ்வு வாழ வழிகாட்டும் இந்துமதம்

இந்துமதம் ஒரு பழம்பெரும் விருட்சம். அதன் வேர் ஆழமானது. அடிமரம் மிகவும் உறுதியானது அதன் நிழலில் இன்றும் ஏராளமானவர்கள் வந்து தங்கி அமைதியை அடைகிறார்கள். மற்ற மதங்கள் தினந்தோறும் செய்யவேண்டிய கடமைகளை மட்டுமே உணர்த்துகின்றன. ஆனால் இந்துமதமோ வாழ்நாள் முழுவதும் நமக்கு நல்வழி காட்டுவதோடு, தொடரப்போகும் வாழ்க்கைக்கும் வழிகாட்டுகிறது.

மனிதனைப் படிப்படியாக முன்னேற்றி சிறந்த மனிதனாக மாற்ற இந்து மதத்தின் தத்துவங்கள் பெரிதும் பயன்படுகின்றன என்று விஞ்ஞானி டார்வின் சொல்லுகிறார். இது நமது மதத்தின் தனிச்சிறப்பாகும். பாவம் செய்ய அஞ்ச வேண்டும். பாவத்தைக் கண்டு அஞ்சுங்கள் என்று சொல்லுகிறது இந்துமதம். கண்ணை மூடித் தவம் செய்தால் பாவம் நீங்கிவிடும் என்று இந்துமதம் சொல்லவில்லை. மனமாற்றம் மிகமிக அவசியம். அதாவது மனிதன் செய்த பாவத்துக்கு வருந்துவதுதான் பிராயச்சித்தம். அதுதான் உண்மையான விமோசனம் என்கிறது இந்துமதம்.

மனிதனின் சுபாவம் அவனிடம் படிந்துள்ள நல்ல பண்புகள், மனத்தின் கட்டுப்பாடுகள் ஆகியவை இந்து மதத்தின் முக்கியமான குறியீடுகளாக விளங்கி வருகின்றன. மேலும் நல்லவனாக வாழ வழிகாட்டுவதே இந்துமதத்தின் கொள்கை. இந்த உலகத்தில் எப்படி வாழ வேண்டும் என்பதை இந்துமதம் எடுத்துச் சொல்லுகிறது. "நீ செய்யும் காரியத்தை முழுமனத்துடன் ஈடுபட்டுச் செய்வாயாக, அதனால் கிடைக்கக்கூடிய வெற்றியைப்பற்றியோ தோல்வியைக் குறித்தோ கவலைப்படாதே, முழு மனத்துடன் உழைப்பதே உனக்குக் கிடைக்கும் மிகப்பெரிய பலனாகும்" என்று பகவத்கீதை கூறுகிறது. இதுவும் இந்துமதத்தின் தனிச் சிறப்பாகும். இது உயிர் வாழும் எல்லோருக்கும் பொதுவானது. பிற மதங்களில் இந்து மதத்தின் சில பண்புகளைக் காணலாம். ஆனால் இந்து மதத்தின் முழுமையை வேறு மதங்களில் காணமுடியாது. இவைகளே இந்துமதத்தின் தனிச்சிறப்பாகும். பெரியோர்களுடன் கூடினால் அவர்கள் நம்மைப் படிப்படியாக மனிதனாக மாற்றுவார்கள். மெய்ஞானமூட்டிப் பிறவியை போக்கிக்கொள்ளும் வன்மையூட்டுவர். எனவே அத்தகைய ஆற்றலுடைய பெரியோர்களின் நட்பை நாம் தேடியும், நாடியும் அடைந்து வாழ்வதே நலமாகும் என்றார் திருமூலர். மேலும் இந்த உலகத்தில் எப்படி வாழவேண்டும் என்பதை இந்துமதம் எடுத்துச் சொல்கிறது.

இந்துமதம் என்பது ஒரு மதம் என்பதைவிட அது ஒரு வாழ்க்கை முறை என்பதே சரியானது ஆகும். நமக்கு நல்ல எண்ணங்களும் அதற்குரிய நல்ல முயற்சிகளும் இருந்தால் நாம் நமது எதிர்காலத்தை நல்லவிதமாக உருவாக்கிக் கொள்ளலாம் எனக் கூறுவதும் இந்துமதம்தான். எனவே மதத்தில் சிறந்த மதம் இந்துமதமாகும்.

-வி. செல்வரத்தினம்-

உன்னதமான ஒவ்வொரு வேலையும் முதலில் முடியாததாகவே தோன்றும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[தொடர்ச்சி....

# உமாபதி சிவம்

அருளிய

# திருவருட்பயன்



[விரிவான பொருளுரையும் தெளிவுரையும்]

முனைவர் ஆ. ஆனந்தராசன்

## 65. எடுத்துச் சுமப்பான்!

கிடைக்கத் தகுமே நற் கேண்மையார்க்கு அல்லால்
எடுத்துச் சுமப்பானை இன்று.

**பொருள்:**

இறைவன், தம் செயலற்று நிற்கும் அன்பரை எவ்விடத்தும் தாங்கிக் காப்பான்; அவரைத் தன் மேல் வைத்துச் சுமந்து செல்லும் துணைவனாய் இருப்பான். இப்படிப்பட்ட துணைவனை ஏனையோர் பெறுதல் கூடுமோ?

**சொற்பொருள்:**

இன்று- இம்முத்திக் காலத்தில், எடுத்துச் சுமப்பானை- தம் செயல் அற்று நிற்கும் அன்பரை எடுத்துத் தன்மேல் வைத்துச் சுமந்து செல்கின்ற இறைவனாகிய துணைவனை, கிடைக்க- பெறுவது, நற்கேண்மையார்க்கு அல்லால்- அவ் அன்பருக்கன்றி, தகுமே?- மற்றவர்க்குக் கூடுமோ?

**விளக்கம்:**

**நற்கேண்மையார்:**

திருவருளை மழையோடு ஒப்பிடலாம். மழை மேடு பள்ளம் என்று பாராமல் எவ்விடத்திலும் பெய்கிறது. ஆனால் மேட்டு நிலத்திலுள்ள பாறை அந்த மழை நீரைப் பற்றிப்பிடித்து வைத்துக் கொள்வதில்லை. மழை பெய்து ஓய்ந்த சிறிது நேரத்தில் அந்தப் பாறையைப் பார்த்தால் அதன்மீது ஒரு சொட்டு மழைநீர் இருக்காது. அதில் மழை பெய்ததற்கான அறிகுறியே தென்படாது. ஆனால், மேட்டு நிலத்திற்குக் கீழே தரையில் உள்ள பள்ளத்தில் மழைநீர் தேங்கி நிற்பதைக் காணலாம். சில நாட்கள் சென்றாலும் அப்பள்ளத்தில் மழை பெய்ததற்கான அடையாளமாக நீர் கட்டிக் கிடக்கும்.

மக்களில் பெரும்பாலோர் பாறையைப்போல் வன்நெஞ்சப் பேதையராய் வாழ்கிறார்கள். அவர்களிடத்தில் அருள் இருந்தும் அதனைப் பற்றிக்கொள்வதில்லை. பக்குவ ஆன்மாக்களாகிய சிலரே பள்ளத்தைப்போல அருள் வெள்ளத்தைத் தம்மிடம் தேக்கி வைத்துக்கொள்கிறார்கள்.

*சொன்ன சொல்லைக் காப்பாற்றுவதை உன் கடமையாகக்கொள்; நீ உயர்வடைவாய்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவருளை முற்றாகப் பெற்ற இவர்கள் எந்நிலைமையிலும் இறைவனையே உணர்ந்து நிற்பர். "வாழினும், சாவினும், வருந்தினும் போய் வீழினும் உனது திருவடியை விடுவேன் அல்லேன்" என்ற உறுதியோடு இருப்பர். இறைவனையன்றி வேறு துணையில்லாத இவர்களையே "நற்கேண்மையார்" என்று குறிப்பிடுகிறார் நம் ஆசிரியர் உமாபதிசிவம்.

**எடுத்துச் சுமப்பான்:**

நல்ல நட்பினராகிய இவர் தம் உடல், பொருள், ஆவி அனைத்தையும் இறைவன் தன்னுடையவனாக ஏற்றுக்கொள்கிறான். இவ்வடியார்கள் மனம், மொழி, மெய்களால் யாதொரு செயல் செய்யினும், "இவர் செயலெல்லாம் என் செயல்" என்றும், "இவருக்குச் செய்தது எனக்குச் செய்ததாகும்" என்றும் கொண்டு, வினைத் துன்பம் அவரைத் தாக்காதவாறு முன்னின்று காப்பான். தம் செயலற்று, எல்லாம் இறைவன் செயல் என உணரும் இவ்வன்பர்கள் பாதகத்தைச் செய்திடினும் அதனைப் பணியாக்கி விடுவான்.

அன்பர்களின் நிலையைக் குழந்தையின் நிலையோடு ஒப்பிட்டுச் சொல்வார்கள். குழந்தைக்குத் தனக்கெனச் செயலில்லை. அது நடப்பதில்லை. அதனைச் சுமந்து கொண்டு தாய் நடக்கிறாள். அது தானே உண்பதில்லை. தாய் ஊட்டுகிறாள். நோய் வந்தால் அந்தக் குழந்தையா மருத்துவரிடம் செல்கிறது? தாய்தானே தூக்கிக் கொண்டு ஓடுகிறாள். தாயின் காலைப் பற்றிக்கொண்டு வாழும் குழந்தைக்கு என்ன கவலை? அதற்கு வேண்டியவற்றையெல்லாம் தாய் பார்த்துக் கொள்கிறாள்.

கணநேரமும் இறைவனை உள்ளத்தில் பிரியாமல் அவனைப் பற்றிக்கொண்டவர்களுக்கு இந்தக் குழந்தையின் நிலை வரும். தமக்கெனச் செயலற்ற நிலையை அவர்கள் அடைகிறார்கள். இறைவனது திருவடியைப் புகல் அடைந்துவிட்டால் அப்பால் அவர்களுக்கு ஒரு பொறுப்பும் இல்லை. இறைவனே அவர்களைத் தாங்கிக் கொள்வான். "தன் கடன் அடியேனையும் தாங்குதல்" என்ற அப்பர் பெருமானின் மொழியை இங்கே நினைத்துப் பார்க்க வேண்டும்.

இறைவன் தன்னடியார் படும் பசித் துன்பம் முதலியவற்றைப் பெறாமல் ஓடிவந்து உதவி செய்த நிகழ்ச்சிகள் பல உண்டு. சுந்தரர் திருக்குருகாவூர் செல்லும்போது பசியினாலும் நீர் வேட்கையினாலும் மிகவும் வருந்தினார். அதனை உணர்ந்த இறைவன் அவர் வரும் வழியில் குளிர் பந்தல் அமைத்துத் தண்ணீரும் பொதிசோறும் கொண்டு மறையவர் வடிவில் காத்திருந்தார். அடியவர் திருக்கூட்டத்துடன் நம்பியாரூரர் அங்கு வந்து சேர்ந்தார். அவரிடம் மறையவர் "நீர் இப்போது பசியால் வாடுகிறீர்; இதனை உண்ணும்" என்று கூறி அருளினார். அவர் அளித்த பொதி சோற்றை அடியாரும் உண்டு பசி தீர்ந்து சிறிது நேரம் கண்ணுறங்கி விடுகிறார். விழித்துப் பார்த்தபோது மறையவரும் இல்லை. தண்ணீர்ப் பந்தரும் இல்லை. இறைவன் தமக்குச் செய்த கருணையே இது என்றறிந்த சுந்தரர் "ஆவியைப் போகாமே தவிர்த்தென்னை ஆட்கொண்டாய்" என்று பெருமானைப் போற்றினார்.

நற்கேண்மையராய் ஒழுகும் அடியார்களுக்கு இறைவன் எளிவந்து அருளுதலை, இவ்வாறு பொதிசோறு சுமந்துவந்து அளித்தமை, பஞ்சம் வருத்தாது படிக்காசு தந்தமை முதலிய பல நிகழ்ச்சிகளில் வைத்து உணரலாம்.

*வானத்தில் மாளிகை கட்டு தவறில்லை. ஆனால் தரையில் அஸ்திவாரம் போடு.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்ஙனம் தம் செயலற்று நிற்கும் அடியார்களை வலிய வந்து காத்தருளும் இறைவனது எளிவந்த தன்மை இனிது புலப்படும் வகையில் "எடுத்துச் சுமப்பான்" என்ற அருமையான, பொருள் ஆழமான தொடரை அமைத்த ஆசிரியரின் திறம் எண்ணி மகிழ்தற் குரியது.

ஒரு குறிப்பு:

சரியை, கிரியை, யோகம் என்னும் மூன்றும் தவம் எனப்படும். இத்தவ நிலையில் நின்று முதிர்ச்சி பெற்றவரை,

"கேடில் புகழ் தருஞ் சரியை கிரியா யோகக் கேண்மையர்" (செ.49) என்று சிவப் பிரகாச நூலில் குறிப்பிட்டார் உமாபதிசிவம்.

இத் தவநிலையில் நின்றோர் சென்று அடைதற்குரியது ஞானநிலை. அதுவே மேலான நிலையாகும். ஞான நிலைக் கண் நின்றவரே திருவருளைச் சேர்ந்து பாசப்பற்றை அறுத்துக் கொண்டவர் ஆவர். இவரே அடியவர் என்றும், அருளாளர் என்றும் சொல்லப் பெறுகின்றனர். இவரை "நற்கேண்மையார்" என்று திருவருட்பயனில் குறிப்பிட்டார் உமாபதி சிவம்.

முன்னே காட்டியவாறு தவநெறியில் நின்றவரைக் "கேண்மையர்" என்று மட்டும் சுட்டிய ஆசிரியர், ஞானநெறியில் நின்றவரைக் குறிக்கவரும்போது "நல்" என்ற அடைமொழி சேர்த்து "நற்கேண்மையார்" எனச் சிறந்தெடுத்துக் கூறியுள்ளமை அறிதற்குரியது.

நம் ஆசிரியர் அருளை நினைப்பிக்கும் இடங்களில் "நல்" என்ற அடைமொழியைச் சேர்க்கும் இயல்பினர் என்று சொல்லலாம்.

காட்டாக, சிவப்பிரகாசத்தில் பசு இலக்கணம் கூறும் செய்யுளில் (19) உயிரை "நற்பசு வர்க்கம்" என்கிறார். உயிர்கள் திருவருள் உதவியால் மல நீக்கம் பெற்றுச் சிவத்தை அடைதற்கு உரியன. ஆதலின் "நல்" என்ற அடைமொழி சேர்த்து அவ்வாறு குறிப்பிட்டார் என்று கருதலாம்.

அவ்வாறே, இங்கும் தம் செயலற்று அருள் வயப்பட்டிருக்கும் அடியவரின் நிலைக்கு ஏற்ப அவரை "நற்கேண்மையார்" எனக் குறிப்பிட்டார் எனக் கொள்வது பொருத்தமாகும்.

## 66. அருள் நிதி

வஞ்சமுடன் ஒருவன் வைத்த நிதி கவரத்
துஞ்சினனோ? போயினனோ? சொல்.

பொருள்:

ஒருவன் வைத்துள்ள நிதியை மற்றொருவன் கள்ளமாய்க் கவர்ந்து கொள்வதற்கு, வைத்திருப்பவன் உறங்கிவிட்டானோ? அல்லது அவ்விடத்தை விட்டுப் போய்விட்டானோ? சொல்வாயாக.

சொற்பொருள்:

ஒருவன் வைத்த- ஒருவன் சேமித்து வைத்துள்ள, நிதி- பொருட் செல்வத்தை, வஞ்சமுடன் கவர- வேறொருவர் கள்ளமாய்க் கவர்ந்து கொள்வதற்கு, துஞ்சினனோ-

*அன்புதான் உன் பலவீனம் என்றால் இந்த உலகின் மிகச்சிறந்த பலசாலி நீதான்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளை வைத்திருப்பவன் உறங்கிவிட்டானோ?, போயினனோ- அல்லது அவ்விடத்தை விட்டு அகன்று போய்விட்டானோ? சொல்- சொல்வாயாக.

இக்குறட்பாவில் உள்ளதும் உவமையே. இதனைக் கொண்டு ஆசிரியர் கூறவந்த பொருளை வருவித்துக் கொள்ள வேண்டும்.

**விளக்கம்:**

**செல்வரும் திருடனும்:**

இவ்விடத்திற்குப் பொருத்தமான நிகழ்ச்சி ஒன்றைக் குறிப்பிடுவோம். இரண்டுபேர் இரயிலில் முதல் வகுப்புப் பெட்டியில் பயணம் செய்துகொண்டிருந்தார்கள். அந்தப் பெட்டியில் அவர்களைத் தவிர வேறு யாரும் இல்லை.

அவர்களில் ஒருவர் பணக்காரர். அவர் ஒரு துணிப் பையில் நிறையப் பணம் வைத்திருந்தார். இன்னொருவன் திருடன். அவரிடம் பணம் இருப்பது தெரிந்து, அதைத் திருடுவதற்காக அவன் அந்தப் பெட்டியில் ஏறியிருந்தான். அவன் திருடன் என்பது அந்தப் பணக்காரருக்குத் தெரியும்! தெரிந்தும் அவனது கண் எதிரிலேயே பையைத் திறந்து பணத்தை எண்ணிப் பார்த்தார்.

உறங்கவேண்டிய நேரம் வந்தது. முதலில் திருடன் குளியலறைக்குச் சென்று தன் உடைகளை மாற்றிக் கொண்டு வந்தான். படுக்கையில் படுத்துத் தூங்குவதுபோல நடித்தான்.

பணக்காரர் குளியலறைக்குச் சென்றார். திரும்பிவரச் சற்று நேரம் ஆயிற்று. அவர் அப்பால் போனதும் அதற்காகக் காத்திருந்த திருடன் அவரது பெட்டிகளைத் திறந்து பார்த்தான். பணப் பையைக் காணவில்லை. அவரது துணிமணிகளையெல்லாம் உதறிப் பார்த்தான். அது கிடைக்கவில்லை. அந்த மனிதர் அதைக் கையில் கொண்டு போகவில்லை. அதனால் இங்குதான் வைத்திருக்க வேண்டும். நாம் இவ்வளவு தேடியும் அது கிடைக்க வில்லையே என்று திருடன் அதிசயித்தான்.

குளியலறையிலிருந்து திரும்பி வந்த பணக்காரர் படுக்கையில் படுத்தார். அடுத்த நொடியே அவரிடமிருந்து குறட்டையொலி எழுந்தது. இப்பொழுது அந்தத் திருடன் மீண்டும் தேடித் துருவிப் பார்த்தான். அவனுக்கு வேண்டியது கிடைக்கவில்லை.

திருடன் இரவு முழுவதும் தூங்கவே இல்லை. பொழுது விடிந்தது. பணக்காரர் கண் விழித்துக் கொண்டார். திருடன் அவரைப் பார்த்து, ஐயா, நான் திருடன் என்பதை ஒப்புக் கொள்கிறேன். எனக்கு ஒன்று தெரியவேண்டும். உங்கள் பணப்பையை எங்கே வைத்திருக்கிறீர்கள்? என்று கேட்டான். உடனே பணக்காரர் சிரித்துக்கொண்டே திருடனின் தலையணைக்கு அடியிலிருந்து பணப்பையை எடுத்து "இங்கேதான் வைத்திருந்தேன்" என்றார்.

இந்தக் கதையில் திருடன் பணத்தைக் கைப்பற்றக் காத்திருந்தான். அதற்கு வாய்ப்பாக அந்தப் பணக்காரரும் பணத்தை அங்கே வைத்துவிட்டு வெளியே போய் வந்தார். அடுத்ததாக, நன்றாகத் தூங்கியும் போனார். ஆனாலும், அவருடைய சாதுரியமான ஏற்பாட்டினால் பணத்தை அவன் திருட முடியாமற் போயிற்று.

பொதுவாக, இச் செய்யுளில் கூறியுள்ளபடியே களவு நடைபெறுவது கண்கூடு. உடைமைக்கு உரியோர் உறங்கிய நேரம் பார்த்து உள்ளே புகுந்து திருடிச் செல்வார்கள்.

*உனக்கு மன அமைதி வேண்டுமானால் யாருடைய குறையையும் காணாதே.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லது அவர் வெளியே போயிருக்கும் சமயத்தில் வீட்டிற் புகுந்து நகை பணம் முதலிய வற்றைக் கவர்ந்து செல்வார்கள்.

**அருள் நிதியை அடையும் வழி:**

இறைவன் பெரு நிதியம் உடையவன். "ஏரி நிறைந்தனைய செல்வன்" என்பார் அப்பர் சுவாமிகள். அந்த நிதிதான் அருள் என்பது. அவ்வருள் நிதியை அவன் தராமல் உயிர்கள் தாமே பெறுதல் இயலாது. அதனைக் கள்ளத்தால் கவர்ந்து கொள்வதற்கு இரண்டு வழிகளே உள்ளன. ஒன்று அவன் சோர்ந்திருக்கும் சமயம் பார்த்துக் கவர்தல். இறைவன் சிறு பொழுதாயினும் சோர்ந்திருந்தால் அல்லவா இது கைகூடும்? அவனுக்குச் சோர்வென்பது ஏது? வான் கெட்டு, மாருதம் மாய்ந்து, அழல் நீர், மண் கெடினும் தனக்கு ஒரு கேடு இல்லாதவன் அவன். சலிப்பு அறியாத் தன்மையன் அவன். ஆதலால் இம் முதல் வழி பயன்படாது.

இனி இரண்டாவது வழி, அவன் தனது நிதியத்தை வைத்துவிட்டு வேறிடம் போன சமயம் பார்த்து அதனைக் கவர்தல். இறைவன் தனது திருவருளை விட்டுச் சிறு பொழு தாயினும் பிரிந்திருந்தால் அல்லவா இது கைகூடும்! அவன் எஞ்ஞான்றும் திருவருளுக்கு வேறாய் நிற்பவன் அல்லன். ஆதலால் இவ்வழியும் கூடி வராது.

இவ்வாறு அவ்விரண்டு வழிகளையும் விலக்கி, உயிர்கள் முதல்வனது திருவருளை அவன் வழங்கவே பெறும் என்ற கருத்தைப் பெற வைக்கிறார் ஆசிரியர்.

(தொடரும்...

## ஆல்போல் தழைத்து அருகுபோல் வேரூன்றி அனைவரும் பயன்பெற அயரா துழைக்கிறார்

ஆல்போல் தழைத்து அருகுபோல் வேரூன்றி
அனைவரும் பயன்பெற அயரா துழைக்கிறார்
பால்போல் வெள்ளை மனதுடன் சேவையாற்றி
பலரும் பயன்பெற இடைவிடா துழைக்கிறார்
வேல்போல் ஞானமும் வீரமும் கொண்டவராய்
விண்ணை உயர்ந்து நின்று உழைக்கிறார்
நூல்போல் பலரும் படித்து உயர்ந்திடவே
நூறாண் டுபலநூ றாண்டு உழைக்கவே.

-வ. யோகானந்தசிவம்-

**(ஆச்சிரம சுவாமிகள் கௌரவ டாக்டர் பட்டம் பெற்றமைக்கான பாராட்டுப் பா இது.)**

ஒருவர் துன்பப்படும்போது நிபந்தனை ஏதுமின்றி உதவுவதுதான் நட்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேதாரகௌரி நோன்பின் மகத்துவம்

– திரு க. லோகேஸ்வரன் அவர்கள் –

கைலையங்கிரியின் சிகரத்தில் உமா சமேதராய் விளங்கும் பரமசிவன் பக்த கோடிகள் தரிசிக்கும்பொருட்டு தேவசபையை ஏற்படுத்தி அதில் வீற்றிருக்கின்றார். அப்பொழுது அந்தரங்க பக்தராகிய பிருங்கி மகரிஷி பக்தியோடு விசித்திர விகட நாடகமொன்றை ஆடிக் காட்டுகிறார். பார்வதியும் அங்கே இருக்கிறார். தேவர்கள் ஆனந்தத்தால் சிரித்து மகிழ்கின்றனர்.

பரமசிவனும் பிருங்கியின் நாட்டியத்தில் மூழ்கித் திளைத்து மகிழ்கின்றார். பரமசிவனது அனுக்கிரகமும் பிருங்கிக்குக் கிடைக்கிறது. அதனைக் கண்டு சபையோர், பிருங்கி மகரிஷியைப் பாராட்டுகின்றனர். அந்த நேரத்தில் பிருங்கி மகரிஷி பயபக்தியுடன் பார்வதியை நீக்கி பரமசிவனை வலம் வந்து வணங்குகிறார்.

இதனால் பார்வதிதேவி கவலை அடைந்தாள். இதனைக் கண்ணுற்ற சிவபெருமான் தேவி! சிவயோகியாகிய பிருங்கி மகரிஷி முத்திநிலையை விரும்பி நிற்பவர். அதனால் உன்னை வணங்குவதால் பிரயோசனமில்லை என்ற திட சித்தம் கொண்டதால் உன்னைவிட்டு என்னை மாத்திரம் வணங்கிச் சென்றார் என்று பார்வதிக்கு விளக்கம் கூறினார்.

பார்வதிதேவி வருத்தப்பட்டு பரமசிவனிடம் கோபம் கொள்கிறாள். கோபாவேசத்தில் தனது சக்தியின் கூறு பிருங்கி மகரிஷியிடமிருந்து அகலக் கடவது என்று கூறிவிடுகிறார். பிருங்கி மகரிஷியின் உதிரம் பிழிந்து சக்கையாகிறது. அவர் நிற்பதற்கு முடியாது தள்ளாடுகின்றார். அப்பொழுது பரமசிவன் பிருங்கியின் கையில் தண்டொன்று வரச் செய்கிறார். பிருங்கி தண்டின் உதவியுடன் ஆச்சிரமம் போய்ச் சேருகிறார். தேவிக்கு மேலும் கோபமுண்டாகிறது. கைலையை விட்டு பூலோகத்திற்கு வருகிறாள். வால்மீகி மகரிஷி தங்கியிருக்கும் பூங்காவனத்தில் ஓர் விருட்சத்தின் அடியில் அமர்ந்திருக்கிறாள். அந்த இடத்தில் 12 வருடங்கள் மழையின்றிக் கிடந்த விருட்சங்கள் எல்லாம் தளிர்த்து பூத்து மணம் வீசுவதைக் கண்டு அனைவரும் அதிசயிக்கின்றனர்.

"தேவி! தாங்கள் கைலாசத்தைவிட்டு பூலோகம் எழுந்தருளிய காரணத்தைக் கேட்க, தேவியும் தான் பூலோகத்திற்கு வந்த கதையைக் கூறுகிறாள். அத்துடன் யான் பூலோகத்தில் அனுஷ்டிக்கக்கூடிய விரதம் ஒன்று இருக்குமானால் எனக்குக் கூறுங்கள்" என்கிறாள் தேவி.

மகரிஷி, தாயே! தாங்கள் விரத முகத்தோடு எழுந்தருளி இருக்கின்றீர்கள். அதை விடவா பூலோகத்தில் சிறந்த விரதம் ஒன்று உண்டென்று கூற, தேவி புன்னகைத்து தன் விரதத்தை ஆல விருட்சத்தின்கீழ் அமர்ந்து ஆரம்பிக்கிறாள். மண்ணிலே லிங்கம் பிடித்து ஈஸ்வரனாகப் பாவித்து பூஜை செய்கிறாள். 21 நாள் பூஜை நிகழ்கிறது. 21 பழம், 21 அதிரசம், வெல்ல உருண்டை 21, 21 சந்தன உருண்டை, 21 மஞ்சள் உருண்டை நைவேத்தியமாக வைத்து தூபம் காட்டி வணங்குகிறாள். 21 இழை எடுத்து தரித்து 21 முடி முடிந்து, ஈஸ்வரனை தியானம் செய்து காப்பு கட்டுகிறாள். காப்பணிந்ததும் பரமசிவன் பார்வதிக்கு காட்சி கொடுத்து தேவி உமக்கு என்ன வரம் வேண்டுமென்று கேட்கிறார். தேவி ஈசனைப் பார்த்து உமது தேகத்தில் பாதி எனக்கருள வேண்டும் என்று

வெறுப்பு யாராக இருந்தாலும் நேசிப்பது நீங்களாக இருங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்கிறாள். ஆகட்டும் என்கிறார் ஈஸ்வரன். என்னை நோன்பு நோற்று வரம் பெற்று உன்னை நோக்கி யார் இந்த 21 நாட்களும் விரதம் அனுஷ்டிக்கிறார்களோ அவர்கள் உன்மூலம் சகல சௌபாக்கியங்களையும் அடைவர் என்ற வரமும் நல்கி பரமசிவன் பார்வதி சமேதராக அர்த்தநாரீஸ்வர வடிவத்தோடு கைலயங்கிரிக்கு எழுந்தருளினார். அதிலிருந்து பூலோக வாசிகளால் கௌரி நோன்பு அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது. இந்த கௌரி நோன்பை அனுஷ்டித்து கைமேல் பலன் கண்டவர் பலர். இவ்விரதத்தின் அங்கங்களாக அமைந்தவை சங்கற்பம், நைவேத்தியம், தூபம், தீபம், அர்ச்சனை வலம் வருதல் என்பனவாகும். ஆகவே இவற்றை ஒவ்வொருவரும் தாமாகவே செய்து விரதத்தை நிறைவேற்றுதல் விரும்பத்தக்கதாகும். அவரவர் இல்லங்களிலும் இதனைச் செய்து கொள்ளலாம். ஆனால் புனிதமான சூழ்நிலை அமையவேண்டும். இலிங்கத்தின் அருகில் அம்பாள் திருவுருவையும் வைத்து அலங்கரித்து பூஜை செய்தல் மேலானது. 21 நாள் இவ்விரதத்தை அனுஷ்டிக்க முடியாதவர்கள் இறுதி நாளில் எல்லாப் பூஜைகளையும் முடித்துக் கொள்ளலாம். ஆனால் வருடா வருடம் தொடர்ந்து அனுஷ்டிப்பதே முக்கியமானதாகும்.

## ஆற்றங்கரையானே ஆறுதல் தந்துவிடு

சந்நிதியான் ஆச்சிரமத்தில்
சக்தி தரும் வேலவனே
ஆற்றங்கரையானே ஆறுதல் தந்திடு அப்பா
அன்னதானக் கந்தனே ஆறுதல் தந்திடு அப்பா
வெற்றிவடி வேலவனே வேதனை தீர்த்திடு அப்பா
கதிர்காமர்க்கு காட்சி தந்த வேலவனே
சக்தி தரும் வேலவனே சந்நிதியை காத்திடு ஐயா
தீந்தமிழ் காத்திடவே பூவரச மரநிழலிலே
அருள் கோவில் கொண்டவனே
மோகவாழ்வு துறந்து அன்புமிளிர அருள்கொடு அப்பா
கருணை தெய்வமே காத்திடு தெய்வமே
கணப்பொழுதும் உனை மறவா வரம் தரவேண்டும்
தானத்தில் சிறந்த அன்னம் அளிப்பவனே அருள்சக்தி வேலவனே
கஷ்டம் இல்லா வாழ்வு அருள்வாயே வேலவனே
வரம் அருள்வேலவனே சந்நிதி வேலவனே
சரணம் சரணம் வேல் முருகா சந்நிதி முருகா
தரிசனம் தந்து விடுவந்து விடு வரம் தந்துவிடு
ஐங்கரன் தம்பியே ஆறுமுகனே
ஆனந்த வாழ்வுதந்துவிடு முருகா குமரா
சரவண பவகுகனே.

-வி. சோமசுந்தரம்-

*உண்மைக்குப் பயப்படுபவன் வேறு எவருக்கும் பயப்பட வேண்டிய அவசியமில்லை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகவத்கீதையின் உலகம் தழுவிய பரந்த நோக்கு

(தொடர்ச்சி...

– சுவாமி கிருஷ்ணானந்தா –

தமிழில்: திரு பூ. சோதிநாதன் அவர்கள் –

## அத்தியாயம் – 06

## கடமையும் அதன் பரிமாணங்களும்

### 23. யக்ஞம் என்பதன் அர்த்தம்.

யக்ஞம் என்பது தியாகம், சேவை, ஒத்துழைப்பு, சுயநலமின்மை என்பனவே அன்றி வேறு இல்லை என்பதை இந்தியப் பண்பாட்டில் கற்பிக்கப்படுவதைக் காண்போம். மனித நேயமுள்ள எந்த ஒரு பண்பாட்டினதும் சாரம் இதுவாகவே இருக்க வேண்டும். இந்த உலகில் எமக்குக் கடமைகள் உண்டே தவிர உரிமைகள் இல்லை. இது மிகச் சுவாரசியமான ஒரு விடயமாகும். ஆனால், இன்று மனிதர் உரிமைக்காகப் போராடுகின்றார்களே தவிரத் தமது கடமைகளைப் பற்றிச் சிந்திக்கிறார்கள் இல்லை. "நான் உன்னிடம் வேண்டுவது இதுவே. எனக்கு உன்னைப் பொறுத்தவரை எந்தக் கடப்பாடும் இல்லை" என்பதே நவீன மனிதனின் வாதமாகும். ஆனால் உண்மையான பண்பாடு உனக்குக் கடமை உண்டே தவிர உரிமை இல்லை என்கிறது.

"அன்புள்ள நண்பர்களே! எனக்கு எந்த உரிமையும் இல்லை" என்பதைக் கேட்டதும் ஒருவர் ஆச்சரியப்படக்கூடும். உரிமைகளை நீங்கள் கேட்காது விட்டாலும் அவை தாமாகவே உங்களிடம் வரும். நீ உனது கடமைகளை நிறைவேற்றும்போது உரிமைகளைக் கேட்க வேண்டிய தேவை இருக்காது. அவை தாமாகவே உன்னிடம் வரும். "முதலில் நீ கடவுளின் இராச்சியத்துக்குள்ளும் அவனது நேர்மைக்குள்ளும் புகுவாயாயின் இவை எல்லாம் உன்னை வந்தடையும்" உரிமைகளுக்காக ஏன் அழுகின்றாய்? கடவுளையும் அவரது நேர்மையையும் தேடுவாயாகில் பின் அவை எல்லாம் உன்னிடம் வருகின்றனவா இல்லையா என்பதைப் பார். ஆனால் நாம் ஒவ்வொன்றும் தானாகவே எம்மிடம் வர வேண்டுமே தவிர அதற்காக நாம் எதுவும் செய்யவேண்டியது இல்லை என்று எதிர்பார்க்கின்றோம். அது எம்மை வெற்றிப் பாதைக்கு இட்டுச்செல்லப் போவதில்லை. எனவே அந்த உரிமைகள் எல்லாவற்றுக்குமாக நீ செய்யவேண்டிய கடமை உனக்கு உண்டு.

### 24. வாழ்க்கை பெறுமதி மிக்கது.

"நான் எதனையும் செய்யாமல் அழிவேன்" என்று நீ உனது வில்லையும் அம்புகளையும் எறிந்துவிட்டுக் கூற முடியாது. உன்னை அழித்துக்கொள்ளக்கூட உனக்கு உரிமை இல்லை. நீ மற்றவர்களை மட்டுமல்ல உன்னையும் துன்புறுத்தக் கூடாது. எப்படி நீ மற்றவர்களைக் கொல்லக்கூடாதோ அப்படியே நீ உன்னையும் கொல்லக்கூடாது. எப்படி

*கோபத்தால் சாதிப்பதைவிட பொறுமையால் ஒருவன் அதிகம் சாதிக்கிறான்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்ற எதனையும் வெறுப்பினால் தாக்கக்கூடாதோ அப்படியே நீ உன்னையும் தாக்கக் கூடாது. எங்குமே பரிசுத்தமும், தூய்மையும் நிறைந்து உள்ளன. அத்துடன் உண்மையான பண்பாடு ஒன்றில் வாழ்க்கையை மதிப்பது மிக முக்கியமான அம்சமாகத் திகழ்கிறது.

**25. ஒளிக்கு முந்திய இருள்.**

அர்ச்சுனன் எல்லாவற்றையும் மறந்து போனான். அவன் பயத்திலும், சந்தேகத்திலும், பலவீனத்திலுமே மூழ்கி இருந்தான். எமது ஆன்மீக முயற்சியின் ஒரு குறிப்பிட்ட கால கட்டத்தில் ஆத்மாவின் கரிய இருளிலேயே எம்மைக் கண்டு கொள்வோம். இப்படியான நிலைமையை மறைஞானிகள் அவ்வாறுதான் வருணித்து இருக்கின்றனர். அந்த நிலையில் எமக்கு முன்னால் இருப்பது எதனையும் நாம் பார்க்க மாட்டோம். ஆன்மீக வாழ்வின் ஆரம்ப கட்டங்களில் பகல் வெளிச்சம்போல எல்லாம் இருக்கும்போது எம்மிடத்தில் இவ்வாறான நிலை வந்து தோன்றாது. ஆன்மீகப் பயிற்சியின் ஆரம்ப நாட்களில் எல்லாம் எமது மனங் களுக்குத் தெளிவாக உள்ளது என்றும், நாம் மேலும் முன்னேறிச் செல்லலாம் என்றும் நினைக்கின்றோம். ஆனால், நாம் பாதி வழியில் செல்லும்போது எமக்கு முன்னால் இருள் இருப்பதைக் காண்போம். அப்போது எல்லாம் பிரச்சினை ஆகவும், இடரானவை ஆகவும், தீர்மானிக்க முடியாதனவாகவும் இருக்கும். நாம் இருளில் தவள ஆரம்பித்து விட்டோம் எனத் தோன்றும். பகவத்கீதையின் முதலாவது அத்தியாயத்தில் அப்படியான நிலையிலேதான் அர்ச்சுனன் தன்னைக் காண்கிறான். இந்த இருள், ஒளி வருவதற்கு முன் தோன்றுவதனால் உண்மையான இடைவிடாத எமது ஆன்மிக வாழ்வுப் பயிற்சியின் காரணமாகத் தோன்றுவதே அந்த இருள் ஆகும்.

ஒளிவருவதற்கு முன் தோன்றும் இருளும், அதனால் வரும் சந்தேகமும் ஆன்மீக சாதனையில் இடம்பெறுவதனாலேயே அவையும் யோகம் என அழைக்கப்பெற்றன. அதனால் கீதையின் முதலாவது அத்தியாயம் அர்ச்சுன விஷாதயோகம் என அழைக்கப்பெறுகிறது. அதுவும் யோகத்தின் ஒரு பகுதியே ஆகும். அத்துடன் ஒவ்வொரு சாதகனும் அந்தக் கட்டத் தைக் கடக்கவேண்டியவனாக உள்ளான். அது ஒரு நிலைமாறும் கட்டம் என்றும், அதுமட்டுமே எல்லாம் அல்ல என்றும் உணரக்கூடிய பலம் எமக்கு உள்ளே இருக்கவேண்டும். அக்கட்டம் பின்னர் தானாகவே கடந்து போய்விடும். எனவே இருள் என்ற முதலாவது கட்டத்தில் இருந்து அடுத்த கட்டமான சாங்கியம் என்னும் செய்திக்கு அர்ச்சுனன் உயர்த்தப்படப் போகின்றான். அந்தச் சாங்கியச்செய்தியை நாம் அடுத்துவரும் அத்தியாயத்தில் காண இருக்கின்றோம். (தொடரும்...

## குருபூஜை தினங்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| நவம்பர் | 03 | ஐப்பசி | 17 | வெள்ளி | திருமூலர் |
| நவம்பர் | 24 | கார்த் | 08 | வெள்ளி | இராமநாதர் |
| டிசம்பர் | 08 | கார்த் | 22 | வெள்ளி | ஆறுமுகநாவலர் |
| டிசம்பர் | 11 | கார்த் | 25 | திங்கள் | மெய்ப்பொருளார் |

*மணிக்கணக்கில் செய்யும் போதனையைவிட, ஒரு கணப்பொழுது உதவி புரிதலே சிறந்தது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜீவகாருண்யம்

# மனித வாழ்வு பிரதிபலிப்பானது

– சர்வமத பிரியன் –

முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும். நாம் செய்யும் நன்மை, தீமைகள் யாவும், முந்தியோ, பிந்தியோ பலவிதத்தில் சுக, துக்கங்களாக வந்து எம்மை அனுபவிக்க வைக்கிறது.

பிற உயிர்களுக்கு நாம் செய்யும் நன்மை, தீமைகள் யாவும் எம்மை அல்லது எமது சந்ததிகளுக்கே சுக துக்கங்களாகச் சென்றடைகின்றது. மாதா பிதா செய்வது மக்களுக்கு தலைவிதி என்பதும் இதுதான்.

உற்ற நோய் நோற்றல் உயிர்க்கு உறுகண் செய்யாமை
அற்றே தவத்திற்கு உரு.

-திருக்குறள்.

பிற உயிர்களை நாம் துன்புறுத்தாமல் இருப்பதே தவத்தின் வடிவமாகும். தவ வலிமை இருப்பவர்களுக்கு துன்பம் அணுகாது. நன்மைகள் தானாகவே அவரைச் சூழும்.

நாம் இறைச்சி உணவை உண்பதால் பல உயிர்களை பதை பதைக்க, கதறக் கதற நிலத்தில் விழுத்தி அந்த வேதனையுடன் சத்தம் வராதபடி அதன் வாயை முடக்கிப் பிடித்து மூர்ச்சை அடக்கும் வேதனையுடன் கழுத்தைக் கத்தியால் அரிந்து; அரியும்பொழுது தாங்கொணா வேதனையை அனுபவித்த பழியான ஆட்டிறைச்சியை உண்பதைத் தவிருங்கள். அறக்கடவுள் உங்கள் தலைவிதியை நன்மையாக மாற்றுவார்.

கொலைக்களத்தில் மாட்டின் கழுத்தை தூணுடன் ஒட்டக்கட்டி கால்களை இறுகப் பிணைத்து தடம்போட்டு விழுத்தி மண்டையில் இரும்பு உலக்கையால் அடித்து விழுத்தி கத்தியால் கழுத்தை அரியும்போது, தாங்கொணா வேதனையுடன் மரண அவஸ்தையை அனுபவித்து தாங்க முடியாமல் தன் நாக்கைத் தானே கடித்து கோசல கோமயம் கரைசலாக சீறி அடித்திட அவஸ்தைப்பட்டு தன் ஆத்மாவை களட்டிய மாட்டு இறைச்சியை உண்ணாதீர்கள். அவைகளுக்கு உயிர்ப் பிச்சை கொடுங்கள். கடவுள் உங்களுக்கும் நன்மைகள் எல்லாம் பொலிய வைப்பார். இறையருள் கிடைக்கப்பெற்று, மகிழ்ச்சியான வாழ்வை தர்ம சாஸ்தா, தர்ம தேவதை உங்களுக்கு நல்குவார்.

தன் ஊன் பெருக்கத்திற்குத் தான் பிறிது ஊன் உண்பான்
எங்ஙனம் ஆளும் அருள்.

-திருக்குறள்.

தன் உடலை வளர்ப்பதற்காக பிற உயிர்களைக் கொன்று அதன் இறைச்சியை உண்பவருக்கு இறைவனின் அருள் கிடைக்காது.

அவிசொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர்செகுத்து உண்ணாமை நன்று.

-திருக்குறள்.

*நமது இன்றைய நிலையின் காரணம் நாம் எண்ணிய எண்ணங்களே.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிற உயிர்களுக்கு துன்பம் செய்யாது இருப்பதைவிட மேலான புண்ணியம் வேறு ஒன்றும் இல்லை.

ஆயிரம் யாகங்களையும் அபிஷேகங்களையும் தான தருமங்களையும் திருப்பணிகள் முதலானவற்றையும் செய்வதெல்லாம் பலனளியாது போய்விடும். இவை யாவற்றையும்விட மேலானது ஒரு உயிரைக் கொலை செய்யாது இருப்பது. நாம் செய்யும் நன்மைகள், தீமைகள் யாவும் இப்பிறப்பிலேயே எமக்கோ, எமது சந்ததிக்கோ திரும்பவும் வந்து அடைகிறது. அதன் பெறுபேறாக நாம் இன்ப, துன்ப, சுக துக்கங்களை அனுபவிக்கின்றோம். இவை இயற்கையின் நியதி. இதில் நம்பிக்கை வையுங்கள். மனிதரைவிட ஓரறிவு குறைவு பட்ட நாற்கால் ஜீவ மிருகங்களுக்கு உயிர்ப்பிச்சை கொடுங்கள். இறைச்சி உணவு உண்பதைத் தவிருங்கள். மாமிச உணவு உண்பவராயின் மாமிச உணவில் இரத்தம் சிந்தி கொலைக்களத்தில் அவஸ்தைப்பட்டு தன் உயிரை மாய்த்த இறைச்சி உணவை மட்டுமாவது தவிருங்கள்.

நாற்கால் மிருகங்களுக்கும் மனிதர்களுக்கும் பகுத்தறிவு ஒன்று மட்டும்தான் குறைவு. மற்றப்படிக்கு தன்னைக் கொலை செய்யப் போகிறார்கள் என்பது கொலை செய்யக் கொண்டுபோகும்பொழுது நன்கு விளங்குகிறது. நடையைத் தளர்த்துகிறது. நடுக்கம் ஏற்பட்டு பின்னோக்கி இழுக்கிறது. திணறுகிறது, முழியைப் பிரட்டுகிறது. கொலைக்களத்திற்கு இழுத்துச் செல்லும் போது தோல்வியடைகிறது. தாங்கொணாத் துயரமும், தோல்வியும் ஏற்பட்டு தப்பித்துக் கொள்ள இயலாது தவிக்கிறது. கழுத்தை ஒட்டக்கட்டும்போதும் நாலு காலை தடம் போட்டு வீழ்த்தும்போதும் மரணபயம் வேதனை வலி பல மடங்கு அதிகரிக்கிறது. கழுத்தைக் கத்தியால் வெட்டும்போது துடிக்கவோ, கதறவோ முடியாதபடி அவஸ்தைப்பட்டு ஆத்மாவைக் கழட்டிய எங்கள் இறைச்சி உணவை நீங்கள் உண்ணாது விட்டால் நாங்கள் இத்தனை அவஸ்தைகளுக்கும் ஆளாகமாட்டோம்.

எங்கள் இறைச்சியை சுவைபட சமைக்கும் இல்லத்தரசிகளே, இல்லத் தலைவர்களே; நாங்கள் பாலைப்பொழிந்து தர அதனைக் குடித்து மகிழ்ச்சியுடன் வளரும் வருங்கால சிறார்களே, வீட்டு மிருகங்களாகிய எமக்கு உணவைத் தரும் எஜமான்களே உங்களால்த்தான் எங்களுக்குக் கருணை காட்ட முடியும். நீங்கள் எங்கள் இறைச்சியை உண்ணாது விட்டால் நாங்கள் கொலைக்கு ஆளாக மாட்டோம். உயிரப் பிச்சை கொடுங்கள். கனவான்களே! உங்களை நாம் வாழ்த்த வாய் பேசாத மிருகங்களாகப் போய் விட்டாலும் தர்ம தேவதையின் ஆசியால் உங்கள் இல்லங்களில் மங்களங்கள் பொங்கிட உங்கள் குடும்பங்கள் தழைத்தோங்க அம்பிகை அருள்மாரி பொழிவாள். வாய் பேசாவிடினும் கொல்லான் புலாலை மறுத்தானை எல்லா உயிரும் கைகூப்பித் தொழும். நாமும் எமது சந்ததியும் நல்வாழ்வு வாழ்வதற்காக இதனைக் கடைப்பிடிப்போமாக. இல்லத்தில் நடைபெறும் விழாக்கள், வைபவங்களிலும் சடங்குகளிலும் ஆட்டிறைச்சி, மாட்டிறைச்சி சமைப்பதைத் தவிருங்கள். அதனால் வைபவங்களில் பங்குகொண்ட அனைவருக்கும் ஆண்டவனின் ஆசீர்வாதம் கிடைத்து நல்வாழ்வு பெறுவீர்கள். அது உங்கள் பிள்ளைகளுக்குப் புண்ணியமாகச் சேரும்.

இதனை சிறிது காலம் கடைப்பிடித்து வாருங்கள். இதன் பலன் உங்களுக்கே உணர்வு பூர்வமாகத் தெரியும். உங்களது துன்பங்கள் படிப்படியாக நீங்கி இன்பங்கள் சூழ்வதை உணர்வீர்கள். உன் உயிரைப்போல் பிற உயிர்களை நேசியுங்கள். மாமிச உணவில்

*தீய செயல்களிலிருந்து நம்மைத் தடுப்பவனே உண்மையான நண்பன்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைச்சி உணவை உண்பதை மட்டும் தவிர்த்தாலே தர்மம் தலை காக்கும். தக்க சமயத்தில் உயிர்காக்கும் விதி வசத்தால் பெரிதாக வரும் துன்பங்கள் கூட கடவுள் கிருபையால் சிறிதாகிவிடும். எல்லா கடவுள் களுமே கருணை வடிவானவர்கள். கடவுள் எம்மீது கருணை காட்டுவதற்கு, நாம் பிற உயிர்களுக்குக் கருணைகாட்டி இறை ஆசிக் குப் பாத்திரமானவர்களாக ஆகுவோம்.

## மீன் வலை வீசிய கானவ ஞானமே

பேறுற்று மதியணிந்த பெருமான் திருவடியைக் காணா
தினமுள்ளம் உணர்வோர்க்குறாத கருத்துண்டோ வேலா!
நாளும் நறுங்கொன்றை விழைந்து மேலோங்க நயந்து நின்று
நல்லொளியுங் கானமும் சிறக்க கடவுலகங் காண்பதே ஞானமானாய்!

ஆராத்தியறிந்த அமலன் திருவடியை யேற்றுமடியார்க்கு பவம்
போக்கு மவர்கட்கு துன்பகுளாம் சேராச் செல்வச்சந்நிதியானே!
சாத்தும் வில்வந் தனக்குத் தகமுகுவு மென்றும் மீர்க்கும் வேலவனே!
முத்த சித்தர்ஞானம் பெற்றேவிய மோகனதாசின் பரிவர்த்தன படலமீதோவேலா!

அச்சமும் அன்புந் தோன்ற அடியினை பணிந்து சூழாச்சிரமென்றும்
உச்சியில் கரங்களோங்க ஒளிவிழிமருவிசூழ நோக்கிநின்று!
விச்சகத்தீரனான செல்வச்சந்நிதிப் பெருமான்தனைப் பார்த்தாடும் யோகரும்!
முச்சகம் முழுதும் போற்றி முலமுதல்வனைத் துதிக்கின்றார்கள்!

வேதாகமும் வேல்தான் வேதமோர் நான்கும் வேல்தான்!
பாதமோர் நான்கும் வேல்தான் பதங்களோர் நான்கும் வேல்தான்!
போதலும் ஆகமமாதலும் புவனகாரணருத்திரமுர்த்தியும் வேலின் நிழலே!
காதலால் கருணையுள்ளும் நாதனின் பெருமையை நவிலத்தூண்டும் மோகனதாஸ்சுவாமி சித்தமே!

குணமொடுகுறிபல கொள்கை கொள்ளா ஞானச்சுடரொளியென்றும்!
அனிமலர் மணமென வாழ்விலுயர் உயிரெனப்போந்தூறும் தொண்டைமானூற்று
பணியுயிரறிவெனப் பயிலுமன்பர்க்கு பதினெண்கீழ்க்கணக்கெனப் புகட்டுவதுவேல்!
இப்பதிமலர்ப்பதிகம் யாவும் மயில்வாகன வேலனின் வித்தக சொருபம் புனித பூவரசே!

என்றுரைபாடும் வேலை சுரங்க முற்றாள்வார்போல பண்டுரை நாடாநிற்பார் போற்றி!
என்றபேரடியார் யாவும் குகமயில் சந்நிதியானை தாழ்ந்துயர்வுற்றார் போற்றி!
அன்றுவல்தொண்டர் வேலெதிர்தோன்றியன்னான் பொன்றிடாப்புகழ் பூத்தார் போற்றி!
ஒன்றுசெய்தவம் யாதென்ன அருளுவான்வேல் கொண்டுய்க்கும் ஆன்மீகமைந்தும் போற்றி!

-க. தெய்வேந்திரம்-

நல்ல செயலில் துணிவுடையவர் நாள்தோறும் வெற்றியே காண்பர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமய வாழ்வு

– திரு இரா. செல்வவடிவேல் அவர்கள் –

உலகில் வாழும் உயிர்கள் யாவும் இன்பத்தில் விருப்பும் துன்பத்தில் வெறுப்பும் இயல்பாகக் கொள்வதைக் காண்கிறோம். இன்பம் பெறவேண்டி ஒவ்வொருவரும் பல துறைகளிலும் உழைப்பதைக் காண்கிறோம். எனவே படைப்பின் நோக்கம் இன்பத்தைப் பெறுவதுதான். அப்படியாயின் துன்பக் கடலைக் கடந்து இன்பக் கரையை அடைவது எப்படி? அதற்கு ஒரு படகு வேண்டும். அதுவே சமயம் எனும் படகாகும்.

சமயம் என்னும் சொல்லுக்குப் பலர் பலவாறு பொருள் கூறுவார்கள். இவ் ஆராய்வில் ஈடுபடாமல் உலக வழக்கையொட்டிச் சுருங்கக் கூறினால் இன்பப் பொருளாக உள்ள இறைவனை அடைவதற்கு மனிதன் கடைப்பிடித்து ஒழுகும் ஓர் அறவழியே சமயம் என்று கூறலாம். சமயம் என்று ஒன்று இல்லாவிட்டால் உலகில் அறம் ஏது? அன்பு ஏது? ஆன்ம உணர்வு ஏது? மக்களை விலங்குகளிலிருந்து பிரித்து அவர்களை செந்நெறியில் நிறுத்தி வைப்பதற்கு உதவுவது சமயம் அல்லவா!

சமயம் என்பது நாட்டிலும் மொழியிலும் ஒழுக்கத்திலும் இன்னோரன்ன பிறவற்றிலும் மக்களுக்கு விருப்பம் தருவது. நாடும் மொழியும் பிறவும் மக்களைப் பிரிக்குந் தன்மையுடையன. சமயமோ அப்பிரிவைப் போக்கும் தன்மையுடையது. நாட்டுப் பற்றும் பிற பற்றுக்களும் அன்பைத் தம்மளவில் உருவாக்கும். சமயப்பற்று என்பது அன்பைப் பெருக்கும் தன்மையுடையது. நாடு முதலியன தம் வளம் அருகும் வேளையில் அல்லது பிறநாட்டு வளம் பெருகும் வேளையில் அழுக்காறு, அவா, வெகுளி எனும் தீய குணங்களை உருவாக்கிவிடும். சமயமோ எவ்வேளையிலும் அடக்கம், பொறை, அருள், ஈகை, ஒப்புரவு இத்தகைய நல்ல குணங்களை உருவாக்கும்.

சமய ஞானமில்லாத நாட்டார் தமது நாட்டையே கடவுளெனக் கொண்டு அதன் வழிபாட்டுக்கெனப் பிறநாடுகளைப் பலியிடுகிறார்கள். சமய ஞானமுடையவர் இத்தகைய செயல்களைச் செய்யமாட்டார்கள். நமது நாட்டிற்கும் பிற நாட்டுக்குமுள்ள வேற்றுமை என்ன? நமது நாட்டையும் பிற நாடுகளையும் மலைகளும் ஆறுகளும் காடுகளும் கடல்களும் பிரித்திருக்கின்றன. நாட்டுக்கு ஏற்ப தட்ப வெப்ப நிலைகள் அமைந்துள்ளன. மக்களுக்கு நிறம், மொழி, பண்பாடுகள் போன்ற நன்மைகள் வழங்கப்பட்டுள்ளன. இத்தகைய வேற்றுமைகள் ஒரு நாட்டு மக்களுக்கும் மற்ற நாட்டு மக்களுக்கும் இடையே எவ்வாறு இணைப்பை ஏற்படுத்தும்? “எல்லோருடைய உள்ளத்திலும் வீற்றிருப்பவர் ஒரு கடவுளே. எந்நாட்டினரும் எம்மொழியினரும் எவரும் எல்லாருஞ் சகோதரரே” என்று எவருக்கும் தீங்கை ஏற்படுத்தாது நேர்வழியில் செல்வதற்கு உதவுவது சமயம் ஒன்றேயாகும். வேற்றுமையால் ஒற்றுமை காண்பதற்கு வழிகாட்டுவது சமயமொன்றே. இத்தகைய சமயம் மக்களுக்கு இன்றியமையாதது என்று சொல்லவும் வேண்டுமோ?

*வாய்மை வழுவாது வாழ்வதே வழிபாடு.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகில் சில இடங்களில் சிலவேளைகளில் போருக்கும், கொலைக்கும், பிற கொடுமைகட்கும் சமயமும் காரணமாக இருப்பதைக் காணலாம். இதனால் சமயமே வேண்டாம் எனக் கூறுபவர்களும் உள்ளனர். சமயப் பெயரால் போரிடுவோர் சமய ஞானிகள் அல்லர். அவர் சமய் உண்மை கைவரப் பெறாத பித்தர்; உன்மத்தர். அவர் உள்ளத்தில் உண்மை ஞானம் விளங்கினால் அவர் பித்த மயக்கந் தீரப்பெற்றுத் தமது அறியாமையை உணர்வார். சமயத்தின் பெயரால் நடைபெறும் கொடுமைகளைக் களையவும் சமய ஞானம் வேண்டும்.

அன்பு நெறியை உலகிற்கு உணர்த்த வந்த எச் சமயகுரவராவது தமது கொள்கையை ஏற்க மறுக்கும் யாரையும் வருத்துமாறு செய்துள்ளார்களா? அவ்வாறு செய்பவர் சமயகுரவரா? சமய ஞானமின்றிச் சமயப் பெயரால் பித்துக்கொண்டு நிகழ்த்தப்படும் கொடுவினைப் பழிகளுக்கு சமயத்தின் மீது பழி சொல்வது ஏற்புடையதல்ல. சமய ஞானம் வேண்டாமென்று சொல்பவர்கள், அன்னசாலை, வைத்தியசாலை, பாடசாலை முதலிய அறச்சாலைகள் அமைக்குமாறும், குளங்கள் தூர்வாரப்படுதல் போன்றவற்றைச் செய்யவேண்டும் என்றும் கூறுவதைக் காண்கிறோம். இந்த ஞானம் எதன் அடிப்படையில் தோன்றியது என்று சிந்தித்தால் சமய ஞானத்தின் அவசியம் தெரிந்துவிடும்.

தன்னலத்தை அறுத்துத் தனக்கும் பிறர்க்கும் வேற்றுமை இல்லையென்னும் ஆன்ம ஞானத்தை அறிவுறுத்தும் சமயம் வேண்டுமல்லவா! இப்போது உலகில் சமய ஞானம் அருகிவருவதனால் நாடுகளில் ஆலகால நச்சுக் காற்றும், காலனும் அஞ்சத்தக்க கொலைக் கருவிகளும் உருவாகியுள்ளன. மக்களிடையே அரும்பியுள்ள இத்தீய விலங்குணர்வை அகற்றுவதற்கு சமயம் வேண்டுமா, வேண்டாமா? உலகில் ஆன்ம நேயத்தையும் சகோதர உரிமையையும் அமைதியையும் நிலைநிறுத்தவல்லது சமயமே!

சமயம் இன்றியமையாததெனில் எச் சமயத்தைக் கடைப்பிடிப்பது எனும் வினா எழாமற் போகாது. உலகிலே பல சமயங்கள் இருக்கின்றன. எச்சமயத்தைக் கடைப்பிடிப்பது? எச்சமயத்தைத் தள்ளுவது? உலகில் உள்ள சமயங்களை எண்ணால் கணக்கிட்டு விடலாம். ஆனால் மக்கள் மனத்திடை ஊறும் சமயங்களின் தொகையை எவ்வாறு கணக்கிடுவது. ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு சமயமுண்டு என்று கூறுவது மிகையாகாது. சமய உண்மை என்பது அவரவர் அறிவாற்றலுக்கும் அநுபவத்துக்கும் ஏற்றவாறு விளங்கித் தோன்றுவது.

சூரியனைப் படம்பிடிக்க ஒருவன் புறப்படுவதாக வைத்துக்கொள்வோம். அவன் சூரியனுக்கு அருகில் சென்று அதன் உண்மை வடிவைக் கண்டுபிடிப்பதற்கு முன்னர், அவன் செல்லும்போது சூரியனின் அந்த அந்த நிலைகளைப் படம்பிடித்து வருவானாயின், ஒரு சூரியன் பல வடிவங்களாகத் தோன்றுவது கண்டு அவனே வியப்படைவான். "நாசா" விண்வெளி ஆராய்வின் நிலை இது தான். கடவுளின் நிலையும் இத்தன்மையுடையதுதான். தெய்வம் ஒன்றுதான். ஆனால் பலவாக அவரவர் அறிவு ஆராய்ச்சி அன்பு நிலைக்கேற்றவாறு புலப்படுகிறது. இவ் உண்மையை உணர்ந்த பெரியவர்கள் கடவுள் நிலையை மக்கள் அறிவு நிலைக்கேற்ற வண்ணம் அமைத்தனர்.

*குறிக்கோள் உடைய வாழ்வே நல்வாழ்வு.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம் தமிழ் பெரியோரும்,

“அப்பன்நீ அம்மைநீ ஐயனும் நீ
அன்புடைய மாமனும் மாமியும் நீ
ஒப்புடைய மாதரும் ஒண்பொருளும் நீ

என்றும்,

“வடிவேறு திரிசூலந் தோன்றும் தோன்றும்
வளர் சடைமேல் இலி மதியந் தோன்றுந் தோன்றும்

என்றும்,

“இரு நிலனாய்த் தீயாகி நீருமாகி
இயமானனாய் எறியுங் காற்றுமாகி”

என்றும்,

“சொற் பதத்தார் சொற்பதமுங் கடந்து நின்ற
சொலற்கரிய கழலாய்”

என்றும்,

“நின்னாவார் பிறரன்றி நீயே யானாய்”

என்றும்,

“இப்படியன் இந்நிறத்தன் இவ்வண்ணத்தன்
இவன் இறைவன் என்றெழுதிக் காட்டொணாதே”

என்றும் இறைவன் நிலையைப் பல பட உலகத்தவர்க்கு உணர்த்தியிருப்பதைக் காணலாம். எல்லாமாய் அல்லவுமாய் விளங்கும் கடவுளை அன்பால் எப்படிப் பார்த்தால் என்ன?

“தோள் கண்டார் தோளே கண்டார்
தொடு கழற் கமல மன்ன
தாள் கண்டார் தாளே கண்டார்
தடக்கைகண் டாரு ம:்தே
வளர் கொண்ட கண்ணார் யாரே
வடிவினை முடியக் கண்டார்
ஊழ் கொண்ட சமயத் தன்னாள்
உருவு கண் டாரை யொத்தார்”

எனவரும் கம்பன் பாடல் இங்கு சிந்திக்கப்பட வேண்டியதாகும்.

உலகிலுள்ள எல்லாச் சமயங்களும் ஒரு கடவுளையே பலபெயரால் பல வடிவங்களாகப் போற்றிப் புகழ்கின்றன. இவ்வுணர்வோடு எச் சமயத்தை ஆராய்ந்தாலும் அச் சமயத்தில் சமரச மணம் வீசுவதைக் காணலாம். இத்தகைய இயல்பு இல்லாத சமயம் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. அப்படி இருப்பின் அது சமயம் என்ற இலக்கணத்தில் அடங்காததாகவே அமையும். எச் சமயம், எல்லாச் சமயங்களையும் சகோதர சமயங்களாகத் தழுவுகிறதோ, அது சமரச நோக்குடைய சன்மார்க்க சமயமென்று போற்றப்படும். எச்சமயம்

*உலக ஆசை நீங்குமளவு ஈசுவர பக்தி அதிகரிக்கும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிற சமயங்களைப் பொய்யெனக் கருதுகிறதோ, பழிக்கிறதோ, அது சமரச சன்மார்க்கத்தை வளர்ப்பதாகாது. சமரச நோக்குடைய சமயம் எதுவோ, அது சாதி, மதம், நாடு, மொழி, நிறவேற்றுமைகளைப் பாராட்டாது; எல்லா உயிர்களிடத்தும் ஒரேவித அன்பு செலுத்துமாறு மக்களைத் தூண்டும். அச்சமயம் கைம்மாறு கருதாது பணியாற்றுமாறு போதனை செய்யும்; தனக்கென வாழாது பிறர்க்கென வாழுமாறு அறிவுறுத்தும்; தியாக உணர்வை வழங்கும்; உயர்வு தாழ்வை ஒதுக்கும். இத்தகைய விழுமிய நோக்கங்களையுடைய சமயம் எதுவோ அதுவே சமயம். (தொடரும்...

## உள்ளத்தனையது உயர்வு

"வெள்ளத்தனைய மலர் நீட்டம் மாந்தர் தம்
உள்ளத் தனையது உயர்வு"

குளத்தில் நீர்மட்டமானது எவ்வளவிற்கு உயர்வடைகின்றதோ அவ்வளவிற்கு குளத்தில் மலர்கின்ற மலரானது உயர்வடைகின்றது. மனிதனின் உள்ளம் எவ்வளவு தூரத்திற்குப் பண்படுகின்றதோ, அந்தளவிற்கு மனிதன் உயர்வடைகின்றான். இன்று மனிதப்பண்புடையவர், மனிதநேயம் உடையோரைக் காண்பது அரிதாகிவிட்டது. மனித மனமானது பேராசை, சுயநலம், பொறாமை, நயவஞ்சகம் போன்ற தீய குணங்களால் மாசடைகின்றது.

"உள்ளம் பெருங் கோயில்
ஊனுடம்பு ஆலயம்
வள்ளல் பிரானிற்கு வாய் கோபுரவாசல்"

என்பதற்கொப்ப உள்ளம் என்ற கோவிலில் நாள்தோறும் சுத்தப்படுத்திக்கொள்வது அவசியமாகிறது. இவ்வாறு எங்கு நோக்கிலும் போர்கள், யுத்த அரசர்களின் கோரத்தாண்டவம், நஞ்சுத் தாக்குதல், மதச்சண்டைகள் போன்றவற்றால் விலைமதிக்கமுடியாத மனித உயிர்கள் காவுகொள்ளப்படுகின்றன. அறிவியல் முன்னேற்றம், தொழில்நுட்ப வளர்ச்சி என்று கூறி பெருமைப்பட்டுக்கொள்ளும் அதேவேளை மேற்கூறியவற்றின் அதீத செயற்பாடுகளால் மனித உயிர்கள் காவுகொள்ளப்படுவதோடு நோய்களின் தாக்கமும் அதிகரிக்கின்றது. சுவாசப்பை நோய், புற்றுநோய், டெங்கு போன்றவற்றால் சிறிய வயதிலேயே மருத்துவமனையை நாடவேண்டிய அவலம். வாகனங்களின் அதீத பெருக்கத்தினால் அசுத்தமான காற்றையே சுவாசிக்க வேண்டியுள்ளது. இருதய நோய்கள் மரணங்கள் என்பன அதிகரித்து நமது மண் மரணங்கள் மலிந்த பூமியாய்விட்டது.

உண்மையில் சமாதானம் என்பது மனித மனங்களிலேயே ஏற்பட வேண்டும். அறநூல்கள், தத்துவக் கருத்துக்கள், புராணங்கள், இதிகாசங்கள் மற்றும் சமய சம்பந்தமான சிந்தனைகள்மூலம் நமது மனதைப் பக்குவப்படுத்திக்கொள்ளல் வேண்டும். "முத்தோர் வார்த்தை அமிர்தம்" என்பதற்கு ஒப்ப அவர்களைப் போற்றிப் பாதுகாத்து அவர்கள் அனுபவ வார்த்தைகளுக்கு மதிப்புக்கொடுத்து சமுக ஒழுக்க விழுமியங்களைப் பேணுவதில் நாம் அனைவரும் ஒன்றுதிரள வேண்டும். "இன்பமே சூழ்க; எல்லோரும் வாழ்க" என்ற உயரிய சிந்தனை மக்கள் மத்தியில் ஏற்படுத்தப்படவேண்டும். ஆலயங்கள், சனசமுக நிலையங்கள், முன்பள்ளிகள் போன்ற பொதுநல அமைப்புக்கள் இக் கைங்கரியத்தில் ஈடுபட வேண்டும்.

ஒவ்வொரு மனிதனும் மனிதநேயம் உடையவனாக உருவாக்கப்படல் வேண்டும். பொதுநல மனப்பாங்கு ஒவ்வொரு மனித உள்ளத்திலும் விதைக்கப்படல் வேண்டும். இளவயதிலேயே நற்பண்புகள், நற்சிந்தனைகள்மூலம் நம் உள்ளத்தை பக்குவப்படுத்துவதோடு நாம் தெய்வங்களாக உருவாகாவிட்டாலும் மனிதர்களாகவாவது உருவாகவேண்டும். மதங்கள் மதம் சார்ந்த அமைப்புக்கள் இவற்றிற்கு வழிவகுக்க வேண்டியது காலத்தின் கட்டாய தேவையாகும்.

-க. கணேசராசா-

இறைவனிடம் இதயம் நூற்றுக்கு நூறு பதியுமானால் இறைவனைக் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவ சின்னங்கள்

– திருமதி பரமேஸ்வரி நடராஜா அவர்கள் –

## வீபூதி

வீ+பூதி. "பூதி" என்றால் (உடம்பு) ஐம்பூதங்களாலான உடலைக் குறிப்பது. "வீபூதி" என்றால் உடலற்றது என்பதாகும். நம் உடல் ஒருநாள் எரிந்து சாம்பலாகும் என்பதை நினைவூட்டுவதாக அமையும். முப்புரங்களையும் எரித்துச் சாம்பராக்கி அதை உடலிற் பூசிக் கொண்டவர் சிவபெருமான். "முப்புரம்" என்பது மும்மலமாகிய ஆணவம், கன்மம், மாயை என்பனவாம். இம்மலங்களை எரித்து (அழித்து) சீவனைச் சிவமாக்கியவர் என்பதுவே இதன் உட்பொருளாகும்.

பசுவாகிய ஆன்மாவின் மும்மலங்களை எரித்து வீபூதியைத் தயாரிப்பது என்பது பசுவின் சாணத்தை எரித்து வீபூதியைத் தயாரிப்பதை உணர்த்துகின்றது. இந்த வீபூதியை "ஐஸ்வரியம்" என்று கூறுவர். "நான் இந்த உடம்பல்ல; இவ்வுடம்பு ஒருநாள் அழியும்; நான் ஆத்மா அழியாப் பொருள்" என்பதை உணர்த்துவதே வீபூதியின் தத்துவமாகும். அழியும் தன்மையான இவ்வுடம்பை இறைவன் நமக்கு அளித்தது அவன் புகழைப்பாடி இறை தொண்டாகிய நற்கருமங்களைச் செய்வதற்காகவுமேயாம். அழியும் இந்த உடலைப் பேணுவதற்காகப் பிற உயிர்களை வருத்தி வதைப்பது கொடிய பாவமாகும். இதை உணர்ந்து இவ்வுடம்பினால் நற்செயல்களைச் செய்து இறைவனைப் பிரீதி செய்வதன்மூலம் ஆன்மா பரிசுத்தமாகிப் பிரகாசிக்கின்றது. நம் உடல் எரிக்கப்படும்போது எரிந்து வெண்மையான நீறாகின்றது. இதை மீண்டும் எரிக்கமுடியாது. தண்ணீரில் கரைத்தாலும் உலர்ந்தபின் தன் நீற்றுருவத்தைப் பெறுகின்றது. காற்றில் ஊதினால் எங்கும் வியாபிக்குமேயன்றி இல்லாமல் அழிந்து போவதில்லை. எந்தப் பொருட்களினதும் இறுதிநிலை சாம்பரேயாகும். இந்த வீபூதி யும் அழியாத ஆன்மாவைப் பிரதிபலிக்கின்றது.

## உருத்திராக்கம்

சிவ சின்னமாகிய உருத்திராக்க மணியைச் "சிவபெருமானின் கண்மணி" எனக் கூறுவர். கருணையினால் கசியும் தன்மையுள்ளதாகக் கருணையின் வடிவாகத் துலங்குவது இறைவனின் கண்கள். இதனால் உருத்திராக்கமணி சிவசின்னமாக (கருணையின் சின்னமாகப்) போற்றப்படுகின்றது. சிவபிரான் உருத்திரமூர்த்தியாக இருந்து அழிக்கும் தொழிலைச் செய்கின்றார்.

"அழித்தல்" என்பது நம் உள்ளங்களில் தோன்றும் தீய எண்ணங்களை அழித்தலாகும். தீய எண்ணங்களின் விளைவாகப் பாவச் செயல்கள் பெருகுகின்றன. சீவர்கள் மேலுள்ள கருணையினால் சிவபெருமான், அறியாமையினால் பாவச் செயல்களைச் செய்யத்தூண்டும் தீய சக்திகளை அழித்து அஞ்ஞான இருளைப் போக்கி மெஞ்ஞான ஒளியை அருள்வதற் காகவே உருத்திர தாண்டவம் ஆடுகின்றார். இதை நாம் உணர்ந்து உருத்திராக்கத்தை

*இறைவனின் நாமத்தை ஜபிப்பதோடு பக்தியும் உண்டாகவேண்டும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணியும்போது மெஞ்ஞான ஒளியால் சீவன் விழிப்படைகின்றது. இதனால் பவரோகம் அழிந்து சிவபோதம் சம்பவிக்கின்றது. இதன்போது சீவர்கள் அனுபவிக்கும் துன்பம் நிரந்தரமன்று. இதனால் கிடைக்கப்பெறுவது சத் சித் ஆனந்தமாகிய நித்தியானந்தப் பெரும் பேறாகும். இவ்வுண்மையை உணராதோர் துன்பத்தைச் சகிக்கமுடியாமல் சீவனை வெறுக்கின்றனர். ஆனால் இதை உயிர்களின் நன்மை கருதி இறைவன் செய்யும் மறக்கருணை என்பதை உணர்ந்தவர் சிவனை ஆராதிக்கின்றனர்.

இதையே

"நல்ல குருநாதன் நம்மை வருத்துவது
கொல்ல வல்லக் கொல்ல வல்லப்
பொல்லாப் பிணி போக்க"

என்று ஆன்றோர் அன்றருளினர்.

**பஞ்சாட்சரம்**

பஞ்ச+அட்சரம்- ஐந்தெழுத்து.

இவ்வைந்தெழுத்தை ஓதிவந்தால் உயிர்களுக்குப் பஞ்சம் ஏற்படாது. உயிர்கள் அஞ்ஞான இருளில் மூழ்கித் துன்பத்தை அனுபவிக்கும்போது ஆனந்தமயமான மகிழ்ச்சிக்குப் பஞ்சம் ஏற்படுகின்றது. இதனால் வெறுமை ஏற்பட்டு உலகின்மேல் வெறுப்பு உண்டாகின்றது. "ஓம்" என்ற பிரணவத்துடன் சிவாயநம - நமசிவாய என்ற ஐந்தெழுத்தையும் ஓதும்போது "நான் சிவமாக இருக்கின்றேன்" (நான் அன்பாக, அமைதியாக, நன்றாக) இருக்கின்றேன் என்ற உண்மை புலனாகும். ஐந்தெழுத்தால் ஐம்பூதங்களையும் அன்பால் கட்டுப்படுத்தி ஐம்பொறிகளையும் சிவன்பால் ஈர்க்க வைத்து சிவசிந்தனையால் அன்பெனும் ஆனந்தத்தைச் சுவைக்க வைப்பதே பஞ்சாட்சர மகிமையாகும்.

தேவர்களும் அசுரர்களும் அமிர்தத்தைப் பருகி அழியாநிலை பெறுவதற்காகப் பாற்கடலைக் கடைந்தனர். இதை நாமெல்லோரும் அறிவோம். இதன் உண்மைத் தத்துவம் யாதெனில் மனிதர்களிடமுள்ள (உலக ஆசை) "காமம்" ஆகிய ஆசையும் உலக நன்மை கருதிய சுயநலப்பற்றற்ற இறைசங்கற்பமாகிய தெய்வீகப் பெற்றியும் சேர்ந்து இதயமாகிய பாற்கடலைக் கடைந்தபோது முதலில் ஆலகால விஷமாகிய பேராசை வெளிப்பட்டது. இதனால் இதயம் கொதிப்படைந்து அவதியேற்பட்டபோது சிவபெருமானைச் சரணடைந்தனர்.

சிவபெருமான் அந்த நஞ்சை ஏற்றுக்கொண்டபின் அன்பெனும் கயிற்றால் கடையச் செய்து நஞ்சை அமிர்தமாக்கியருளினார். காமமாகிய நஞ்சை அன்பெனும் அமிர்தமாக்கி உலகுக்கு அளித்தவர் சிவமாகிய கருணைக் கடலே. அசுர குணமாகிய காமத்தை ஒழித்து தேவ குணமாகிய அன்பைத் தூண்டக்கூடிய நற்சிந்தனைகளை உருவாக்கும் அமுத சுரபியே இந்தப் பஞ்சாட்சரமாகும். இதை இடைவிடாது ஓதிவர நற்சிந்தனையாகிய அமிர்தம் சுரக்கும். நற்சிந்தனையே நல்வாழ்விற்கான முதற்படி. சிந்தனை நல்லதாக இருந்தால் பேசும் பேச்சு நல்லதாக இனிமையாக இருக்கும். எண்ணமும் பேச்சும் நன்றாயின் செய்யும் செயலும் சீராகும். இதனையே திரிகரணசுத்தி என்பர். மனம், வாக்கு, காயம் மூன்றும் ஒன்றிணைந்து

*விளம்பரமின்றி தனித்திருந்து ஆன்மீக சாதனை செய்யவேண்டும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்படும்போது திரிகரணசுத்தி ஏற்படுகின்றது. இதனால் அச்சம் நீங்கி அமைதி பிறக்கின்றது. வாழ்க்கைப் பாதையில் அமைதியாகப் பயணிக்க முடிகின்றது. "ஆசை" எனும் அலைகள் வந்து அலைக்கழிக்கும்போது அறிவுக் கண்ணைத் திறக்க வைத்து இறை நம்பிக்கையை ஊட்டி சம்சாரக் கடலைச் சிரமமின்றிக் கடக்க வைக்கும் தோணியே இந்தப் பஞ்சாட்சரம். அஞ்செழுத்தை ஓதினால் நஞ்சை அமுதமாக்கலாம். நமசிவாய என்று சொல்லி நமனையும் வெல்லலாம்.

நம் உடல் இறைவன் வாழும் கோயில். இக்கோயிலில் குடியிருக்கும் இறைவன், சுகமாக, சாந்தமாக இருக்க வேண்டின் உடலைத் தூய்மையாக வைத்திருத்தல் அவசியம். உடல் அழுக்கைப் போக்குவது கங்கையாகிய நீர், மன அழுக்கைப் போக்குவது உருத்திராக் கமும் பஞ்சாட்சரமும். நீறு சுத்தாத்மாவைப் பிரதிபலிப்பது.

ஆகவே சிவசின்னங்களை அணிந்து, நினைந்து, தரிசித்து, உணர்ந்து நாம் அழியாத நித்திய வாழ்வைப் பெற்று நிறைவான நித்திய சுகத்தை அனுபவித்து ஆனந்த வாழ்வு வாழ்வோமாக.

யாம் பெற்ற இன்பம்
பெறுக இவ் வையகம்.

## சந்நிதியான் திருப்பதிக்கு வாருங்கள்

சந்நிதியான் திருப்பணிக்கு வாருங்கள்
சாந்திபெற வேலன்துதி பாடுங்கள்
காரிருள் போக்கும் கந்தனும் அவனே!
கவலைகள் தீர்க்கும் சிவன் மைந்தனும் அவனே!

தொண்டைமானாற்றங்கரையில் குடி கொள்பவன்
தொல்லை வினைஅகற்றும் தூய தமிழ்குமரன்
வண்ணமயில் வாகனனே வடிவேலா
வருமடியார் வினை தீர்க்க விரைந்துவா

அழகாய் கோயில்கொண்ட ஆற்றங்கரை முருகனே
பக்தர்களைக் காத்திடும் பன்னிருகை வேலவனே
விக்கினம் தீர்த்திடும் விநாயகனின் தம்பியே
வேண்டுவோர்க்கு வேண்டுவனதரும் வேலவனே

அன்பர்களுக்கெல்லாம் தினம் அள்ளி
வழங்கும் அன்னதானக் கந்தனே
எமக்கெல்லாம் ஆறுதல் தந்து
எம்மை அரவணைத்திடய்யா ஆறுமுகனே!

-பா. உதயகாந்தன்-

அகந்தையைத் துறந்தால் அருளைப் பெறலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(கட்டுரைத்தொடர் - 35

# சித்தர்களின் ஞானம்

– திரு சிவ மகாலிங்கம் அவர்கள் –

## ஈழத்துச் சித்தர் -நயினாதீவு முத்துக்குமார சுவாமிகள்

யாழ்ப்பாணக் குடாநாட்டின் தென் பால் அமைந்துள்ள சப்த தீவுகளின் மத்தியில் நயினாதீவு அமைந்துள்ளது. அலை கடல் மத்தியிலே அமைந்துள்ள இச் சிறு தீவில் சுயம்பு மூர்த்தியாகவும் குண்டலினி சக்தியாகவும் அமைந்து காலத்தைக் கடந்து நின்று ஞாலத்தைக் காத்துக் கொண்டிருப்பவள் அன்னை ஸ்ரீ நாகபூஷணி. அறுபத்து நான்கு சக்தி பீடங்களில் ஒன்றாகிய புவனேஸ்வரி பீடத்தைத் தன்பால் கொண்டு அகிலமெங்கும் அருள்ஒளி வீசிப் பிரகாசித்துக் கொண்டிருக்கிறாள். சீத்தலைச் சாத்தனார் மணிமேகலையில் குறிப்பிட்டுள்ள மணி பல்லவம் என்பது நயினாதீவு என்பதே ஆய்வாளர்களின் முடிபாகும். நாகம் வழிபட்டதால், நாகத்தால் பூசிக்கப்பட்டதால் அன்னை நாகேஸ்வரி என்ற பெயராலும் அழைக்கப் படுகிறாள்.

நாகபூஷணியின் அருளாட்சிக்கு உட்பட்ட நயினாதீவில் பக்தர்கள், சித்தர்கள், யோகிகள், ஞானிகள், ஆன்மீக ஆய்வாளர்கள் எனப் பலரும் வாழ்ந்தார்கள். இந்தத் தீவில் பிறந்து வளர்ந்த அனைவருடைய அகத்திலும் நாகபூஷணி அம்பாள் குடிகொண்டு இருக்கிறாள். பட்டங்கள் பெற்றுப் பதவிகள் வகிப்பவர்கள் பலரும் தன்னை மறந்து தாயே நாகபூஷணி என்று அம்பிகையை ஆராமையுடன் அடிக்கடி தமது நாவால் துதிப்பார்கள். அம்பிகையின் மீளா அடிமைகளாக வாழ்ந்து கொண்டிருந்த ஆறுமுகம் பார்வதி தம்பதிகள் பெற்றெடுத்த எட்டுப் பிள்ளைகளில் ஆறாவது பிள்ளையாக 1897ஆம் ஆண்டு முத்துக் குமார சுவாமிகள் தோன்றினார். சிறு வயதில் நயினையில் கல்வி பயின்ற பின்பு கொழும்பில் பொரளையில் சுருட்டுக்கடை வைத்திருந்த தமையனார் முருகேசு அவர்களிடம் சென்றார். இவருடைய சிந்தனை முழுவதும் தெய்வீக நிலைப்பட்டு இருந்ததினால் வேலையில் ஈடுபாடு குறைந்தது. இதனால் சினங்கொண்ட தமையனார் இவரை வெறுத்துப் பேச இவர் யாருக்கும் சொல்லாமல் கடையை விட்டுச் சென்று விட்டார். இவருடைய தமையனார் முருகேசுவும் உறவினர்களும் இவரைப் பல இடங்களில் தேடியும் கண்டுபிடிக்க முடியாமற் போய்விட்டது.

உயர்திரு முத்துக்குமார சுவாமியாரின் ஆன்மீக சிந்தனைக்கு வழிகாட்டிகளாக பெரியானைக்குட்டிச் சுவாமிகளும், ரமண மகரிஷியும் இருந்துள்ளார்கள். சுவாமியாருடைய காலத்தில் பாரதநாட்டிற்குச் செல்வதற்கு பாஸ்போட், விசா அனுமதிப்பத்திரம் எதுவும் தேவையில்லை. கப்பலிலும், தோணிகளிலும் இந்தியாவிற்குப் போய் வரக்கூடிய வாய்ப்புகள் இருந்தன. நம்முடையவர்கள் பலர் நினைத்தவுடன் இந்தியாவிற்குச் சென்று தலயாத்திரை தீர்த்தயாத்திரை என்பன செய்து வந்தார்கள். சிதம்பரம், இராமேஸ்வரம், திருமறைக்காடு ஆகிய திருத்தலங்களில் பல திருப்பணிகளையும் செய்துள்ளார்கள். முத்துக்குமார சுவாமிகள் இந்தியா

*சகிப்புத்தன்மையைவிட இலாபமான செல்வம் கிடையாது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்று பல தலங்களையும் தரிசித்துக் கொண்டு பஞ்சபூத சிவஸ்தலங்களில் அக்கினித் தலம் என்று போற்றப்படுகின்ற திருவண்ணாமலைத் திருத்தலத்திற்கு வருகை தந்திருந்தார். திருவண்ணாமலையில் இருந்து தன்னை நாடிவரும் பக்தர்களுக்குத் திருவருளை வாரி வழங்குகின்ற உண்ணாமுலை உமையாள் சமேத அருணாசலேஸ்வரப் பெருமானுடைய திருவருளைப் பூரணமாகப் பெற்றார். ரமண மகரிஷியின் அருட்கடாட்சத்தினைப் பெறும் வாய்ப்பு இவருக்கு இங்கே கைகூடியது.

**முர்த்தி தலம் தீர்த்தம் முறையாய்த் தொடங்கினர்க்கு**
**வார்த்தை சொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே**

என்ற தாயுமானவர் வாக்கிற்கமைய இவருக்கு ஞானகுருவாக ரமணமகரிஷி வாய்த்தார். இவரிடத்து விளங்கிய தெய்வபக்தி, ஞானம், தூய்மை, மன அடக்கம், இன்சொல், அருளோடு கூடிய நோக்கு. சிவசிந்தனை என்பன இவரைத் தகுந்த ஒரு குருவிடம் சென்று சேர்த்தன. இவருடைய பக்குவ நிலையை அறிந்த குருநாதர், "நீ உனது ஊருக்குச் செல்லலாம்" என்று உத்தரவு கொடுத்தார். குருநாதரைப் பிரியமனமின்றிப் பிரிந்த முத்துகுமார சுவாமிகள் தமது பிறந்த கிராமமாகிய நயினாதீவுக்கு வருகை தந்தார்.

அருணாசலேஸ்வரருடைய அருள் அமுதத்தினையும், ரமண மகரிஷியின் குருவருளையும் பெற்றுத் திருவண்ணாமலையிலே வாழ்ந்த முத்துக்குமார சுவாமிகள் பல ஆண்டுகளுக்குப்பின் நீண்ட சடையுடனும், காவி உடையுடனும் நயினாதீவுக்கு வருகை தந்தார். நயினையில் தன் தாயாகிய நாகபூஷணி அம்பாள் ஆலயத்திலும் இரண்டாங்காலி முருகன் ஆலயம், வீரகத்தி விநாயகர் ஆலயம், பீடாரி அம்பாள் ஆலயம், காட்டுக் கந்தசாமி ஆலயம் ஆகியவற்றில் தங்கியிருந்து பல அற்புதங்களைச் செய்துள்ளார். இவர் பல ஆண்டுகளுக்குப் பின்பு தனது பிறந்த கிராமமாகிய நயினாதீவுக்கு வந்தபொழுது ஊர் மக்களால் இவரை அடையாளங் கண்டுகொள்ள முடியவில்லை. இவர் பெற்றிருந்த தெய்வீக சக்தி நிலையை அறியாத ஊர்மக்கள் பலரும் பலவாறாகப் பேசிக் கொண்டனர். எங்களுடைய ஆறுமுகத்தாரின் மகன் முத்துக்குமாரசாமியைப்போல் அல்லவா இவருடைய தோற்றம் இருக்கின்றது என்று சிலர் தமக்குள்ளே பேசிக்கொண்டனர். வேறு சிலர் அதற்கு மறுப்புத் தெரிவித்தனர். முத்துக்குமார சுவாமி இருக்கும் இடமோ போன இடமோ யாருக்கும் தெரியாது. அவர் உயிரோடு இருக்கிறார் என்பதே சந்தேகம் என்று சிலர் கூறினார்கள். மிக நெருங்கிய உறவினர் ஒருவர் முத்துக்குமார சுவாமியிடம் நெருங்கிப் பழகி அவர் தங்களுடைய உறவினர் ஆறுமுகத்தாரின் மகன் தான் என்பதைத் தெளிந்து கொண்டார். உற்றார், உறவினர் அவரை அணுகித் தமது இல்லத்திற்கு வருமாறு அழைத்தனர். அவர் யாருடைய இல்லத்திற்கும் செல்வதற்கு மறுத்துவிட்டார். நாளொரு கோயிலாக நயினாதீவில் உள்ள கோயில்களில் சென்று தங்கி வந்தார். கோயில் மண்டபங்களையே தமது வசிப்பிடமாகக் கொண்டார்.

நயினாதீவு நாகபூஷணி வித்தியாசாலையில் அக்காலத்தில் அதிபராக இருந்த திரு நா. கந்தையா அவர்கள் இவரைப் பூரணமாக இனங்கண்டு இவரின் சீடரானார். இறுதி நாள்வரை இவர் சுவாமியின் உத்தம சீடராக இருந்தார். பூபாலசிங்கம் புத்தகசாலையின் அதிபர் அமரர் பூபாலசிங்கம், கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் அதிபர் திரு சண்முகரத்தினம் உட்பட இன்னும் பலர் இவருடைய அருட்பார்வைக்கு உட்பட்ட சிஷ்யர்களாக இருந்தார்கள். இவர் பல சித்துச் செயல்களையும், தம்மை நாடி வருபவர்களுக்கு

*அறிவைவிட அதிக பயனுள்ள புதையல் கிடையாது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல அருள்வாக்குகளையும் கூறியதாக அன்பர்களிடம் இருந்து அறிய முடிகிறது. அக்காலத்தில் இவருடைய மூத்த சகோதரனாகிய கணல்சாமியார் என்று அழைக்கப்பட்டவர் காட்டுக் கந்தசுவாமி கோயிலை அமைத்து வழிபட்டு வந்தார்.

நயினாதீவின் தென்மேற்கு கரையிலே தென் இந்தியாவில் உள்ள இராமேஸ்வரத்துக்கு நேரே நன்னீர் ஊற்று ஒன்று உள்ளதை தமது இறை அனுபவத்தால் அறிந்து கொண்டார். அதிலே ஒரு தீர்த்தத் தடாகத்தை அதிபர் சண்முகரத்தினத்தின் உதவியுடன் வெட்டுவித்தார். அதன் அருகில் சிவாலயம் ஒன்றைக் கட்டுவிப்பதற்கான ஆயத்தங்களையும் செய்வித்தார். அன்னை நாகபூஷணி ஆனிப்பூரணையிலும், சிவராத்திரியிலும், மாசி மகத்திலும் இங்கே தீர்த்த மாடி வருவது வழக்கமாகிவிட்டது. நாளடைவில் தீர்த்தக் கேணியின் அருகில் அடியார்களால் மடம் ஒன்று அமைக்கப்பட்டு அந்தியேட்டிக் கிரியைகள் அங்கே நடைபெற்று வருகின்றன.

ஆத்மஜோதி திரு நா. முத்தையா அவர்கள் பண்டிதர் கிருஷ்ணபிள்ளையைச் சந்திக்க அவரது ஊரான பருத்தித்துறை வியாபாரிமூலைக்குச் செல்ல வந்தவர் இடையில் கோப்பாய் ஆசிரியர் அரசினர் பயிற்சிக் கல்லூரிக்குச் சென்றார். அங்கே ஒரு மரநிழலில் பண்டிதர் கிருஷ்ணபிள்ளை அவர்கள் நிற்பதைக் கண்டு மகிழ்வோடு "கும்பிடப் போன தெய்வம் குறுக்கே வந்ததுபோல- உங்களைச் சந்திக்கும் வாய்ப்பு இங்கே கிடைத்திருக்கிறது" எனக் கூறினார். ஆசிரிய கலாசாலை மாணவர்கள் ஒரு வழியால் அதிபரின் அறைக்கு உள்ளே சென்று வெளியேறுவதைக் கண்டார். நான் என்னை அறியாமலே இங்கு வந்துவிட்டேன் என்று ஆத்மஜோதி கூறிய பொழுது நயினாதீவுச் சுவாமியார்தான் இழுத்து வந்திருக்கவேண்டும் என்றார் பண்டிதர் கிருஷ்ணபிள்ளை. அதன் பின்புதான் நயினாதீவுச் சாமியார் இங்கு வந்திருக்கிறார் என்பதையும் மாணவர்கள் அவரை வணங்கி ஆசீர்வாதம் பெறத்தான் வரிசையாகப் போய் வருகிறார்கள் என்பதையும் ஆத்மஜோதி முத்தையா அவர்கள் உணர்ந்து கொண்டார். மாணவர்களைத் தொடர்ந்து திரு முத்தையா அவர்களும் பண்டிதர் கிருஷ்ணபிள்ளை அவர்களும் உள்ளேசென்று சாஷ்டாங்கமாகச் சுவாமிகளின் காலில் விழுந்து வணங்கி அவருடைய ஆசீர்வாதத்தினைப் பெற்றார்கள். இருவர் நெற்றியிலும் வீபூதியைப் பூசிய சுவாமிகள் "எல்லாங் கைகூடும்" என்று கூறி அமருமாறு பணித்தார்கள். சுவாமி சந்நிதியில் இருவரும் கண்மூடித் தியானத்தில் இருந்தார்கள். சுவாமிகள் முன்னிலையில் தியானத்தில் இருந்ததால் இருவரும் நிறைவான ஆன்மீக அனுபவத்தைப் பெற்றனர்.

சுவாமியார் நயினாதீவுக்கு மீண்டும் வந்த செய்தியை அறிந்த இல்லற ஞானி என்று போற்றப்பட்டவரும் நயினையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் கொழும்பில் வசித்தவருமாகிய இராமச்சந்திரா அவர்கள் சுவாமிகளைச் சந்திப்பதில் பெரிதும் விருப்பம் கொண்டிருந்தார். தாயாரின் மரண வீட்டிற்காக நயினாதீவுக்கு இராமச்சந்திரா அவர்கள் வந்திருந்தார். தனது மைத்துனர் ஒருவரோடு சுவாமிகளைத் தரிசிக்கவேண்டும் என்று விரும்பி அவர் இருக்கும் இடத்தை தேடிச் சென்றார். வீரகத்தி விநாயகர் ஆலயம், இரட்டங்காலி முருகன் ஆலயம் ஆகியவற்றைத் தரிசித்துவிட்டுத் திரும்பும் வழியில் ஒரு மரத்தின்கீழ் சுவாமிகள் இருப்பதைக் கண்டனர். பேரானந்தம் அடைந்த இராமச்சந்திரா சுவாமிகளின் காலில் வீழ்ந்து வணங்கினார். சுவாமிகள் ஆசீர்வதித்து தமக்கு அருகில் அவரை இருத்தினார். இராமச்சந்திரனாரை உற்றுப்

*நற்செயலைவிட அழகான நண்பன் கிடையாது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்த்த சுவாமிகள் "நீயும் நம்பட்டிதான் ஆன்மீக விஷயத்தில் அவசரப்படக் கூடாது" என்று தன் பேச்சைத் தொடங்கினார். "உன்னுடைய தாயார் எனக்கும், இந்த ஊர் மக்களுக்கும், ஏனையோருக்கும் தாயாகவே இருந்தார். அன்னதானம் செய்வதில் ஆனந்தம் உடையவர்" என்று கூறினார்.

நீ இன்னும் சந்திக்க வேண்டிய மகான் ஒருவர் இருக்கிறார். அவர் திருவண்ணாமலையில் எழுந்தருளியுள்ளார். அவர் பெயர் ரமண மகரிஷி. அவரைப் பற்றி நீ கேள்விப்பட்டது இல்லையோ என்றார் சாமியார். ரமண மகரிஷியைப்பற்றி நிறையக் கேள்விப்பட்டு இருக்கிறேன். அவரது வரலாற்றையும் மௌன உபதேச மகிமைகளையும் படித்தும் இருக்கிறேன். ஆனால் அழைப்பு இன்னும் கிட்டவில்லை. திருவருள் கூடும் காலம் இன்னும் வரவில்லை போலும் என்று இராமச்சந்திரா கூறினார். திருவண்ணாமலையில் அந்த மகான் உனக்குத் தாயாகவும், தந்தையாகவும், குருவாகவும் விளங்குவார். அவர் உனது வருகையை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார் எனச் சுவாமிகள் கூறினார்.

முத்துக்குமார சுவாமிகள் யாழ்ப்பாணத்தின் பல ஊர்களுக்கும் சென்று அன்பர்கள், அடியார்களின் இல்லங்களிலும் மடங்களிலும் தங்கி அன்பர்களுக்கு அருள் உபதேசங்களைச் செய்து வந்தார். சில வார்த்தைகளை மட்டும் கூறிவிட்டுத் தியான நிலையில் இருப்பார். சில அடியார்கள் சுவாமிகளுக்குச் சாப்பாடும் கொண்டுவந்து கொடுப்பார்கள். சுவாமிகள் அதனைத் தன்னைச் சுற்றியுள்ள அடியார்களுக்குப் பகிர்ந்து கொடுத்து தானும் உண்பார். இவருடைய உத்தம அன்பராகிய இணுவிலைச் சேர்ந்த வடிவேற் சுவாமிகள் மகாதேவ சுவாமிகளின் சீடராவார்.

இணுவில் பரமானந்தவல்லி ஆச்சிரமத்தில் முத்துக்குமார சுவாமிகள் இடையிடையே போய்த் தங்கி நிற்பார். இவர் அங்கே தங்கும்பொழுது பகற்பொழுதில் இணுவில் கிழக்கில் இருக்கும் காரைக்கால் சிவன் கோயிலில் போய்த் தங்குவார். மரச் சோலைகளின் நடுவிலே தெய்வீகச் சூழலிலே காரைக்கால் சிவன் ஆலயம் அமைந்துள்ளது. சித்தர்கள், ஞானிகள் பலர் நடமாடித் திரிந்த புனித தலமாக காரைக்கால் சிவன் கோயில் திகழ்ந்தது. பெரிய சந்நியாசியார் என்று அனைவராலும் போற்றப்படும் சித்த புருஷர் ஆலயத்தைப் புனரமைத்து நித்திய பூசையை ஏற்படுத்தியிருந்தார். ஆலயச் சூழலிலே மூலிகை மரங்கள், கனி மரங்கள், தெய்வீக மரங்கள், நிழல்தரு மரங்கள் எனப் பல மரங்களை நாட்டினார். பெரிய சந்நியாசியார் சமாதி அடைந்தபின்பு சிவன் கோயில் பராமரிப்பின்றி சிதைவடைந்த நிலையில் இருந்தது. நயினைச் சுவாமிகள் இங்கு தங்கியிருந்தபொழுது இத்தலத்தில் நித்தியபூசை நடைபெற ஒழுங்குகள் செய்ய வேண்டுமென்று அருளினார். வடிவேற் சுவாமிகள் இதனை ஏற்றுப் பல அடியார்களின் ஒத்துழைப்போடு ஒருநேரப் பூசை நடைபெற ஒழுங்குகள் செய்தார்.

நயினாதீவில் ஸ்ரீ மீனாட்சி அம்பாள் கோயில்வீதி வயல்வெளியில் அடியார்களுடன் உரையாடிக்கொண்டிருந்தபொழுது இவரின் சீடர்களில் ஒருவரான திரு ச.நா. கந்தையா அவர்கள் சுவாமிகளுக்கு மதிய உணவு எடுத்துவருவதற்காகப் புறப்பட்டார். சுவாமிகள் அவரைப் பார்த்து, "புறப்படவேண்டாம். சாப்பாடு நம்மைத் தேடி வரும்" என்றார். சிறிது நேரத்தில் அங்கு குழுமியிருந்த கூட்டத்தினர் அனைவருக்கும் உணவு தயாரித்து ஓலைக் கடகத்தில் வைத்துத் தலையில் சுமந்த வண்ணம் திருமதி யோகுப்பிள்ளை கதிரித்தம்பி என்ற அம்மையார் இவர்களை நோக்கி வந்து உணவினைக் கொடுத்தார். இதனைக்

*தலைவனாக இருக்க விரும்புபவனுக்கு ஊழியனாகவும் இருக்க தெரிந்திருக்க வேண்டும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டு சுவாமிகளைச் சூழ இருந்த அனைவரும் வியந்துபோய் நின்றனர். இந்நிகழ்வினை நேரிலே கண்ட சைவப்புலவர் திரு நா. விசுவலிங்கம் அவர்கள் இச் சம்பவத்தை அவரது குருபூசை தினத்தில் தவறாது எடுத்துக் கூறி வந்தார்.

சுவாமியவர்கள் யாழ்ப்பாணத்தில் சிவலிங்கப்புளியடியில் கல்விப் பகுதியில் முன்பு பணியாற்றிய திரு எஸ். சுப்பிரமணியம் அவர்களுடைய இல்லத்தில் தங்கியிருந்தார். அங்கே பல அடியார்கள் வருகைதந்து வாழ்வில் தமக்கு ஏற்பட்ட துன்பங்கள், துயரங்கள் நீங்கவேண்டுமென்று சுவாமிகளை வணங்கி மன ஆறுதல் பெற்றுச் சென்றனர். சுவாமிகளின் சகோதரன் முருகேசு அவர்களின் மருமகள் திருமதி சுந்தரலட்சுமி சுப்பிரமணியம் சுவாமிகளைப் பார்ப்பதற்காகச் சிவலிங்கப்புளியடியில் உள்ள சிவசுப்பிரமணியம் வீட்டிற்கு வந்திருந்தார். அம்மையார் சுவாமிகளைத் தரிசனம் செய்துவிட்டுப் புறப்பட்டபொழுது அவருக்கு ஒன்பது எலுமிச்சம் பழங்களைச் சுவாமிகள் கொடுத்தார். அவருக்கு அப்பொழுது சுவாமிகள் ஏன் எலுமிச்சம் பழங்களைத் தந்தார் என்பது பற்றி எதுவும் விளங்கவில்லை. ஆனால் அம்மையார் பின்பு தனது இல்லற வாழ்வின் இனிய பேறாக ஒன்பது சற்புத்திரர்களைப் பெற்றெடுத்தார்.

தற்பொழுது சுவாமியாரின் சமாதி வைக்கப்பட்டிருக்கும் இடத்திற்கு முன்பாக அமைந்துள்ள மடத்தைக் கட்டிமுடிக்க முற்பட்டபொழுது பணக்கஷ்டம் ஏற்பட்டது. சுவாமியார் கரம்பனைச் சேர்ந்த ஒப்பந்த வேலைகள் செய்யும் தம்பிஜயா அவர்களின் கனவில் தோன்றி கொந்தராத்து வேலை செய்கின்றபொழுது ஓர் பெறுமதிமிக்க இரத்தினக்கல் உமக்குக் கிடைக்கும். அதனை விற்றுப் பெறும் பணத்தில் ஒரு பகுதியினை மடம் கட்டக் கொடுக்கும்படியும் கூறினாராம். சுவாமிகளின் வாக்குப்படியே இரத்தினக் கல்லினைப் பெற்ற தம்பிஜயா அவர்கள் மடத்தினைக் கட்டிக் கொடுத்தார்.

சுவாமிகளை நாடி வந்தவர்கள் பலரும் ஏதோ ஒரு வகையில் பயன்பெற்றே சென்றனர். இவரிடம் விபூதியைப் பெற்ற பலர் உடல்நோய், உளநோய் என்பன நீங்கப் பெற்றனர். ஆத்ம ஞானம் பெறவேண்டும் என்ற பெருவிருப்பத்துடன் அவரை நாடி வந்தவர்கள் அனைவரும் தங்களிடமிருந்த அக இருளை நீக்கி அருள் ஒளியைப் பெற்றார்கள். நயினாதீவில் உள்ள மக்கள் தமது மண்ணின் மைந்தரை முத்துக்குமார சுவாமி என்று அன்புடனும் உரிமையுடனும் அழைத்தார்கள். ஆனால் மற்றைய ஊர்களில் உள்ளவர்கள் சுவாமியாரைப் பெயர்சொல்லி அழைக்க அஞ்சினார்கள். நயினாதீவுச் சுவாமியார் என்றே அனைவரும் அழைத்து வந்தார்கள்.

நயினைச் சுவாமிகள் இணுவில் காரைக்காலில் தங்கியிருந்தபொழுது கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் பணிபுரிந்து அண்மையில் அமரராகிய துறவி க.இ.க. கந்தசாமி ஆறாம் வகுப்பு மாணவனாகப் படித்துக்கொண்டிருந்தார். இவர் சக மாணவர்களுடன் சுவாமிகளைத் தரிசிக்கச் சென்றிருந்தார். இளமைக் காலத்திலேயே தெய்வ நம்பிக்கையும் குரு பக்தியும் கொண்டவராக இவர் வாழ்ந்து வந்தார். இவர்கள் சுவாமியாருக்கு வெகு தூரத்தில் நிற்க சுவாமியார் கந்தசாமியை மட்டும் தம்முன் அழைத்து "கல்வியில் வல்லவனாக, உயர் நிலைக்கு வந்து பணிகள் பல செய்யவேண்டியவன்" என அருள்வாக்குக் கூறியுள்ளார். மற்றவர்கள் தமக்கும் ஏதாவது சொல்லும்படி வேண்டியும் அவர் எதுவும் சொல்ல மறுத்துவிட்டார். இவர் நயினைச் சித்தராகிய முத்துக்குமார சுவாமிகளையே தமது முதல் ஞானகுருவாக வாழ்நாள் முழுவதும் போற்றி வந்தார். சுவாமிகள் இயல்பாகவே கவிபாடும் திறமை

*ஒருவனுக்கு அறிவு இருந்தும் ஆற்றல் இல்லையெனில் அவன் வாழ்வு சிறக்காது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாய்ந்தவர். இவர் இயற்றிய தனிப் பாடல்கள் பல உள்ளன. அறுபத்து நான்கு சக்தி பீடங்களில் ஒன்றாகிய நயினாதீவில் இருந்து அருளாட்சி புரியும் நாகபூஷணி அம்பாளின் அருட்பார்வைக்கு உட்பட்ட முத்துக்குமார சுவாமிகள் அருளிய பாடல்கள் யாவும் தெய்வீக மணம் வீசும் பாடல்களாகவே இருக்கின்றன. நாகபூஷணி அந்தாதி, நாகேஸ்வரி தோத்திர மாலை, நமச்சிவாய மாலை போன்ற பாமாலைகள் பலவற்றைப் பாடியுள்ளார். ஸ்ரீ நாகபூஷணி அந்தாதிமாலையில் வரும் கீழ்க்காணும் பாடல் தாய்த் தெய்வமாக இருந்து அடியார்களுக்கு அருள்பாலிக்கும் அம்பாளின் அருட்கருணையைத் தெளிவாக விளக்கும் பாடலாக அமைந்துள்ளது.

"பெற்றதாய் பார்க்கப் பிள்ளை தான் வருந்திப்
பிறப்பெனும் சாகரத்தாழ
நற்றவமில்லா என்னை நீ விட்டால்
நியாயமோ நல்லுரையாகச்
சென்றவக் கரையில் ஏறியான் உய்யத்
துணையுநீ யேயன்றி யாருளர் சொல்
கற்றவாக்க கினியாய் நயினையெம் பதிவாழ்
கண்மணி நாகபூஷணியே"

சிவலிங்கப்புளியடியில் உள்ள திரு சுப்பிரமணியம் அவர்கள் இல்லத்தில் 1949ஆம் ஆண்டு தைமாதம் 26ஆம் திகதி அபரபக்க பூராட நட்சத்திரத்தில் அடியார்கள் கூட்டம் ஆனந்தக் கண்ணீர் மல்க சுவாமிகள் பரிபூரண நிலையாகிய சமாதிநிலையை அடைந்தார். சுவாமிகள் சமாதி அடையும்பொழுது யோக நிலையில் நிமிர்ந்து இருந்து இறைவனின் ஒளிப்பரப்பில் அவர் இரண்டறக் கலக்கும்போது முகத்தில் பேரொளி வீசத் தேகத்தில் இறை பக்தி அருவியாய் கரந்தொழுக அடியார்கள் அவ்வருவியைத் துணிகளால் ஒற்றி எடுத்து தங்கள் கண்களில் ஒற்றிக்கொண்டார்கள். சிவசிவ என்று அடியார்கள் அனைவரும் ஓசை எழுப்ப அந்த ஓசை ஒலியோடு அவர் சமாதிநிலையை அடைந்தார். இவருடைய பூதவுடலை நயினாதீவு காட்டுக் கந்தசுவாமி கோயிலின் மேற்குப் புறத்தில் அடியார்கள் சமாதி வைத்தனர். சமாதியின்மேல் சோமஸ்கந்தலிங்கம் பிரதிஷ்டை செய்யப்பட்டு நித்திய பூசை நடைபெற்று வருகிறது சமாதிக்கு முன்பாக தென்புறத்தில் மடமும் கட்டப்பட்டு வருடம் தோறும் அவர் முத்தி எய்திய தினத்தன்று அபிஷேக ஆராதனைகள் நடைபெற்று அடியார்களுக்கு அன்ன தானமும் வழங்கப்படுகிறது. ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கான அடியார்கள் அங்குசென்று சமாதியைத் தரிசித்துச் சாந்தி பெற்று வருகின்றனர். (தொடரும்....

**எதிலும் பற்றியும்!**

எல்லாம் கடந்தவன் எங்கும்
நிறைந்தவன் இறைவன்
அல்லாமல் அவன் எதிலும்
பற்றியும் நிற்கவுமில்லை
நல்லையில் மாவையில் கதிர்
காமத்திலுமுறையும் அவனே
செல்வச்சந்நிதியிலும் அருள்
புரியும் ஒரே இறைவனாய்

- இராம ஜெயபாலன் -

*தத்துவ ஞானம் கற்பதால் நமது அற்பச் சிந்தனைகள் நீங்கும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறைவனால் புடம்போட்டு ஆட்கொள்ளப்பட்டஅப்பர்

– திரு பு. கதிரித்தம்பி அவர்கள் –

ஆதியும் அந்தமுமில்லா அருட் பெருஞ் சோதியாகிய சிவபெருமான், மருள் நீக்கியாரை (அப்பர்) ஆட்கொள்வதற்காக, இளமையில் பெற்றோரை இழக்கச் செய்தும், சமணர்களால் துன்புறுத்தப்பட்டும், கைலா யக் காட்சியைக் காண மெய்வருந்தச் செய் தும், நன்கு புடம்போட்டு ஆட்கொண்டார்.

மருள்நீக்கியார் என்ற பிள்ளை நாமத் துடன் வாழ்ந்த அப்பரை கல்விக்காக சமண சமயத்தில் சேர மனம் மாற்றியும், தமக்கை யாரின் அன்பை இழக்கச் செய்தும் சமண பள்ளியில் சேர்ந்து கல்வி கற்க வைத்தார். தருமசேனர் என்ற பெயரில் சமண குருவாக வும் சமணர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டார். இந்நிலையில் தமக்கையார் திலகவதியார் "தம்பியை நம்பி வாழ்ந்தேன், அவன் என்னை விட்டு சமண சமயத்தில் சேர்ந்து, சமண சமய குருவாகி விட்டான். இறைவனே இதற்கு வழி செய்யவேண்டுமென்று தினமும் திரு வதிகை வீராடேஸ்வரரிடம் கண்ணீர் மல்க வேண்டுவாள். இவளுடைய வேண்டுதலை ஏற்ற சிவபெருமான் தருமசேனனுக்கு சூலை நோயை ஏற்படுத்தினார். சூலை நோயால் வாடிய தருமசேனனுக்கு சமணர்கள் மருந் தும் மந்திரமும் செய்து பார்த்தனர். நோய் குணமடையவில்லை. தருமசேனர் சமணர் களுக்குத் தெரியாமல் இரவோடு இரவாக தமக்கையார் இல்லத்தை அடைந்து தனது நோயின் வேதனையைக் கூறிக் கதறினர். தமக்கையார் அவரை அழைத்துச் சென்று திருவதிகை வீராட்டேஸ்வரர் ஆலயத்தில் விபூதி அணியச் செய்து எம்பெருமானை வேண்டும்படி சொன்னார். விபூதி பூசிய தரும சேனனுக்கு நோய் குணமடைய "கூற்றாயின வாறு விலக்ககலீர் கொடுமை பல செய்தன நானறியேன்" என்னும் முதல் அடிகொண்டு பாடலைப் பாடியதும் நோய் குணமடைந்து விட்டது. சமணப் பள்ளியை விட்டுச்சென்ற தருமசேனன், சைவ சமயத்தில் திரும்பவும் சேர்ந்து, எமது சமயத்தை அழிக்கப் போகின் றானென அரசனிடம் முறையிட்டனர். இத னால் சமணர்கள் சுண்ணாம்பறையில் ஏழு நாட்கள் நீர், உணவின்றி அடைத்தும், இறந்து விடாமலும் நஞ்சு கலந்த பாற்சோறு உணவைக் கொடுத்தும் இறவாது இருக்கக் கண்டு, மதங்கொண்ட யானையை ஏவி விட்டும், யானை வலம் வந்து தருமசேனனை வணங்கியதையும் கண்ட சமணர்கள் கல் லோடு கட்டிக் கடலிற் போட்டனர். கல் தெப்பமாக மிதந்து திருப்பாதிரிப்புலியூரை அடைந்ததை அறிந்தனர். இதைக் கேள்விப் பட்ட மன்னன் சைவ சமயமே உண்மையான சமயம் என எண்ணி சைவ சமயத்தைக் கடைப்பிடித்து ஒழுகி பிராயச்சித்தமாக கோயிலையும் கட்டுவித்தான். அப்பரை சோதித்த இரண்டாம் கட்டம் இது. மூன்றாம் கட்டமாக கைலையை தரிசிக்கவேண்டு மென்ற எண்ணக்கருவை இவருக்கு இறை வன் கொடுத்தான்.

அப்பர் கைலையைக் காணவேண்டு மென்ற அவாக்கொண்டு நடந்தும், புரண்டும், நெஞ்சால் தாவியும், உடல் உறுப்புக்கள்

*உண்மையான பெரிய மனிதனுக்கு முதல் அடையாளம் பணிவு.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிதைய, அதையும் பொருட்படுத்தாது மன உறுதியுடன் நிற்பதைக் கண்ட எம்பெருமான் அவர்முன் பிராமண வடிவம் கொண்டு, "அன்பனே! எங்கே செல்கிறீரென வினவ, கைலாயக் காட்சியைக் காணச் செல்கிறேன்" என்றார். அப்பொழுது பிராமண வடிவங்கொண்ட சிவன் தேவர்களே காணமுடியாத சிவனை நீயா காணப்போகின்றாய் திரும்பு" என்றார். இதைக்கேட்ட அப்பர் அநித்தியமான உடலைக்கொண்டு நித்திய பரம்பொருளைக் கண்டாலன்றி திரும்பமாட்டேன் என்றார். எம்பெருமான் "அப்பரே எழுந்திரு. கைலாயக் காட்சியை நீ இக்காட்டிலுள்ள குளத்தில் மூழ்கி திருவையாற்றில் உள்ள சிவன் கோவிலில் காண்பாயென்று" ஓர் அசரீரி வாக்குக் கேட்டது. அதன்படி குளத்தில் மூழ்கி திருவையாற்று சிவன் ஆலயத்தில் எழுந்து கைலாயக் காட்சியைக் கண்ணாரக் கண்டு "மாதர்பிறைக் கண்ணியானை என்னும் முதல் அடியுடைய பாடலில் கண்டறியாதன கண்டேன்" எனப் பாடியருளினார். கைலாயக் காட்சியைக் கண்ட அப்பர் சிவனின் தன்மைகளை விளக்கும் பாடல்கள் பாடினார். பத்துப் பதிகங்களில் முதற் பதிகம் "வேற்றாகி விண்ணாகி நின்றாய் போற்றி" எனத் தொடங்கி காற்றாகி எங்கும் கலந்தாய் போற்றி என இறைவன் தன்மையை விளக்குகின்றார்.

"பிச்சாடல் பேயோடுகந்தாய் போற்றி" எனத் தொடங்கி "கச்சாக நாகமசைத்தாய் போற்றி" எனக் கூறுகின்றார்.

மருவார் புரமூன்று மெய்தாய் போற்றி" என்று ஆரம்பித்து
"உருவாகி என்னைப் படைத்தாய் போற்றி
உள்ளாவி வாங்கி யொளித்தாய் போற்றி
கருவாகியோடும் முகிலே போற்றி எனப் பாடுகின்றார்.

"வானத்தார் போற்றும் மருந்தே போற்றி" எனத் தொடங்கி "தேவர்க்கும் தேவனாய் நின்றாய் போற்றி கானத்தீயாடல் உகந்தாய் போற்றியென்றும் இறைவன் தன்மையை அறிய வைக்கின்றார்.

"ஊராகி நின்ற உலகே போற்றி" எனத் தொடங்கி நேர்வாரொருவரையு மில்லாய் காராகி நின்ற முகிலே போற்றியென அருளுகின்றார்.

சில்லுருவாய்ச் சென்று திரண்டாய் போற்றி எனத் தொடங்கி "புல்லுயிர்க்கும் பூட்சி புணர்த்தாய் பல்லுயிராய் பார்தோறும் நின்றாய், பற்றி உலகை விடாதாய் கல்லுருவாய் நின்ற கனனே" என இறையின் தன்மையை அறிய வைக்கின்றார்.

பண்ணின் இசையாகி நின்றாய் போற்றி" எனத் தொடங்கி விண்ணும் நிலனுந் தீயானாய் மேலவர்க்கும் மேலாகி நின்றாய், கண்ணின் மணியாகி நின்றாய் கைலை மலையானே எனப் பாடுகின்றார்.

இமையா துயிராதிருந்தாய் போற்றி" என ஆரம்பித்து ஊழியே ழான வொருவா அமையா வரு நஞ்சமர்ந்தாய் ஆதி புராணனாய் நின்றாய், கமையாகி நின்ற கனலே" என இயம்புகின்றார்.

மூவாய் பிறவாய் இறவாய் போற்றி" எனத் தொடங்கி முன்னமே தோன்றி முளைத்தாய், காவாய் கனத்திரளே போற்றி"யென முடிக்கின்றார்.

நெடிய விசும்பொடுகண்ணே போற்றிஎன ஆரம்பித்து நீள அகலமுடையாய், அடியும் முடியும் இகலி, கொடியவன் கூற்றம் உதைத்தாய், கோயிலா என் சிந்தை கொண்டாய்,

*ஒருபோதும் நம்பிக்கையை இழந்துவிடாதே. நம்பிக்கை ஒரு தெய்வீக குணம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடிய உருமொடு மின்னே போற்றி கைலை மலையானே" என இறைவன் புகழை அறிய வைக்கிறார்.

உண்ணா துறங்காதிருந்தாய் போற்றி என ஆரம்பித்து, "ஓதாதே வேதம் உணர்ந்தாய், பண்ணாரிசையின் சொற்கேட்டாய், கண்ணாயுலகுக்கு நின்றாய் போற்றி கைலை மலையானே போற்றி போற்றி என இறைவன் தன்மையை விளக்கி நிறைவு செய்கிறார்.

இறைவனால் ஆட்கொள்ளப்பட்ட நாயன்மார்களில் மிகவும் வருந்தப்பட்டு, எண்பத்தொரு வயதுவரை உழவாரப்பணி செய்து சரியை நெறியைப் பூரணப்படுத்தினார் அப்பர் பெருமான். இவரின் பணியை சைவ மக்கள் கடைப்பிடித்து இறை வழிபாடு செய்து, இறைவனடி சேர வழியைத் திறந்துவிடுவான் எம்பெருமான்.

## அன்னமும் காகமும்

பசுமை நிறைந்த அழகிய கிராமம். புழுதி பறக்கும் மண்சாலை வசதி இருந்தது. புழுதி பறக்கும் மண்சாலையைத் தாண்டினால் சிறிய மலைக் குன்று ஒன்று இருந்தது. அந்தக் குன்றின்மேலே ஏறுவதற்கு சரியான பாதை இல்லை. பாதையில்லாததால் மலைக்குன்று மனித நடமாட்டமின்றிக் கிடந்தது.

இதனால் மலைக்குன்றில் உள்ள பறவைகளும் விலங்குகளும் சந்தோசமாக வாழ்ந்தன. குன்று என்பதால் பெரிய மரங்கள் வளரவில்லை. இதனால் மலைக்குன்றின் குகைக்குள் சிறிய பொந்துகளில் பறவைகள் கூடுகட்டி அமைதியாகவும் ஆனந்தமாகவும் வாழ்ந்தன.

அந்தப் பொந்துகளில் அன்னப் பறவை ஒன்றும் தன் குஞ்சுகளுடன் வசித்தது. குஞ்சுகள் போடும் கீச்... கீச்சென்ற சத்தம்கேட்டு இரை ஊட்டி மகிழ்ந்தது. ஒருநாள் கடும் மழை விடாது பெய்தது. அன்னமும் அதன் குஞ்சுகளும் குளிரால் நடுங்கின. கூட்டுக்குள்ளேயே முடங்கிக் கிடந்தன.

அச்சமயத்தில் மழையில் நனைந்தபடி பறந்து வந்த காகம் ஒன்று அந்தக் குகைக்குள் தஞ்சம் புகுந்தது. நடுங்கியபடியே அன்னப்பறவையின் கூட்டருகே நின்றது. நடுக்கமான குரலில் "அன்னமே... அன்னமே... ரொம்பக் குளிருது உன் கூட்டில் சிறிது இடம் தருவாயா? மழை நின்றதும் சென்றுவிடுவேன்... எனக்கு உதவி செய்யேன்..." எனக் கெஞ்சியது.

காகத்தின் கெஞ்சலைக் கேட்டதும் அன்னத்துக்கு இரக்கம் பிறந்தது. அதுவும் காகம் தங்குவதற்கு இடமளித்தது. காகமும் மகிழ்ச்சியுடன் அன்னத்தின் கூட்டில் அடைக்கலமானது- குளிர் நடுக்கமும் நின்றுபோனது. சிறிது நேரத்தில் மழை நின்றது. அன்னப் பறவைக்கு நன்றி சொல்லிவிட்டுப் பறக்கத் தொடங்கியதும் அந்த இடத்தில் எச்சமிட்டது. நாட்கள் சென்றன. காகம் எச்சமிட்ட இடத்தில் இருந்து சிறு செடி ஒன்று முளைகொண்டது. அது ஒரு ஆலமரம். நாட்கள் விரைவாகக் கழிந்தன. பலவருடங்கள் கடந்தன. அந்தச் செடி பெரு ஆலமரமாக வளர்ந்து கிளை பரப்பி நின்றது. அதன் விழுதுகள் குன்றின் அடிவரை சென்றன. மலைக்குன்றில் இருந்து தொங்கும் விழுதுகளைக் கண்ட வேடன் ஒருவன் அதைப் பிடித்து மேலே ஏறினான். அங்கே பொந்தில் சில அன்னங்கள் வசிப்பதைக் கண்டான். உடனே அவற்றைப் பிடித்துக் கால்களைக் கட்டி தனது கூடையில் போட்டுக்கொண்டு இறங்கினான். சந்தோசமாக வசித்த அன்னப் பறவைகள் அன்று தொடக்கம் கவலையில் ஆழ்ந்தன. மகிழ்ச்சிக் குரல்களே ஒலித்த அந்தக் குன்றில் பின்னர் மரண ஓலங்களே ஒலித்தன.

*எல்லாவிதமான செல்வங்களுக்கும் அறிவுதான் வேர்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[தொடர்ச்சி...

# கண்டோம் கதிர்காமம்

– திரு அன்னைதாசன் அவர்கள் –

எங்கே? ஆம் அங்கே. யாழ்ப்பாணத்திலே சத்திரத்துச்சந்தியில் உள்ள ஸ்ரீ ஞான வைரவப்பெருமான் கோவில். இக்கோவிலிலே வருடாவருடம் பட்டிப்பொங்கல் பெருவிழாவாக பசுக்கள் இடபங்களைப் பாதுகாக்கும் அமைப்பினரால் எடுக்கப்படுவதை யாழ்ப்பாணத்து மக்கள் பலரும் அறிவர். இவ்விழாவில் இங்கு உள்ள சமயப் பெரியார்களுடன் இலங்கையில் பசுக்கள் இடபங்களைப் பாதுகாக்கும் ஆர்வலர்களும் கலந்துகொள்வர். அது மட்டுமல்ல இவ்விழாவிற்கு சாதி சமய வேறுபாடுகளின்றி சிங்கள பௌத்தமத முஸ்லீம் இஸ்லாம்மத, கிறீஸ்தவ மத பெரியார்களும் சிறப்பு அதிதிகளாக அழைக்கப்படுவர். அத்தோடு எம்மைப்போன்ற சமயச் சொற்பொழிவாளர்கள் பலர் பேச்சாளர்களாகவும் அழைக்கப்படுவர். இந்த அழைப்பிதழைப் பார்த்தீர்களேயானால் அழகிய மஞ்சள் நிறத்தில் கோவில் கும்பாபிடேக விஞ்ஞாபனத்தைப் போல A3 அளவில் அமைந்திருக்கும். இவ்விழாவில் பசுக்கள் இடபங்கள் ஊர்வலமாக யாழ் நகர வீதிகளில் அழைத்துச் செல்லப்படுவதுடன் விழாவில் பங்குபற்றும் அனைவர்க்கும் சுத்தமான பசும்பாலும் அங்கேயே பொங்கிப் படைக்கப்பட்ட பொங்கலும் பிரசாதமாக வழங்குவர். இத்தகு ஓர் விழாவில்த்தான் இவரை அன்று கண்டது என் நினைவில் பொறிதட்டியது.

ஆம்! அங்கே பசுவதைக்கு எதிரான அமைப்பின் குருநாகல் மாவட்டப் பொறுப்பாளராக இருக்கும் இந்த ஐயா அழைக்கப்பட்டு பிரதம விருந்தினர்களில் ஒருவராக வந்திருந்தார். அங்கு வந்திருந்த வேற்றுமதப் பெரியார்களைப்போல் அந்த அந்த மதங்களுக்குரிய தலைவர்களின் சீருடைகளுடன் இவரும் ஓர் அசல் மௌலவியாக, முஸ்லீம் மதப் பெரியாராகக் காட்சி தந்தார். ஊர்வலத்திலும் பங்குபற்றியிருந்தார். அன்றைய பேச்சாளர்களில் ஒருவரான இவரது பேச்சு என்னையும் சபையோரையும் நன்கு கவர்ந்திருந்ததையும் இங்கு சுட்டிக்காட்டல் தகும். அன்றைய தினம் எனது கோமாதா கீர்த்தனைகள் என்ற தலைப்பில் எம்மால் தொகுக்கப்பட்ட ஒருசில பாடல்களை நானும் பாடி இருந்தேன். எனது நிகழ்வின் முடிவில் என்னிடம் வந்து நன்றாகப் பாடினீர்கள் என்று பாராட்டியதும் நினைவில் பளிச்சிட்டது. ஆம்! அவர்தான் இன்று இங்கு எங்களைத் தமது இல்லத்தில் கருத்தரங்கை நடாத்துவதற்கு ஒழுங்கமைத்துள்ள காரணகர்த்தா பைஸல் பையூப் என்கின்ற முஸ்லீம் பிரமுகர். ஒரு இஸ்லாம் மதத்தினர் பசுவதைக்கு எதிராகக் குரல் கொடுக்கிறார் என்றால் யார்தான் அவரைச் சந்தித்ததை மறப்பர். அவர் என்னை நோக்கி வருகிறார். நானும் பார்க்கிறேன். நான் எழுந்து கை கொடுக்கிறேன். அவரும் கைதந்தவண்ணம் என்னை நன்கு அறிவீர்கள்தானே என்று கேட்க, நானும் பதிலுக்கு ஆம் அறிவேன் என்கிறேன். உங்களது பாடல் நல்லம், மறக்க முடியாது என்கிறார். நன்றி என்று கூறி அறிமுகம் நடைபெறுகிறது. அங்குவந்திருந்த அனைவரும் அறிமுகமாகிக் கொள்கிறார்கள்.

எம் வருகைக்காக அவர்கள் அனைவரும் இரவு 8.00 மணியிலிருந்து காத்திருப்பதாகவும் உங்களுக்கான இரவுச் சாப்பாடு

செல்வங்களைவிட செல்வாக்கு மேலானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தயாராக உள்ளது என்றும் கைகழுவி ஆயத்தமாகுங்கள் என்றும் ஓர் அன்புக் கட்டளையையும் பிறப்பித்தபின் அவர்கள் எங்களுக்கு இரவுச் சாப்பாட்டை வழங்கு வதற்குத் தயாராகின்றனர். எங்களுக்கு அவ் வேளை அவர்களது "கிரிபத்"தும் அதற்கே உரிய செக்கச் செவேலென்ற சம்பலும் முத லில் பரிமாறினர். நேரம் அதிகாலை 4.15 அந்த வேளையில் யாரால்தான் சாப்பிட முடியும். பிரயாணக் களைப்பு, தூக்கக் கலக் கம் என்றாலும் எம்மில் சிலர் அவர்களது அன்பு உபசரிப்பை ஏற்றுச் சாப்பிட்டார்கள். எனது உடல்நிலையைக் கருத்திற்கொண்டு நான் சாப்பிடவில்லை. தொடர்ந்து போதும் போதும் என்றவகையில் பரிமாறிக்கொண் டிருந்தனர். அதனைத் தொடர்ந்து அருமை யான தேனீர் சுடச்சுடப் பரிமாறப்பட்டது. அந்த நேர பிரயாண அசதிக்கு புத்தூட்டும் ஓர் ரொனிக்போன்று அவர்களது சுத்தமான பசும்பால் தேனீர் அமைந்திருந்ததையும் வாச கர்களுடன் பகிர்ந்து மகிழ்கிறேன். எல்லோ ரையும் உபசரிப்பால் திணறடித்தது அக் கணங்கள்.

இங்கே உங்களுக்கு வேண்டிய சகல வசதிகளும் செய்யப்பட்டுள்ளது. நீங் கள் சற்று ஓய்வெடுத்தபின் ஆன்மீக அமர்வு கள் நடைபெறும் தயாராகுங்கள் என்கிறார். கருத்தரங்கிற்குத் தலைமை வகிக்க வந் திருந்த ஜாக்கிரத் சைதன்ய சுவாமி அவர் களுக்கும், சிவன் மேம்பாட்டு நிறுவனத் தலை வர் சுவாமி கலியுகவரதன் அவர்களுக்கும் தனியாக ஓர் அறை அந்தப் பெருமண்டபத் திற்கு அருகில் ஒதுக்கப்பட்டிருந்தது. அதன் அருகில் வேறு ஒரு சிலர் தங்கினர். நீங்கள் எங்களுடன் வாருங்கள் உங்களுக்கான உறைவிடம் அங்கே அருகில் இருக்கிறது என்று ஒரு உதவியாளர் கையில் ரோச்சுடன் எங்களை அழைக்கவும், நான் உட்பட ஆறு பேர் அவரைத் தொடருகிறோம். இருட்டாக இருந்தபடியால் இடம் வலம் ஒன்றும் விளங்கவில்லை. அவரின் பின்னால் நாமும் செல்கிறோம். சிலர் தங்களுடன் செல்போன் ரோச் வைத்திருந்ததால் தட்டுத்தடுமாறி எம் போன்றவர்களும் அவர்கள் பின்னால் செல் கிறோம். சில இடங்களில் ஆங்காங்கே மின் வெளிச்சங்கள் பளிச்சிடுகின்றன. மிக அருமை யான சகல வசதிகளையும் கொண்ட படுக்கை களுடனான தங்குமறை. அசதியால் சற்று தூங்கி விழிக்கின்றோம். அங்கே....

(காட்சி தொடரும்...

## வாசகர் உள்ளத்திலிருந்து...

ஞானச்சுடரில் சில ஆண்டுகளாக அன்னைதாசன் அவர்களினால் எழுதப்படும் "கண்டோம் கதிர்காமம்" கட்டுரைத் தொடரைத் தவறாது நான் வாசிப்பதுண்டு. பலமுறை கதிர்காமம் சென்று தரிசனம் செய்தாலும் கட்டுரையை வாசிக்கும்பொழுது ஓர் புத்துணர்ச்சி ஏற்படுகின்றது. ஆனால் தற்போது சில மாதங்களாக கதிர்காமத்தைவிட்டு மலையகம் பற்றியதான விடயங்களே கட்டுரையில் வந்துகொண்டிருக்கின்றன. இதனால் கண்டோம் கதிர்காமம் என்ற விடயத்திற்கு மாறாகவே கட்டுரை சென்றுகொண்டிருப்பதனால் கண்டோம் மலையகம் என்று தலைப்பை மாற்றுவதே பொருத்தமுடையதாகும்.

எனவே திரு அன்னைதாசன் அவர்கள் இதனைச் செய்வார் என எதிர்பார்க்கின்றேன்.

அல்லாரை,
மீசாலை.

-ச.க. தம்பு-

*தாயின் இதயம் குழந்தையின் பள்ளிக்கூடமாகும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காயத்திரி மந்திரம்

– திரு ம. சிவயோகசுந்தரம் அவர்கள் –

காயத்திரி மந்திரம் வேதங்கள் எல்லாவற்றிற்கும் தாயாக விளங்குவதால் அதை வேதமாதா என்று அழைப்பர். காயத்திரி எல்லாத் தெய்வங்களின் வடிவானவள். (ஸர்வ தேவதா காயத்திரி) காயத்திரிதேவி காயத்திரி, சாவித்திரி, சரஸ்வதி என்ற மூன்று பெயர் களாலும் அழைக்கப்படுகிறாள். காயத்திரி அன்னபூரணி. ஒருவன் எந்த மந்திரங்களையும் ஓதாமலிருக்கலாம். ஆனால் எமது வாழ்வில் காயத்திரி மந்திரம் கட்டாயம் சாதனை செய் யப்பட வேண்டும். இது எங்களின் மூன்றாவது கண்ணாகும். காயத்திரி மந்திரத்தை குறைந்தது மூன்று தடவையாவது (காலை, மதியம், மாலை) கட்டாயம் எல்லோராலும் ஓதப்படுதல் நல்ல பலன்களைத் தரும்.

இந்த மந்திரம் மனிதகுலம் முழுவதற்கும் பொதுவானது. இதை எந்த தேசத்திலும், எந்த நாட்டவரும் ஆண், பெண், குழந்தைகள் என்ற வேறுபாடின்றி சாதி, சமய கட்டுப்பாடின்றி குல, கோத்திர வேறுபாடின்றி உச்சாடனம் செய்யலாம். காயத்திரி மந்திரத்தை உண்மை, பக்தி விசுவாசத்துடன் ஓதுபவர்களுக்கு அது ஆன்மீக ரீதியாகவும், உலகியல் ரீதியாகவும் பலவித நன்மைகளை வழங்கும்.

காயத்திரி மந்திரம் பிரம்மரிஷி விஸ்வாமித்திரரால் கண்டுபிடிக்கப்பட்டது. காயத்திரியின் சக்தியால் ஒருமுறை பிரபஞ்சத்தின் பிறிதொரு தோற்றத்தை உருவாக்கினார். இராமபிரான் பல அரிய ஆயுதங்களை காயத்திரி ஜெபத்தின்மூலமாகவே பெற்றார்.

காயத்திரி மந்திரம் பின்வருமாறு அமையும்.

**ஓம்**

**பூர் புவஸ் ஸ்வக**

**தத் சவிதுர் வரேண்யம்**

**பர்கோ தேவஸ்ய தீமஹி**

**தியோ யோந, பிரசோதயாத்**

இதன் அர்த்தம்- ஓம் மாதா, முக்காலம், மூவுலகம், முக்குணம் ஆகியவற்றில் உறைபவளே. எனது புத்தியை கூர்மையடையச் செய்து சூர்யப் பிரகாசம் எல்லா இருளையும் அகற்றுவதுபோல, எனது சகல அறியாமைகளையும் அகற்றி எனது புத்தியை சாந்த சித்த நிர்மலமானதாக பிரகாசிக்கச் செய்யும்படி யான் உன்னைத் துதிக்கின்றேன்.

இதைப் பெண்கள் உச்சாடனம் செய்யக்கூடாது என்று கூறுபவர்களும் உண்டு. முதலில் காயத்திரி தேவியே ஒரு பெண்ணாவாள். காயத்திரி மந்திரத்தை தாய்மார் உச் சாடனம் செய்ததால் பிரகலாதன் கருவில் இருந்தபோது அவருக்கு நாரதர், நாராயண மந்திரத்தை உபதேசித்தார். அபிமன்யு கருவில் இருந்தபோது கிருஷ்ணபகவான் அவருக்கு "சக்கர வியூகம்" உபதேசித்தார். மேலும் கிருஷ்ணர் வேதங்களில் "நான் காயத்திரி" என்று கூறியுள்ளார். ஆகவே பெண்கள் இந்த மந்திரத்தை உச்சாடனம் செய்தால் கணவனுக்கு

*தேடினால் அகந்தை ஓட்டம் பிடிக்கும். எஞ்சிநிற்பது ஆத்மாவே.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயுள் விருத்தியும், குழந்தைகளுக்கு நல்ல கல்வி, நற்குணம், குடும்ப நலன்கள் ஆகிய வையும் உண்டாகும்.

இந்த மந்திர மேன்மையை உணர்ந்த இராமகிருஷ்ண பரமஹம்சர், சுவாமி விவே கானந்தர், மகாத்மா காந்தி, சுவாமி சிவானந் தர் இதைப் பொதுமக்களிடையே வெளியிட முயற்சித்தபோதும் அது போதுமான பலன் களைத் தரமுடியாமற் போய்விட்டது.

வேத மந்திரங்களில் இந்துக்களை விட மேலை நாட்டவர்கள் அதிகமாகப் பயன் படுத்துகிறார்கள் என்பது மறுக்கமுடியாத உண்மையாகும். அவர்கள் இதை விஞ்ஞான ரீதியாக பரீட்சித்து அதன் உண்மைகளைக் காண்கிறார்கள். காயத்திரி மந்திரத்தை வெளியே கொண்டுவர பகவான் சத்திய சாயி பாபா யோன்கிஸ்லப் என்ற அமெரிக்கரை (அமெரிக்க சாயி நிறுவனத் தலைவராக இருந்தவர்) இந்தியாவிற்கு அழைத்து அவ ருக்கு காயத்திரி மந்திர உச்சரிப்பையும் சக்தியையும் பயனையும் விளக்கி அதை உலகெங்கிலுமுள்ள கிட்டத்தட்ட 150 சாயி நிலையங்கள்மூலம் பரப்புமாறு கேட்டார். அவர் எல்லா நாட்டிலுமுள்ள சாயி நிலையங் களுக்கும் அவர்களுடைய பிரார்த்தனை களின்போது மூன்றுமுறை காயத்திரி மந் திரம் ஓதப்படல் வேண்டுமென ஒரு அறி வித்தல் விடுத்தார். அதன் பயனே இன்று உலகெங்கிலும் காயத்திரி மந்திரம் பரவி, அதை விடுமுறை நாட்களில் ஒரு சாதனை யாகச் செய்கின்றார்கள். யாழ்ப்பாணத்திலும் 1995இல் கிட்டத்தட்ட 500 பாடசாலைகளில் காயத்திரி மந்திரமும் அவர்களது நாளாந்த பிரார்த்தனைகளுடன் நடைபெற்றுவருகிறது. இதை ஸ்ரீ சி. ஈஸ்வரலிங்கம், ஸ்ரீ சு. சரவண பவன் ஆகியோர் நேரடியாக சென்று மாண வர்களை பயிற்றுவித்தார்கள். அமெரிக்க நாசாவைச் சேர்ந்த விஞ்ஞானியாக விளங்கிய டாக்டர் டர்டோ சாயி என்பவர் தாய்லாந்து மனித மேம்பாடு கல்வி நிலையத் தலைவராக உள்ளவர். இவர் காயத்திரி மந்திர மகிமை யைத் தாவரங்கள், மிருகங்கள், பாடசாலைப் பிள்ளைகள் உட்பட காயத்திரி மந்திரம் ஓதப்படும் இடங்களிலும் சாதாரணமாக ஓதப் படாத இடங்களிலுள்ள வித்தியாசங்களை விஞ்ஞான ரீதியாக நிரூபித்துள்ளார். இவர் இருமுறை யாழ்ப்பாணம் வந்துமுள்ளார்.

காயத்திரி மந்திரத்தை ஒழுங்காக வும் முறையாகவும் விசுவாசத்துடனும் ஓது பவர்கட்கு இது நோய்களை தீர்க்கும் சர்வ ரோக நிவாரணியாகவும், துக்கம்- துன்பம் நீக்கும் சர்வதுக்க பரிவாரணியாகவும், சகல விருப்புக்களையும் நிறைவேற்றும் காரணி யாகவும் செயற்படுகின்றது.

காயத்திரி மந்திரம் முறையாக ஓதப் படல் வேண்டும். ஆனால் அதை விசுவாச மாக, அன்புடன் ஓதும்போது காயத்திரித்தாய் அதை ஏற்றுக்கொள்ளுவாள். ஆனால் இதன் சரியான உச்சரிப்பு பாராயணம் எல்லா சாயி நிலையங்களிலும் ஒலி, ஒளி வடிவில் பெற முடியும். ஆகவே இதை முறைப்படி ஓது வதே சாலச் சிறந்ததாகும். இது சில இடங் களில் ராகங்களுடன் கூடியதாக ஒலி நாடாக் களில் உள்ளது. இது மிகத் தவறானது.

ஒருமுறை சிவதொண்டன் நிலையத் தில் காலை மாலை பூசைகளை நடத்தும் கந்தப்பிள்ளை ஆசிரியர் யோகர்சுவாமி முன் னிலையில் சிவபுராணத்தை இராகத்துடன் பாடினார். உடனே யோகர்சுவாமிகள் அவரை நோக்கி "எட இது தமிழ் வேதமடா. இதை இராகத்துடன் பாடக்கூடாது" என யோகர் சுவாமிகள் கூறியதுடன் தாமே பாடிக் காட்டி னார். இது இப்பொழுது எங்கும் யோகர் சுவாமிகள் பாடிக் காட்டியபடி பயபக்தியுடன் பாடப்படுவதைக் காணலாம். பிரித்தானியா வைச் சேர்ந்த ஜே.பி.எஸ். கல்டேன் எனும்

*எளிமையைப் பின்தொடர்ந்து மகிழ்ச்சி வருகிறது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஞ்ஞானி காயத்திரியின் உச்சரிப்பால் ஏற்படும் அதிர்வலைகளை ஆராய்ந்து காயத்திரி மந்திரமானது எல்லா விஞ்ஞான ஆய்வு கூடங்களிலும் எழுதினால் நல்ல பலன்களைத் தரும் என்று கூறியுள்ளார். இந்திய பிரபல விஞ்ஞானியாகவும் ஜனாதிபதியாகவும் இருந்த அப்துல்கலாம் இதன் பெருமைகளை நேரடியாக அனுபவித்து தனது விஞ்ஞான ஆராய்ச்சிகளுக்கு காயத்திரி மந்திர ஜெபம்மூலம் பல அரிய பலன்களைப் பெற்றார்.

இன்று எம்மிடையே குறிப்பாக இளைஞர்களிடையே காணப்படும் ஒழுக்கமின்மை, கல்விக்குறைபாடு போன்ற குறைகளை நீக்கி எல்லோருக்கும் சிறப்பு, கல்வி, அமைதி என்பன உண்டாகவும் விபத்துக்கள், ஆபத்துக்கள், பிணிகள், துர்ச்செயல்கள் நீங்கவும் காயத்திரி மந்திர உச்சாடனம் நிட்சயம் பலனளிக்கும். அண்மையில் அமெரிக்காவில் நடந்த இயற்கை அழிவுகள் காயத்திரி ஜெபத்தால் மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியது நாம் கண்ணால் கண்ட உண்மையாகும். ஆகவே காயத்திரி மந்திர ஜெபத்தினை குறிப்பாக இளம் சமுதாயத்தில் பரப்ப ஆன்மீக நிறுவனங்கள், பெரியோர்கள், பாடசாலை சமூகம் கவனமெடுத்தால் இப்பொழுது நிகழும் வேண்டத்தகாத நிகழ்வுகளுக்கு ஒரு மிகப்பெரிய பலனைத் தரும் என்பது அசைக்க முடியாத உண்மையாகும்.

சமஸ்த லோகா சுகினோ பவந்து
(எல்லா உலகமும் இன்புற்று வாழ்க)

## குரு என்பவர் யார்?

உலக வாழ்க்கை என்பது கரை காண இயலாத ஆழ்கடல் போன்றது. இதைக் கடப்பதற்குத் திசை காட்டியாக விளங்குபவர் குரு. “கு” என்பதற்கு அஞ்ஞானம் என்றும் “ரு” என்பதற்கு அஞ்ஞானத்தை நீக்குபவர் என்றும் ஒரு பொருள். குருவை குலபதி என்றும் சொல்வார்கள்.

ஓர் அரசனது மகன் சிறுவயதில் வழிதவறி நாட்டைவிட்டு காட்டுக்குப் போய்விட்டான். அங்கு அவனை ஐந்து வேடர்கள் பிடித்துத் தங்கள் விருப்பம்போல் ஆட்டிப் படைத்தனர். அவர்களால் பெரிதும் துன்பங்களை அனுபவித்த இளவரசன், இவர்களிடமிருந்து தப்பித்தால் போதும்! என்று நினைத்தான்.

ஒருசமயம் அரசன் அந்தக் காட்டிற்கு வேட்டையாடுவதற்கு வந்தான். அங்கு அவன் காணாமல்போன தன் மகன் இருப்பதைக்கண்டு மகிழ்ச்சியடைந்தான். அரசன் கண்ணீருடன் “நீ என் மகன்! விதியால் உனக்கு இந்தக் கதி ஏற்பட்டது. என்னுடன் வா நாம் நம் அரண்மனைக்குப் போகலாம்” என்று கூறி அவனை அழைத்துச் சென்றான். இது நம்மை நல்வழிப்படுத்தும் ஒரு தத்துவக் கதையாகும். இதில் அரசன் என்பது இறைவன்-பரமாத்மாவைத்தான் குறிப்பிடுகிறது. இளவரசன் என்பது ஜீவாத்மாவையும், ஐந்து வேடர்கள் என்பது ஐம்புலன்களையும் உணர்த்துகிறது.

ஐந்து புலன்களால் ஆட்டி அலைக்கழிக்கப்படும் உயிர்களை இறைவனே குருவடிவத்தில் வந்து ஆட்கொள்கின்றான் என்பதை உணர்த்துகின்றது.

-ஆர்.வீ. கந்தசுவாமி-

*வாழ்க்கை என்பது அடித்தல் அல்லது அடிபடுதல்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நித்திய அன்னப்பணிக்கு உதவிபுரிந்தோர் விபரம் (தொடர்ச்சி...)

| | | |
|---|---|---|
| ந. குணபாலன் | மானிப்பாய் | 3புட்டி அரிசி |
| சிதம்பரப்பிள்ளை புத்தகசாலை | நெல்லியடி | 5000. 00 |
| N. தவலோசினி | புத்தூர் | 1000. 00 |
| K. அரியரத்தினம் குடும்பம் | கந்தரோடை | 600. 00 |
| ச. பாலசுப்பிரமணியம் | சுவிஸ் | மரக்கறி, 2மூடை அரிசி |
| சு. சுவர்ஜன் | கைதடி | 5000. 00 |
| செ. அருமைராசா, அ. பற்குணநாதன் | இளவாலை | 2500. 00 |
| அ. விக்னேஸ்வரன் | சங்கானை | 5000. 00 |
| ராகுலன் சுவேதா | சுண்ணாகம் | 2000. 00 |
| திரு அன்னலிங்கம் குடும்பம் | வல்லிபுரக்கோவில் | 1000. 00 |
| சப்பற உரிமையாளர் | வல்வெட்டித்துறை | 30000. 00 |
| ஶ்ரீ சிவராம் ரேடேர்ஸ் | யாழ்ப்பாணம் | 3புட்டி பருப்பு |
| கா. தயாபரன் | கொழும்பு | 6மூடை அரிசி |
| சி. சசிதரன் குடும்பம், க. சிதம்பரநாதன் குடும்பம் | வட்டுக்கோட்டை | 2000. 00 |
| சி. அசிதன் | வட்டுக்கோட்டை | 1000. 00 |
| ந. விஷ்ணுகுமார் | அச்சுவேலி | 4000. 00 |
| மணியம் இன்பெக்ஸ் | யாழ்ப்பாணம் | 10000. 00 |
| ய. அநிருத்தனன் | யாழ்ப்பாணம் | 2000. 00 |
| சின்னப்பு ரமேஷ் | உடுப்பிட்டி | 1மூடை அரிசி |
| திருமதி T. ராஜதுரை | கொழும்பு-6 | 2000. 00 |
| தங்கவேல் ஶ்ரீகாந்தன் | காரைநகர் | 5000. 00 |
| த. பிரகாஸ் | அல்வாய் கிழக்கு | 5000. 00 |
| கண்ணதாசன் வசந்தகுமாரி | வல்வெட்டித்துறை | 10000. 00 |
| திருமதி K. ராதாகிருஷ்ணன் | நுவரெலியா | 1000. 00 |
| வே. ஸ்கந்தராசா | சாவகச்சேரி | 2000. 00 |
| சரவணா ரெக்ஸ் | நெல்லியடி | 25000. 00 |
| K. கீர்த்திகன் | யாழ்ப்பாணம் | 500. 00 |
| சூ. சுகந்தி | வவுனியா | 1000. 00 |
| ஆ. நவரத்தினசாமி குடும்பம் | கொழும்பு | 10000. 00 |
| ச. தனேஷன் | சுதுமலை | 1000. 00 |
| வேலும்மயிலும் மில் | பரந்தன் | 2மூடை அரிசி |
| ம. நேசம் | ஊரெழு | 500. 00 |
| லோ. தனுரா | வவுனியா | 2000. 00 |

தன்னை முற்றும் இழந்த நிலையிலேதான் அன்பு தோன்றக்கூடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| ல. சிவகாந்தன் | புத்தூர் | | 20000. 00 |
| பூ. சிங்கராஜா குடும்பத்தினர் | ஜேர்மனி | | 5000. 00 |
| த. ஜெயபாலன் குடும்பத்தினர் | பிரான்ஸ் | | 5000. 00 |
| வி. ஜெயவீரசிங்கம் குடும்பம் | அராலி | | 4000. 00 |
| ஆ. சந்தோஷ் | சிறுப்பிட்டி மேற்கு | | 1000. 00 |
| இ. மகாலிங்கம் குடும்பம் | சங்குவேலி | | 10000. 00 |
| யோ. ஆதவன் | திக்கம் | | 2000. 00 |
| T. சண்முகவரதன் | தொண்டைமானாறு | | 5000. 00 |
| க. கந்தவனம் | லண்டன் | | 10000. 00 |
| ம. தம்பிராசா குடும்பம் | கரவெட்டி | 1மூடை அரிசி | 5000. 00 |
| Dr S. சிவகுமார் | யாழ்ப்பாணம் | | 5000. 00 |
| T. தவரூபன் | யாழ்ப்பாணம் | | 5000. 00 |
| T. சுதர்ஷன் | புத்தூர் | | 500. 00 |
| வி. கஜானா | அளவெட்டி | | 2000. 00 |
| வி. தனக்குமார் | அளவெட்டி | | 1000. 00 |
| தாரணி ராதாகிருஷ்ணன் | அமெரிக்கா | | 5000. 00 |
| சு. முத்துலிங்கம் | கோண்டாவில் | | 1000. 00 |
| தே. பிரணவன் | மானிப்பாய் | | 5000. 00 |
| இ. லில்லிமகாதேவி | மல்லாகம் | | 1500. 00 |
| T. காசிலிங்கம் | சுதுமலை வடக்கு | | 2000. 00 |
| க. பாலாம்பிகை | கரவெட்டி | | 1000. 00 |
| திரு பரமநாதன் குடும்பம், ப. ரவிசங்கர் | கொழும்பு | | 10000. 00 |
| க. ஆர்த்திகன் | உடுப்பிட்டி | | 5000. 00 |
| திரு சிவமோகன் நர்த்தனன் | கொக்குவில் | | 3000. 00 |
| சி. வைரவப்பிள்ளை | பொலிகண்டி (U.K) | | 3000. 00 |
| வின்ரல் நெற் வேக்ஸ் | கொக்குவில் | | 2000. 00 |
| சி. தங்கமலர் | ஏழாலை | | 2000. 00 |
| சி. லவன் | கொக்குவில்மேற்கு | | 5000. 00 |
| S. சுரேஷ் | கோண்டாவில் | | 800. 00 |
| தெ. பிரேமினி | நெல்லியடி | | 2000. 00 |
| சு. மதன் | அல்வாய் | | 2000. 00 |
| S. மனோகரன் | கனடா | | 5000. 00 |
| சு. கனிஷா | உடுவில் தெற்கு | | 5000. 00 |
| P. கலைமகள் | கொக்குவில் | | 1500. 00 |
| S. சக்திதரன் குடும்பம் | கொழும்பு-13 | | 2000. 00 |
| சி. ஜெயநாதன் | கரவெட்டி | 1புட்டி அரிசி | 2000. 00 |
| நா. பஞ்சலிங்கம் | குப்பிளான் | மரக்கறி 2மூடை அரிசி | |
| ச. தியாகராஜா | கைதடி | | 1000. 00 |

(தொடரும்...

*வீட்டில் குழந்தைகள்போல் தோட்டத்தில் மலர்கள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோமசுந்தரப் பெருமான் செய்த இரசவாதம்

– திரு அ. சுப்பிரமணியம் அவர்கள் –

இரசவாத வித்தை சித்தபுருடர்களது கைவந்த கலையாகும். கருவூர்த்தேவர் மன்னருடைய கோரிக்கையாகிய தனித்தங்கத்தில் நடேசர்சிலை செய்துதர ஒப்புக்கொண்டு இரசவாதம் செய்து சிறையாக அவர் குருவாகிய போகர் ஞானத்தின்மூலம் அரண்மனையணுகி இரசவாதம் செய்து கருவூரரை விடுவித்தமை வரலாறு.

தமிழகத்திலே தமிழ்க் கருவூலமாக விளங்கும் புராணங்கள் நான்காகும். அவற்றுள் திருத்தொண்டர் புராணம் எனப் பெயருடைய பெரியபுராணம் ஒன்று. இது 63 நாயன்மார்களது சிவதொண்டுபற்றி விரித்துரைப்பது. "தொண்டர்தம் பெருமை சொல்லவும் அரிதே" என்கிறார் ஔவைப்பிராட்டி.

"திகட சக்கரம்" என முருகப்பெருமான் அடியெடுத்துக் கொடுக்கக் கச்சியப்ப சிவா சாரிய சுவாமிககளால் பாடப்பெற்றது கந்தபுராணம். இஃது "மேன்மைகொள் சைவ நீதி" உலகெலாம் பரவுதற்கு உதித்தது. "கருணைகூர் முகங்களாறும் கரங்கள் பன்னிரண்டும் கொண்டு உலகம் உய்ய வந்தது" என்கிறார் ஆசிரியர். இப்புராணம் முருகப் பெருமானால் திருத்தம் செய்யப்பட்ட பெருமை பெற்றது. கந்தசஷ்டி காலங்களிலும் முருகனாலய மகோற் சவத்தின்போதும் புராணம் படிக்கப்பெற்றுப் பயன்தரு பொருள் கூறப்படுவது கண்கூடு.

அடுத்து மணிவாசகப் பெருமானது பிறப்பு, கல்வி முதல்மந்திரிப் பதவி மற்றும் நிகழ்வு கள் பதிகங்கள் பற்றிக் கூறுவது திருவாதவூரடிகள் புராணமாகும். இது மார்கழிமாத திரு வெம்பாவை காலத்திலும் ஆவணி ஓண நட்சத்திர நாளிலும் முறையே அம்மன் கோவில் களிலும் சிவ தலங்களிலும் படித்துப் பொருள் கூறப்படுவது யாவருமறிந்த நிகழ்வுகளாகும்.

பரஞ்சோதி முனிவர் அருளியது திருவிளையாடற் புராணம் ஆகும். இதில் மதுரை மாநகரிலே கோவில்கொண்டு திருவருள் நல்கும் சோமசுந்தரப் பெருமான் நடத்தியுள்ள 64 திருவிளையாடல்கள் பேசப்படுகின்றன. இவற்றுள் மூன்றாம் தொகுதியாகிய மதுரைக் காண்டத்தின் தொடர்ச்சியான கூடற் காண்டத்தின் 36ஆம் படலமாகிய இரசவாதம் புரிந்தமை பற்றி விளம்புகிறது. இதுபற்றிச் சிறிது வெளிப்படுத்துவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

பொன்னனையாளிதான் கதாநாயகி. இராசேந்திர பாண்டியராசனது ஆட்சிக்குட்பட்ட செந்தமிழ் நாட்டிலே அருள்பொழியும் திருப்பூவணம் எனும் சிவதலம் உள்ளது.

திருத்தர் பூவண நாதரைச் சேவித்துச் சுத்த
நிருத்தமாடி வந்தடியரைப் பொருளென நினையுங்
கருத்த ளாயருச்சித்தவர் களிப்பின் சுவை யூண்
அருத்தி எஞ்சிய திருந்துவாள் அஃதவ நியமம்.

திரு.விளை. புராணம்- 1862

என்றவாறு பொன்னனையாளது தன்மை கூறப்படுகிறது.

*தன்னைத்தான் அடக்கியவன் தன் விரோதியை அடக்குவான்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயினும் தங்கத்தில் சிவலிங்கம் உருவாக்கும் ஆசை விடவில்லை. இதனை ஊகித்துணர்ந்த மதுரை ஆடல் நாயகராகிய சோமசுந்தரப் பெருமான் ஆடலரசிக்கு உதவும்பொருட்டு

துய்ய நீறணி மெய்யினர் கட்டங்கள் தொட்ட
கையர்யோக பட்டத் திடைக் கட்டினர் பூதிப்
பையர் கோவணமிசை யசையுடையினர் பவளச்
செய்ய வேணியர் அங்கொரு சித்தராய் வருவார்.

திரு.விளை. புராணம் 1866.

இவ்வாறு அங்கு வந்தவர் பொன்னனையாளின் மாளிகையை அடைந்து மற்று மடியார்களுடன் சேர்ந்து அமுதுண்ணாது கடை வாயிலில் ஒதுங்கியிருந்தார். திருவமுது செய்த அடியவர்கள் வாழ்த்துரைத்துச் சென்றதன் பின்பு கடைவாயிலில் இருந்த அடியவரைக் கண்ட தாதியர் "திருவமுது செய்வதற்கு உள்ளே எழுந்தருளுமாறு பாதம் பணிந்து வேண்டினர்." அதுகேட்ட சித்தபுருடர் "உங்கள் தலைவியை இங்கு வரவழையுங்கள்" என்றார். சேடியர் உள்ளே சென்று தலைவியின் தாள் பணிந்து சித்த மூர்த்தியாகிய மகான் ஒருவர் இதுவரை திருவமுது செய்யாது வாசலில் இருக்கின்றார்கள் என்று கூறினர்.

இதுகேட்ட பொன்னனையாளாகிய இல்லத்தரசி கைவேலைகளை ஒதுக்கி வைத்துவிட்டு ஓடோடி வந்து மகானது தாள் பணிந்து "தேவரீர் வரவு நல்வரவாகுக" என வணங்கி வாழ்த்தி ஆசிவேண்டி நின்றாள். அவ்வாறு வேண்டுதல் செய்தவரை உற்று நோக்கிய சித்தர் "இளமையும் செல்வமும் நீர்க்குமிழிபோல் நிலையற்றது. தருமம் ஒன்றே நிலையானது. அதற்காதாரமாக மகேசுர பூசையும் சிவபூசையும் செய்து வருகிறாய். அதனால் இம்மை, மறுமை ஆகிய இரு பயன்களையும் பெற்றுள்ளாய். எனினும் தங்கத்தினால் விக்கிரகம் வார்ப்பித்து வழிபாடு செய்ய வேண்டுமென்ற ஆசையை நிறைவேற்றவே சித்தராக வந்துள்ளேன். எனவே உன் வீட்டிலிருக்கும் பித்தளை, வெங்கல, ஈயப் பாத்திரங்களை எடுத்து வா" என்றார். சித்தர் கேட்டபடி கொடுத்தவற்றில் "பஞ்சாட்சரம் ஓதி" இவை யாவும் பொன் ஆகுக" என்று விபூதி சாத்திப் பொன்னனையாளிடம் கொடுத்து "இவற்றை இரவு தீயில் இடப் பொன்னாகிவிடும். அது கொண்டு இறை திருமேனியை வார்ப்பிக்க" என்றார்.

மகிழ்ந்த பொன்னனையாளும் தாதியரும் அடிபரவி இரவு தங்கி அமுதருந்திப் பாத்திரபண்டங்களை தங்கமாக்கி தந்து விட்டுச் செல்லுமாறு கேட்டனர். (தாங்கள் அக்கினியிடத் தங்கம் ஆகுமோ? என்ற பயம் போலும்)

ஆனால் அங்கையற்கண்ணி பாகராகிய சோமசுந்தரப் பெருமான்" மிகச் சிறப்புடைய மாடங்கள் உயர்ந்த மதுரை மாநகரில் வசிக்கும் சித்தர் யாம்" என்று கூறி மறைந்தருளினார்.

பின்பு சித்தரது கட்டளைப்படி பாத்திரங்களை இரவு தீயிலிட்டுத் தங்கமானது கண்டு மகிழ்ந்தார்கள். இஃது ஆணவமலம் வலிகெட இறையடி அடைந்தவர் சிவமயமாக விளங்குதல்போல் உலோகம் நெருப்பிலிடக் களிம்பு நீங்கி தங்கமானது. பொன்னனையாள் தீயில் உருவாகிய தங்கத்தின் மூலம் உருவமேயில்லாத இறைவனுக்கு ஒரு திருவுருவம் வார்ப்பித்து விக்கிரகத்தை நோக்கி அச்சோ! அழகனோ? முருகனோ? சுந்தரனோ? என வணங்கி முத்தமிட்டு

*இன்பம் கனவில் இல்லை, வாழ்க்கையில்த்தான் இருக்கிறது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விக்கிரகத்தைப் பிரதிட்டை செய்வித்து பூசை வழிபாடுகளுடன் மகோற்சவமும் நடாத்தி மகிழ்ந்தாள். இதனால் செல்வம் பன்மடங்கு பெருகியது. அதனைக்கொண்டு பல அறப் பணிகளை மேற்கொண்டு வந்தாள். அடியார் கட்கு அமுதம் அளிப்பதிலும் ஆலயத்தின் ஆடல் சேவையிலும் ஈடுபட்டாள். இதன் பயனாய் இம்மை, மறுமைப் பயன்களைப் பெற்று இறையடி நீழல் எய்தினாள்.

சித்தர் விளையாட்டுப்பற்றிய சுவை யான கதை பூவுலகில் நிலவுகிறது. அஃதாவது ஒரு கோவிலில் நடந்த பூசை வழிபாட்டில் மிகவும் பக்தியுடன் ஈடுபட்டவர்களைப் பார்த்த இறைவி இறைவனை நோக்கி "ஆகா! பூவுல கோர் எம்மீது எவ்வளவு பக்தியாக இருக்கிறார் கள் பார்த்தீர்களா?" என்றார். "இது பக்தி அன்று; வேண்டுதல்" என்றார். "ஏன்? அவ் வாறு கூறுகிறீர்கள்" என்றவரை "வா அங்கு சென்று பார்ப்போம்" என்றழைத்து வந்தவர் "சிவபெருமான் வந்திருக்கிறேன்; உங்கள் வழிபாடு கண்டு மகிழ்ந்தோம். விரும்பியதைக் கேளுங்கள் தருகிறேன்" என்றார். அது கேட்டுக் கோபமுற்ற கோவில் பூசகர் "நீர் சிவன் என்பதற்கு ஆதாரம் யாது?" என்றார்.

அதற்குச் சிவன் "எல்லா வல்லமையும் உடை யேன்" என்றவர் அங்கிருந்த பித்தளைச் செம்பைத் தருவித்து ஐந்தெழுத்தோதி நீறு சாத்தித் தடவ அது தங்கமானது. இதுகண்ட பூசகர் வந்திருப்பவர் உண்மையாகவே பரம் பொருளாய சிவன்தான் எனக்கூறி, "இதோ பித்தளை தங்கமாகி விட்டது" என்று காட்டி னார். அதுகண்ட வழிபாட்டாளர் வீட்டுக்கு ஓடிச்சென்று எடுத்துவந்த தமது பித்தளைப் பாத்திரங்களைத் தங்கமாக்கக் கோரினர். இவர்கள் காட்டுவது உண்மையான பக்தி அன்று. தேவைக்கே என்பதைக் காட்டி மறைந்தருளினார் இறைவன்.

இந்நிலையில் "சித்தர்களின் ஞானம்" எனும் தலையங்கத்தில் இந்தியாவிலும் இலங்கையிலும் வாழ்ந்த சித்தபுருடர்களின் ஞானவாழ்வின் வரலாறு பற்றி எமது சந்நிதி யான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் வெளியீடான ஞானச்சுடரில் மாதம் தவறாது எழுதி வருவது போற்றத் தக்கதாகும்.

"சித்தன் போக்கு; சிவன் போக்கே"
"வாழ்க! கூடலூர்; அருள்க கூடலார்"
"ஓம்; சிவாயநமக"

## அஞ்சேலென எமக்கருளும் ஆறுமுகம்

நெஞ்சார நினைக்கின்றேன் வேல் முருகா - என்
நினைவெல்லாம் நீதானே வா முருகா
அஞ்சேலென எமக்கும் நல்வரம் அருளையா
ஆறுமுகம் படைத்த வேல் முருகையா
சஞ்சலங்கள் தீர்த்து எமை ஆட்கொண்டவேல்
சகல செல்வ யோகமும் தருகின்றவேல்
பஞ்சம் பசி கொடுமை நோய் வினை நீக்கிடும் வேல்
பன்னிருகையன் முருகன் கையேந்தும் வேல்

-சின்னப்பு தனபாலசிங்கம்-

அமைதி குறையக் குறையத் துன்பமும் வளரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழித்துணை 4

-திரு செ. சிவசுப்பிரமணியம் அவர்கள்-

01 பசிப்போர்க்கு உணவும் ரசிப்போர்க்கு கலையும்
வசிப்போர்க்குக் கொடுத்திடலே பொசிப்புடையதாகும்
நசிப்போர்க்குக் கரமாகி ருசிப்போர்க்கு விருந்துமிடல்
மசித்து மானிடத்தைப் புசிப்பதற்குச் சமமாகும்.

02 விருந்தென்று சொல்லிநாம் அருந்திடக் கொடுப்பதும்
பெருந்திரள் மத்தியில் பேருரை நிகழ்த்தலும்
இருந்திட்டால் போதுமோ வருந்துவோர்க்கு அதுமருந்தோ
பொருந்திடும் வகையிலே தருந்துணைதான் வேண்டாமோ.

03 ஜனனிப்போம் என்றுநாம் எண்ணியே இருந்ததில்லை
மரணிப்போம் என்பதையே ஜனனத்தில் அறிந்துள்ளோம்
சயனிக்கும் வேளையிலும் பிறர்நலனை எண்ணிடில்நாம்
பயணத்தின் முடிவினிலே பரமனையே அடைந்திடலாம்.

04 நன்றி மறக்கின்ற மானிலத்து மாந்தரும்
மன்றினில் மட்டுமே மனிதநேயம் உரைப்போரும்
வென்றிட்டோம் வாழ்வினை என்றெண்ணி மகிழ்ந்திடலாம்
செல்லுமிடம் அறிவாரோ சொர்க்கம்தான் இவர்க்குண்டோ.

05 பட்டமும் பதவியும் கிட்டுவது பெருமைதான்
எட்டவே முடியாத செல்வமும் செழுமைதான்
வட்ட முகத்தோடு வர்ணமும் அழகுதான் ஆனாலும்
இவற்றைச் சுட்ட இடத்தில்தான் சிவனார் ஆடுகின்றார் அறிவாரோ.

06 வெண்கட்டி கூறுவது வெள்ளைநிறம் மட்டுமன்று
எண்ணத்தில் தோன்றுகின்ற எண்ணற்ற விடயமும்போல்
கண்ணெதிரில் தோன்றுவது கற்சிலை மட்டுமன்று
விண்ணின்று எமைக்காக்கும் வடிவமென்றே வணங்கிடுவீர்.

*மனிதன் எதை அறிகின்றானோ அதுவே அவனுக்குச் சொந்தம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07 அறியாமை உடையோராய் அவனியிலே சிலபேரைக்
குறிப்பிட்டுக் கூறிநாம் இழித்துரைப்ப துண்டு
அறியாமை அவ்வளவு இழிவன்று அவனியதில்
எதையும் அறியமுயற்சிக்காமையே மிகமிக இழிவாம்.

08 கோடிகள் குவித்திடவும் கோமகன் ஆகிடவும்
நாடியே வந்திறையைப் பாடிப் பணிதல்விட்டு
தேடிய பிறப்பிலுயர் மானிடப் பிறப்பையீந்தான்
ஆடிய பாதநன்றி கூறியே பணிதல் நன்றாம்.

09 சுகபோகம் கலந்தோரைச் சுமங்கலராய் ஏற்பதுவும்
யுகமிதனில் ஏதுமிலார் அமங்கலராய் ஆவதுவும்
மிகநல்ல முறையென்று எண்ணிடாதீர் ஏனென்றால்
ஜெகமிதனில் ஆத்மபலம் அதிகமுளோர் அமங்கலரே!

10 உதவிகோரி உம்மிடத்தே ஓரிருவர் ஓடிவந்தால்
பதவியினைப் பாராமல் பரிந்துடனே செய்திடுவீர்
இதனைநீர் நிராகரித்தால் இன்னொருவர் செய்திடுவார்
அதனால் நீர் அரியதொரு வாய்ப்பினையே இழக்கின்றீர்.

---

# இழந்த செல்வம் மீண்டும் கிடைக்கும்

முன்னொரு காலத்தில் ஒரு அரசன், எதிரியிடம் தன்நாட்டை இழந்து காட்டில் சென்று வசித்து வந்தான். அந்த அரசனுக்கு புண்ணியவதி, பாக்கியவதி என்ற 2 மகள்கள் இருந்தனர். அவர்கள் ஒருமுறை கங்கைக்கரைக்குச் சென்றனர். அங்கு தேவகன்னியர்கள் பக்தியுடன் கேதாரகௌரி விரதம் இருப்பதைப் பார்த்தனர். அவர்களிடம் இருந்து நோன்புக் கயிற்றை வாங்கி கையில் கட்டிக்கொண்டனர். அப்போது அவர்களுக்கு இழந்தபொருள் எல்லாம் மீண்டும் கிடைத்தது. பாக்கியவதி அந்த நோன்பு கயிற்றை அவிழ்த்து தன் வீட்டின் அவரைப் பந்தலில் போட்டுவிட்டாள்.

புண்ணியவதி மிகுந்த பக்தியுடன் தவறாமல் விரதம் கடைப்பிடித்து வந்தாள். இதனால் அவளுக்கு மேலும், மேலும் செல்வம் பெருகியது. பாக்கியவதி வறுமையில் வாடினாள். சாப்பாட்டிற்கே வழியில்லாமல் கஷ்டப்பட்ட அவள் தன் மகனை, தன் சகோதரி வீட்டிற்கு அனுப்பி சிறிது பணம் வாங்கி வரும்படி கூறினாள். அவனும் வாங்கி வந்தான். அந்தப் பணத்தை அவன் வரும் வழியிலேயே பறிகொடுத்தான். இப்படியே 3 முறை நடந்தது. இறுதியில் அவனது பெரியம்மா, "உன் தாயார் கேதாரகௌரி விரதம் கடைப்பிடிக்கிறாளா?" என்று கேட்டார்.

அவன், "இல்லை" என்று கூறினான். "விரதம் கடைப்பிடிக்காததால்தான் பொருளை இழக்க நேர்ந்தது. விரதத்தைத் தொடர்ந்து கடைப்பிடித்து வந்தால் இழந்ததைப் பெறலாம்" என்று கூறினர். அதன்படி பாக்கியவதியும் கேதாரகௌரி விரதம் இருந்தாள். இதுவரை அவள் இழந்த பொருள் அனைத்தும் கிடைத்தது. கேதாரகௌரி விரதத்திற்கு அவ்வளவு மகிமை உண்டு. கணவன்- மனைவி இருவருமே இந்த விரதத்தைக் கடைப்பிடிப்பதால் ராஜயோகம் கிடைக்கும்.

-ஆன்மீகம்-

பணம் எவனுக்கு அடிமையோ அவன்தான் உண்மையான மனிதன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பும் பக்தியும்

– திருமதி இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு அவர்கள் –

இன்றைய இனிய காலைப்பொழுதினிலே அன்பின் சக்திபற்றி சிந்தனைக்கு எடுத்துக்கொள்வோம்.

அன்பின் ஒரு வடிவமே பக்தி. ஆன்மீகத்தில் அன்பு பக்தி ஆகின்றது. அன்புதான் கருணை, பச்சாத்தாபம், ஈகை போன்ற பண்புகளுக்குக் காரணமாக அமைகின்றது.

அன்பு காட்டியவர்கள் அன்பின் வழி நடந்தவர்கள் ஆன்மீகத்தில் சரி, லௌகீகத்தில் சரி தோற்றுப்போனதாக சரித்திரமில்லை. அன்பின் வடிவமான பக்தியை செயற்பாடாகக் கொண்டு வாழ்ந்த மெய்யடியார்கள் ஈசனைக் கண்டவர்கள், அற்புதங்கள் பல ஆற்றியவர்கள். ஜீவகாருண்ணியத்தை வலியுறுத்தியவர்கள்.

திருமூல நாயனார் வரலாற்றை எடுத்துக்கொள்வோம். மேய்ப்பான் இல்லாத ஆநிரைகளைக் கண்டு கலங்கிய மகான் இவர். அப்பசுக் கூட்டங்களுக்காக தனது உடலையே தியாகம் செய்யவேண்டிய நிர்ப்பந்தம் திருமூலருக்கு ஏற்பட்டமை நேயர்கள் அறிந்ததே.

மேலும் ஞானசம்பந்தப் பெருமான் அரவம் தீண்டி இறந்த தலைவனை எழுப்பி தலைவி துயர் தீர்த்தமை, அப்பர் சுவாமிகள் அரவம் தீண்டிய அப்பூதியடிகளின் புதல்வனை இறையருளால் உயிர்பெற்றெழச் செய்தமை போன்றவற்றிற்கெல்லாம் காரணம் மன்னுயிர்கள்மேல் அவர்கள் கொண்டிருந்த அன்பும், கருணையுமே ஆகும்.

மதம் என்று சொல்லி இறைவழிபாட்டோடு நின்றுவிடாது, அந்த மதம் மெச்சும் அடியார்கள் என்ன செய்தார்கள் எப்படி வாழ்ந்தார்கள் என்பதை யாம் சற்று நிதானமாகச் சிந்தித்துப் பார்த்தாகவும் வேண்டும். அங்கே காணும் உண்மைகளை யாமும் கடைப்பிடிக்க வேண்டும். மக்கள் சேவையே மகேசன் சேவை என்று நாம் கொள்ள வேண்டும்.

அன்பே சிவம் என்று நாம் கொஞ்சம் அன்புடைமை கொண்டு பேணி நடக்க வேண்டும். அன்புடைமை கொண்டவர்கள் தியாக சிந்தனை உடையவர்களாயிருப்பர். சுயநல மற்றவர்களாய் திகழ்வர்.

**அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்**
**என்பும் உரியர் பிறர்க்கு.**

என்கின்றது திருக்குறள். குழந்தைகளைப் பேணுவதும், விலங்குகளின் மேல் ஜீவகாருண்யம் காட்டுவதும் எமது கடமை அல்லவா? மரங்கள் வாடுவதையே காணச் சகிக்காது, அவற்றின் துயர் தீர்த்தவர்கள் உளர். வாடிய பயிர் கண்டு வாடியவர் வள்ளலார் எனப் போற்றப்படும் இராமலிங்க அடிகளார்.

முல்லைக்கு தேர் ஈந்தவன் முடி மன்னன் பாரி. நாடுவார் அற்று தேடுவார் அற்று நடைபாதையிலே படர்ந்து கவனிப்பார் அற்றுக் கிடந்த முல்லைச்செடி நன்கு படர்ந்து வளரட்டும் எனத் தன் தேரைக் கொடுத்தவன் பாரி வள்ளல். அன்பா, பாசமா, புரிந்துணர்வா, கழிவிரக்கமா என்னவென்று சொல்வது! ஆனால் ஒன்று சொல்லலாம், இவர்கள் நெஞ்சில் இறைவன் வாழ்கின்றான். அவன் உறைவதால் தான் அங்கே கருணை கசிகின்றது. இரக்கம் பிறக்கின்றது. பன்றிக்குட்டிகளின் பசி தீர்க்க பன்றியாக எழுந்தருளியவர்

*உலகில் அடக்கமுடியாத அசுரன் அலட்சியம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லவா எங்கள் பெருமான்? எனவே எங்கே அன்பும் கருணையும் இரக்கமும் ஜீவகாருண் யமும் உள்ளதோ, அங்கெல்லாம் தெய்வீகம் உறைகின்றது, புனிதம் பொங்குகின்றது, வாய்மை வளமாக ஆட்சி செய்கின்றது.

பரமாத்மா ஒன்று. இரண்டற்றது. அது போலவே அன்பும் ஒன்றுதான். பரமன் பல வடிவங்கள் எடுப்பார். அதுபோன்று அன்பும் பல வடிவங்களில் எம்மில் இருந்து வெளிப் படும். இரக்கம், ஈகை, ஜீவகாருண்யம், புரிந் துணர்வு, உதவிசெய்தல் இவை யாவும் அன்பின் வடிவங்களே. நாம் ஒருவரை எம் பால் ஈர்த்தெடுக்க ஒரே ஒரு வழி அன்புதான். அன்பால் அகிலத்தையே வென்றுவிடலாம். அப்போ! இறையை யாம் விட்டுவிட முடியுமா? இல்லை, இறைவன் தான் தம்மேல் மெய் அன்பு கொண்டோரை கைவிட்டு விடுவாரா? இல்லையே! இதற்குச் சான்றுதான் எமக்கு அருள் வழிகாட்டிகளாக அமைந்த நாயன்மார் களது அற்புத வரலாறுகள்.

இறையிடம் நாம் காட்டும் அன்புதான் பக்தி. மெய்யடியார்கள் பக்தி வயப்பட்டவர் கள். தன்னலம் அற்றவர்கள். தன்னலத்திற் கும் அன்புக்கும் வெகுதூரம் என்பதை யாம் அனுபவத்தால் காண்கின்றோம். சுந்தரரின் பக்தி ஈசனைத் தூது செல்ல வைத்தது. அப்பரின் பக்தி ஈசன் அப்பர் சுவாமிகளுக்கு அன்னமிட்டு பூவுலகில் கைலாசக் காட்சி யையே கண்டு தரிசிக்க வைத்தது. மாணிக்க வாசகரது மணியான பக்தியே ஈசனைக் குதிரை வியாபாரியாக்கியது. வந்தியம்மை யாரின் பக்தியோ எம்பெருமானை மண் சுமக்க வைத்தது. பாண்டியனிடம் பிரம்படி பெற வைத்தது, வைகையைப் பெருக வைத் தது. எம் உள்ளத்தில் பக்தி பிரவாகம் எடுப் பின் பரமனே எம்முள்ளே வந்து குடிகொண்டு விடுவான். இந்த உண்மையைத் தானே, மெய்யடியார்களது வரலாறுகள் கூறுகின்றன. காரணம் அன்பின் ஒரு வடிவம்தான் பக்தி.

நெஞ்சிலே பக்தி உள்ளவன் இறையை ஒரு பொருளாகக் காண்பான். பௌர்ணமி தினத்தன்று நிலா மிகவும் தெளிவாகத் தெரி கிறது. அது ஒன்றுதான் வானத்தில் இருப்பது போல் தோன்றுகிறது. அத்தனை ஒளிமய மாக அழகாகத் தோன்றுகின்றது அன்று அந்த வெண்ணிலா. அதுவே பலவாக எமக் குத் தோன்றினால் பார்வைக்கோளாறு என்று தான் சொல்லுவோம். இதேபோன்று மெய் யன்பு ஒன்றால்த்தான் பரம்பொருளை ஒன் றாகக் காணமுடியும். அதுவும், தெளிவாகக் காணமுடியும். இதுவே உண்மையும்கூட, எனவே அன்பு செய்வோம். ஆனந்தம் அடை வோம். முயற்சிப்போமாக.

## முனிவரை வீழ்த்திய இந்திரன்

தபோவனம் ஒன்றில் முனிவர் ஒருவர் தவம் புரிந்து வந்தார். அவரது தவ மகிமையால் "தனது பதவிக்கு ஆபத்து நேருமோ?" என்று அஞ்சினான் இந்திரன். எனவே, போர் வீரனின் வேடத்தில் முனிவரின் எதிரே வந்து வணங்கினான். அவரிடம் "ஸ்வாமி! இங்கு வந்ததும், எனது போர்வெறி மறைந்துவிட்டது. எனது வாளை இங்கேயே வைத்துவிட்டுப் போகிறேன். என் பெற்றோரிடம் விடைபெற்று வந்து உங்களுக்கு ஊழியம் செய்கிறேன். பிறகு இந்த வாளை அரசரிடம் ஒப்படைக்கிறேன். அதுவரை இது தங்களிடமே இருக்கட்டும்" என்றான். முனிவர், வாளை வாங்கி வைத்துக் கொண்டார். பிறகு அந்த முனிவருக்குத் தியானம், யோகம் எதிலும் புத்தி செல்லவில்லை. வாளின் நினைவே எப்போதும் முன் நின்றது. அடிக்கடி அதை எடுத்து சுழற்றி, வீசிப் போரிடுவதுபோல பாவனை செய்து மகிழ்வார்.

இதனால் அங்கிருந்த மிருகங்களும், பறவைகளும், சீடர்களும் அஞ்சினார்கள். அவரின் தவவலிமை குன்றியது. இந்திரன் மகிழ்ந்தான். நமக்குத் தேவையற்ற பொருள் எவ்வளவு உயர்ந்ததாக இருந்தாலும் அதை நம்மிடம் வைத்துக்கொள்ளக்கூடாது.

-சக்தி-

*நீ இழந்தது முக்கியமல்ல, எஞ்சியிருப்பதுதான் முக்கியம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமுறை பாடிப் பணிவோம்

– திருமதி யோகேஸ்வரி சிவப்பிரகாசம் அவர்கள் –

அப்பர் பெருமானின் அருமையான தேவாரங்கள் சிவனடியை நினைந்து நினைந்து கசிந்துருகி நாடோறும் பாடிப்பரவ ஏற்றவை. நான்காந் திருமுறையுள் அமைந்த அத்தகு தேவாரங்களைப் போன்றவையே ஐந்தாந் திருமுறையிலும் அடங்கியுள்ளன. நாவுக்கரசப் பெருமானின் 1015 தேவாரங்கள் நூறு திருப்பதிகங்களாக இதில் இடம்பெற்றுள்ளன. ஐந் தாந் திருமுறையிலுள்ள அனைத்துத் தேவாரங்களுமே திருக்குறுந்தொகையாகப் பாடப்பட் டவை என்பதை முதலிலேயே தெரிவிக்க வேண்டும். இவற்றிற்குப் பண் குறிப்பிடப்படவில்லை.

எமது உடல் வாழ்வதற்கு உணவு தேவை. அந்த உணவு கிடைக்காது கஷ்டப்படு வோர் பலர். எமக்கு உணவு கிடைப்பது இறைவனது அருளாலேதான். உணவை உண்ணும்போது இறையருளை எண்ணி அவனை வணங்கி உண்பது எமது வழமையாகும். அப்படி வணங்கி வழிபடும் வேளையில் நாம் பாடும் பின்வரும் தேவாரம் ஐந்தாந் திருமுறையிலேயே இருக்கின்றது.

அன்னம் பாலிக்கும் தில்லைச் சிற்றம்பலம்
பொன்னம் பாலிக்கு மேலும் இப்பூமிசை
என்னன் பாலிக்கு மாறு கண்டின்புற
இன்னம் பாலிக்குமோ இப்பிறவியே.

தில்லைச் சிற்றம்பலத்தில் திருநடனம் புரியும் நடராசப் பெருமானைத் தரிசித்து வழி பட அன்னம் நமக்குக் கிடைக்கும். உடலை வளர்க்கும் உணவு கிடைக்கும் என்ற பொருள் புலனாகும். அதேவேளை உயிர் வளர்க்கும் வீட்டின்பம் அல்லது வீடுபேறு அளிக்கும் சிவ பெருமான் என்ற கருத்தும் அன்னம் என்பதற்கு இருக்கிறது. எனவே வீடுபேறு கிடைக்கும் என்று கூறுவதே சாலப்பொருத்தம். பொன்னுலகாகிய தேவருலக வாழ்வு கிட்டும். மேலும் இந்தப் பூமியில் எனது அன்பு பெருகும் வகையில் கண்டு ஆனந்தமடைய இப்பிறவி மேலும் வாய்க்குமோ? என்ற பொருள் கொண்ட இத்தேவாரம் முத்திப்பேறையும் கருதியே பாடப்பட்ட தாகும். உணவு உண்ணும்போது மட்டுமன்றி இத்தேவாரம் இறையின்பம் வேண்டும்போதும் பாடிப்பரவ ஏற்றதாகும். இப்பதிகத்திலுள்ள ஒவ்வொரு தேவாரமும் பாடுகையில் மனதைப் பக்திமயப்படுத்தும் வண்ணமே அமைந்துள்ளதைக் காணலாம். இதன் நான்காந் தேவாரம்

அல்லல் என்செயும் அருவினை என்செயும்
தொல்லை வல்வினைத் தொந்தந்தான் என்செயும்
தில்லை மாநகர்ச் சிற்றம்பல வனார்க்கு
எல்லை இல்லதோர் அடிமை பூண்டேனுக்கே.

தில்லைப் பெருநகரக் கோவில் சிற்றம்பலத்தில் ஆடும் அம்பலவாணனுக்கு யான் அடிமை. எல்லைகளற்ற அடிமை. அவனுடைய அடிமையை துன்பதுயரங்கள் என்ன செய் யும்? அந்தத் துன்பங்களைத் தரும் வினைகள் என்ன செய்யும்? எந்த வினைகளென்றாலும் பழைய கொடும் வினைகள் என்றாலும் என்ன செய்யும்? எதுவுமே செய்யாது என எதற்கும் அஞ்சாத ஒரு தீரம் இதனைப் பாடும்போது மனதுள் பொங்கி எழும்.

*நல்ல சேவை செய்யத் தேவையான ஆற்றலைக் கெட்ட மனிதனிடம் ஒருபோதும் காணமுடியாது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துன்பங்கள் துயர்தராதா? அதுவும் முன்செய்த வினைகள் தொடர்ந்து வந்து இந்தப் பிறவியிலும் வருத்துவதனாலேயே இப்படிக் கஷ்டப்படுகின்றோம். என்று நினைத்துக் கொண்டிருக்க இவரென்ன இப்படிப் பாடுகின்றார்? என்றொரு கேள்வி எமக்குள் எழத்தான் செய்யும். கண்ணப்பர் இறைச்சியை இறைவனுக்கே படைத்துவிட்டு உண்டார். நானும் அப்படிச் செய்வதில் என்ன தவறு? என்று கேட்கும் மனம் இப்படியும் கேட்கத்தானே செய்யும்.

ஈசனின் கண்ணில் இரத்தத்தைக் கண்டதும் பதறித் துடித்து அந்த விழி ஒளிபெறவென எண்ணித் தன் கண்ணை இடந்து அப்பினார் கண்ணப்பர். ஒரு விழியை மட்டுமல்ல. இரு விழிகளையுமே கொடுத்துவிட்டார். நாமென்றால் இப்படிச் செய்திருப்போமா? "இதென்ன பைத்தியக்காரத்தனம்!" என்று எள்ளிநகையாடியிருப்போம். இந்தச் சிலையின் கண்ணிலிருந்து எப்படி உதிரம் பெருகும்? என்று ஆய்வு செய்திருப்போம். கண்ணப்பரின் பக்திநிலையைக் கற்பனை செய்யக்கூட இயலாதவர்கள் நாம். அதேபோன்று அப்பரடிகளின் பக்தி வைராக்கியத்தை எட்டிவிட எம்மால் இயலாது. இயலுமானவர்களை எந்த வல்வினையும் வருத்தாது.

சமணத்திலிருந்து சைவ சமயத்திற்கு மாறிவிட்ட நாவுக்கரசரை எப்படியாவது அழித்து விடவேண்டும் என்பது சமணர்களின் திட்டம். அதற்கான முயற்சிகளில் தோற்றபோதும் விடாது முயன்றனர். அதில் ஒன்றுதான் அவரை நீற்றறையில் அடைத்தது. சிப்பியைச் சுண்ணாம்பாக நீற்றியெடுப்பதற்காக உச்ச வெப்பமூட்டும் அறைதான் நீற்றறை. அதனுள் ஒரு மனிதரை விட்டால் சாம்பர்தான் மிஞ்சும் என நம்பினர். அப்பர் பெருமானோ நீற்ற அரனடிகளில் சரண்புகுந்துவிட்டார்.

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே.

எந்தக் குற்றமுமற்ற இனிய வீணையிசை கேட்க, மாலை நிலவின் தண்ணொளி பரவியிருக்க, தென்றல் இதமாக வீச, வண்டுகள் ரீங்கரிக்கும் பொய்கையில் இளவேனிற் காலத்தில் இருந்தால் எப்படியிருக்குமோ அதேபோன்று என் தந்தையான ஈசனின் திருவடிகளின் நிழலிருக்கின்றது என்று நீற்றறையிலிருந்து பாடியவர் அப்பர் பெருமான்.

துன்பம் வந்து துயரைத் தந்தாலும் இறைவனின் திருக்கழல்களில் தஞ்சமடைந்ததால் அவை அவரை எதுவும் செய்யவில்லை. இதுதான் அவரது எதற்கும் அஞ்சாத தீரத்தின் இரகசியம். "மாசில் வீணையும்" என்ற தேவாரமும் ஐந்தாந் திருமுறையிலுள்ளதே.

ஒவ்வொரு நாளும் பாடி வழிபட தனது பக்தி நிலைக்கு நம்மையும் இழுத்துச் செல்வனவாக அவரது தேவாரங்கள் அமைந்துள்ளன. கோவிலுக்குச் சென்று இறைவனை முறைப்படி வணங்குங்கள். பாடிப் பணியுங்கள் அவனை நினைந்து வணங்க வினைகள் தீரும் என வழிகாட்டியுள்ளார்.

கறைகொள் கண்டத்தெண் தோளிறை முக்கணன்
மறைகொள் நாவினன் வானவர்க் காதியான்
உறையும் பூம்பொழில் சூழ்கச்சி யேகம்பம்
முறைமை யாற்சென்று முந்தித் தொழுதுமே.

*உடமையும் வறுமையும் ஒருவழி நில்லா.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலகால விடத்தை உண்டதனால் கழுத்து கருமைநிறம் கொண்டவனும் எட்டுத் தோள்களை உடையவனும் வேதம் ஓதும் நாவுடையவனும், மூன்று கண்களை உடையவனும் தேவர்களுக்கெல்லாம் முதல்வனுமாகிய இறைவன் குடிகொண்டுள்ள, பூங்காக்கள் சூழ்ந்த திருக்கச்சியேகம்பத்தை முந்திச் சென்று முறைப்படி வணங்குங்கள் என்ற தேவாரத்தைப் பாடி வணங்கும்போது கோவிலுக்குச் சென்று முறைப்படி வணங்கவேண்டுமென்னும் ஆவல் அரும்பும்.

நாளும் நம்முடை நாள்க ளறிகிலோம்
ஆளும் நோய்களோ ரைம்பதோ டாறெட்டும்
ஏழை மைப்பட் டிருந்துநீர் நையாதே
கோளிலி யான் பாதமே கூறுமே.

எமது வாழ்நாளின் வரையறை நாளை எமக்குத் தெரியாது. எம்மை ஆட்சி செய்யும் நோய்களோ தொண்ணூற்றெட்டுக்கு (ஐம்பதும் ஆறெட்டு நாற்பத்தெட்டும்) மேலாகும். இத் தகைய அறிவற்றவராயிருந்து நீர் நைந்து போகாது திருக்கோளிலியில் வீற்றிருக்கும் சிவபிரானின் பாதங்களைப் போற்றிப் பாடுவீராக என்று ஈசன் பதம் போற்றவைக்கும் இத் தேவாரத்தில் எமது வாழ்வின் நிலையற்ற தன்மை மனதில் பதியுமாறு உணர்த்தப்படுகிறது.

நமக்குத்தான் எவ்வளவு நோய்கள். இன்று சந்தித்த மருத்துவரை இன்னும் இரண்டு நாட்களின் பின் சந்திக்கும்போது மேலும் இரண்டு மூன்று நோய்கள் அதிகரித்துவிட்டதாகக் கூறுகிறார். நோய்கள் ஆட்சிசெய்யும் தேசமாக எமது தேகம் இருக்கிறது. இவ்வளவு நோய் களா? விரைவில் இறந்துவிடப் போகிறோமோ? பிறந்தவுடனேயே என்றோ ஒருநாள் இறந்து விடுவோம் என்பது அனைவருக்கும் தெரிந்த ஒன்று. ஆனால் எப்போதென்பதுதான் தெரியாத ஒன்று. மருத்துவரிடம் கேட்டால் அவருக்கும் அதற்குப் பதில்கூற முடியவில்லை. சோதிடரிடம் கேட்டால் அவரும் அதற்கு நாட்குறித்துச் சொல்லவியலாமல் தவிக்கிறார். அந்த நாள் எதுவென்று அறியமுடியவில்லை. இத்தகைய அறிவின்மையுடன் நைந்து போகாமல் ஈசனின் இணையடிகளைப் போற்றிக்கொண்டிருந்தால் ஆன்ம ஈடேற்றம் கிட்டுமல்லவா? இதனை நாவுக் கரசப் பெருமான் தன் தேவாரங்களில் அழுத்தியழுத்திக் கூறுகின்றார். அவற்றுள் ஒரு தேவாரம் வருமாறு.

புனையும் மாமலர் கொண்டு புரிசடை
நனையும் மாமலர் சூடிய நம்பனைச்
கனையும் வார்கடல் நாகைக் காரோணனை
நினைய வேவினை யாயின நீங்குமே.

தேனால் நனையும் மாமலர்களை முறுகியிருக்கும் சடையில் சூடியிருக்கும் எம் பிரானை, ஒலிக்கின்ற நீண்ட கடலுடைய திருநாகைக்காரோணத்தில் எழுந்தருளியிருப்பவனை நினைக்க வினைகள் நீங்குமே என்ற பொருள் பொருந்திய தேவாரமும் இறைவனை நினைந்து வழிபடுமாறு எம்மை வழிப்படுத்துகிறது.

இவ்வாறு எமது ஆன்ம ஈடேற்றத்திற்கான தேவாரங்களைக் கொண்டதாக ஐந்தாந் திருமுறை அமைந்துள்ளது. அவற்றைத் தினமும் பாடி வழிபடுவது நலம் பயக்கும்.

*தூய மனதுக்கு இறைவன் புலப்படுகிறான்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோவில்களில் செய்யக்கூடாதவை

– திரு சி.வ. இரத்தினசிங்கம் அவர்கள் –

சைவக் கோயில்களில் வணங்கச் செல்கின்ற சமயங்களில் சில ஒழுக்கக் கட்டுப்பாடுகளைக் கடைப்பிடிக்கவேண்டியது சைவ பக்தர்களின் கட்டாயக் கடமையாகும். இவை யாவும் பாரம்பரியமாக- பன்னெடுங்காலமாகச் சைவப் பெருமக்களால் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்ற ஒழுக்கக் கட்டுப்பாடுகளாகும். அப்படியான கடப்பாடுகளைக் கடைப்பிடிப்பதில் அக்கறை காண்பிக்காமை தெய்வ நிந்தனையாக ஆகிவிடும். செய்யக் கூடாது என்று ஒதுக்கப்பட்டுள்ள இச்செயல்களில் ஏதாவது ஒன்றையேனும் செய்துகொண்டு பிரார்த்தனை செய்வதால் பயன் எதுவும் கிட்டப்போவதில்லை. குளிக்கப் போய் சேற்றைப் பூசிக்கொண்ட செயலாக ஆகிவிடும். ஆகவே அடியார்களே! தயவு செய்து கோவில்களில் மறந்தும்கூட இந்தத் தவறுகளை மட்டும் செய்து பாவத்தைச் சம்பாதித்து விடாதீர்கள். இந்த விதிகளை நாமும் கடைப்பிடிப்போம், நமது பிள்ளைகளுக்கும் கற்பிப்போம்.

* அபிஷேகம் நடக்கும்பொழுது கோவிலைச் சுற்றி வலம்வருதல் கூடாது.
* அர்ச்சனைத் திரவியங்களை தட்டுகளிலன்றிப் பைகளில் கொண்டுசென்று சமர்ப்பிக்கக் கூடாது.
* ஆண்கள் மேற்சட்டை அணிந்து கோயிலுக்குள் செல்லக்கூடாது. வேட்டி சால்வை உத்தமம். பெண்கள், சிறுமிகள் நவநாகரிக ஆடை அலங்காரங்களைத் தவிர்த்து சைவ மத பண்பாட்டுக்கு ஏற்றவகையில் ஆடையணிகலங்களை அணியவேண்டும்.
* கோவிலுக்கு உள்ளே வைத்து எவருடனும் வீண்வார்த்தைகள் பேசக்கூடாது.
* கிரகணம் இருக்கும்பொழுது கோயிலை வணங்கக்கூடாது.
* குளிக்காமல் கோயிலுக்குள் போகக்கூடாது.
* கையில் விளக்கு அல்லது கர்ப்பூரதீபம் ஏந்திக் குருக்களைத் தவிர வேறு எந்த அடியார்களும் ஆராதனை செய்யக்கூடாது.
* கோயிலை வேகமாக வலம்வருதல் கூடாது.
* கோயிலுக்கு உரித்தான பொருட்கள் எதனையும் வீட்டிற்கு எடுத்துச்செல்லக் கூடாது.
* கோயிலுக்குச் சென்று திரும்பியபின் கால்களைக் கழுவக்கூடாது.
* கோயிலுக்குச் சென்றுவிட்டு வெளியே வந்து தானதர்மம் செய்யக்கூடாது. வணங்கச் செல்வதற்கு முன்னரே அந்தக் கடமையை நிறைவேற்ற வேண்டும்.
* கோயிலில் நந்தி மற்றும் மூர்த்திகளையும் தொட்டு வணங்கக்கூடாது.
* கோயிலின் உள்ளே தலைவாரக் கூடாது.
* கோயிலின் உள்ளே தூங்கக் கூடாது.
* கோயிலின் உள்ளே வர்த்தகம் மற்றும் பிரசார முயற்சிகளில் ஈடுபடக்கூடாது.
* கோயிலின் திருக்கதவம் பூட்டப்பட்ட பின்னர் வணங்கக்கூடாது.
* கொடிமரம், நந்தி, பலிபீடம், இவைகளின் நிழல்களை மிதிக்கக்கூடாது.

ஏழையின் பக்தியில் இறைவன் மகிழ்கிறான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* கோயிலின் உட்பிரகாரத்திலோ வெளிவீதிப் பிரகாரங்களிலோ எச்சில் உமிழ்தலோ மலசலம் கழித்தலோ கூடாது.
* கோயிலின் புனிதத் தன்மையைக் கெடுக்கக்கூடிய மச்ச மாமிசம் ஆயுதங்கள் போன்ற எந்தப் பொருளையும் கோயில் வளாகத்தினுள் எடுத்துச்செல்லக் கூடாது.
* கோயில் படிகளில் உட்காரக்கூடாது.

சிவன் கோயில்களில் வணக்கம் முடிந்தபின்னர் சற்றுநேரம் அமர்ந்து வரவேண்டும், பெருமாள் கோவில்களில் அமரக்கூடாது.

* சுவாமிக்கு நைவேத்திய நிவேதனம் ஆகும்போது பக்தர்கள் பார்த்தல்கூடாது.
* சுவாமிக்கு நிவேதித்த பிரசாதம் தவிர்ந்த ஏனைய உணவுப் பண்டங்களைக் கோயிலின் உள்ளே வைத்து உண்ணக்கூடாது.
* தலையில் துணி, தலைப்பாகை, தொப்பி, தலைக்கவசம் போன்றவற்றை அணிந்த நிலையில் கோயிலுக்கு உள்ளே நுழையக்கூடாது.
* தாம்பூலம் தரித்துக்கொண்டோ புகை பிடித்துக்கொண்டோ கோயிலுக்குள் செல்லக்கூடாது.
* தீர்த்தக் கேணியிலோ அல்லது திருமஞ்சனக் கிணற்றிலோ கல்லை அல்லது கழிவுப் பொருட்கள் எதனையும் போட்டு மாசுபடுத்தக்கூடாது.
* தேவதைகள் பலிபீடத்திற்கு நடுவிலும், மூலவருக்கும் நந்திக்கும் நடுவில் குறுக்கறுத்துச் செல்லக்கூடாது.
* பாதணிகளுடன் கோயிலுக்குள் செல்லக்கூடாது.
* பிரசாதங்களை ஒற்றைக் கையால் வாங்கக்கூடாது. இடது கையின்மேல் வலது கையை வைத்து வாங்கவேண்டும்.
* புண்ணிய தீர்த்தங்களின் அருகே வந்தவுடன் நீரில் காலை வைக்கக்கூடாது. முதலில் நீரைக் கையிலெடுத்து தலையில் தெளித்துக்கொண்டு பின்னர் கால் அலம்ப வேண்டும்.
* பெண்கள், சிறுமிகள் தலைவிரி கோலத்தில் கோயிலுக்குள் செல்லக்கூடாது. தலைமுடியைக் கொண்டை அல்லது பின்னல்போடுவது உத்தமம்.
* மண்சட்டி விளக்குகளை ஏற்றும் முன்னர் அவற்றைக் கழுவி சுத்தம் செய்யாமல் தீபம் ஏற்றக் கூடாது.
* வாசனை இல்லாத மலர்களைக் கூடுமானவரை பூஜைக்கு அல்லது தெய்வங்களுக்குச் சமர்ப்பித்தலைத் தவிர்ப்பது நல்லது.
* விளக்கு இல்லாமல் (எரியாதபொழுது) சுவாமியை வணங்கக் கூடாது.
* விபூதி, சந்தனம், பத்திரபுஷ்பம், தீர்த்தம் போன்ற பிரசாதங்களைக் கீழே சிந்தக்கூடாது. சுவர்கள் தூண்களில் பூசவும் கூடாது.
* விலங்குகள் பறவைகள் போன்ற செல்லப் பிராணிகளைக் கோயில் வளாகத்தினுள் கொண்டுசெல்லக் கூடாது.

இந்த விதிகளைக் கடைப்பிடித்துச் செய்யப்படுகின்ற பிரார்த்தனையை இறைவன் நிச்சயமாக ஏற்றுக்கொள்வான்.

*கடவுள், உலக ஆசைகள் கொண்ட மனதிற்குப் புலப்படாதவர்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லவர் மனங்கள் துன்புறுத்தப்பட்டால் பெரும் துன்பங்கள் ஏற்படும்

– திரு நீர்வைமணி அவர்கள் –

நல்லாரைக் காண்பதுவும் நன்றே
நலமிக்க நல்லார்சொற் கேட்பதுவும் நன்றே
நலமிக்க நல்லோரோடு கூடி இருப்பதுமுவும் நன்றே
நல்லார் குணங்கள் உரைப்பதுவும் நன்றே.

என நல்லோர்களின் சேர்க்கை நலம்மிகத் தருவது எனத் தமிழ் முதாட்டி ஔவைப் பிராட்டியார் சிறப்பாகக் கூறுகின்றார்.

இன்றைய உலகில் நல்லவர், தீயவர்களை இனங்காண்பதே முடியாதுள்ளதாகப் பலரும் கூறுவார்கள். வள்ளுவப் பெருந்தகையார் தனக்கும், பிறர்க்கும் இன்னா செய்யாதவரையே நல்லார் எனக் கூறுகின்றார். எனவே பிறருக்கு இன்னாசெய்யாதிருப்பதற்காகத் தன்னைத் தானே வருத்திக் கொள்பவர்களும் எம்மிடையே உள்ளனர் என்பது இதனாற் புரியப்படுகின்றது. இன்று உலகியல் வாழ்வில் சுயநலம் மேலோங்கி இருப்பதையே நாம் காண்கின்றோம். இந்தச் சுயநலத்தின் காரணமாகப் பிறருக்குத் துன்பம் ஏற்படுவதனை எல்லோரும் சிந்தித்துப் பார்ப்பதில்லை. ஒரு பெரியார் சொன்னார் - ஒரு மனிதனின் சிரிப்பின் பின்னால் பல மனிதரின் அழுகை தெரிகின்றது என்று.

வளுளுவப் பெருந்தகையார்,

"இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண
நன்னயம் செய்துவிடல்" என்று கூறுகின்றார்.

துன்பம் செய்தவர்கள் வெட்கப்படும்படியாக அவருக்கு நல்லது செய்துவிடல் என்பது எல்லோராலும் முடியாது. அதற்கேற்ப மனப்பக்குவம் இருக்கவேண்டும். இந்த நல்ல மனப்பக்குவம் ஆன்மிக சக்தியாலும், இறைவழிபாட்டினாலுமே ஏற்படக்கூடியது. தனக்கும் பிறர்க்கும் துன்பமிலா வாழ்வு வாழும் ஆன்மிக சக்தி, இறைவழிபாடு மிக்கவர்களுக்குத்தான் இறைவன் தூய மனத்தினைக் கொடுக்கின்றார். இவர்கள் இறையருளாளர்கள், ஞானிகள், பெரியார்கள் என்றெல்லாம் எம்மாற் போற்றப்படுகின்றோராவார்.

இவ்வித போற்றுதலுக்குரியவர்களின் மனத்தைத் துன்புறுத்துவதனால் நாம் பெருந் துன்பங்களை அடைய நேரிடுகின்றது. எம்முன்னோர் இறைவனின் சாபம், முனிவரின் சாபம், பெரியோர்களின் சாபம் என்றெல்லாம் சொல்லி வாழ்வில் நாம் நல்லன செய்ய வேண்டும். அல்லாதன தவிர்க்க வேண்டும் என அறிவுறுத்துவார்கள். இதனை நாம் நன்கு அறிந்து, தெரிந்து வாழ்விற் பிறர்க்கு இன்னா செய்யாது வாழப்பழகினால், நாமும் நல்லவர் மனத்தில் இடங்கொண்ட நன்மனத்தவர்களாக வாழலாம்.

நல்லார் ஒருவர்க்குச் செய்த உபகாரம்
கல்மேல் எழுத்துப் போலாகுமே - அல்லாத
ஈரமில்லா நெஞ்சத்தார்க் கீந்த உபகாரம்
நீர்மேல் எழுத்துக்கு நேர்.

என நாலடியார் நல்லவர்க்குச் செய்யும் நற்பணிகள் என்றும் நிலையானதெனவும், அல்லாத கல்நெஞ்சங் கொண்டவர்க்குச் செய்யும் எந்த நற்பணியும் பயனற்றதெனவும் விளக்குகின்றது. எனவே வாழ்வில் நல்லன நாடி அல்லாதன தவிர்த்து நாமும் நலம் வாழ்ந்து பிறரும் நலமே வாழ வழிகாட்டுவோம்.

ஒருவன் கற்ற நூலின் அளவாகவே நுண்ணறிவும் அமையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2017இல் சந்நிதியான் ஆச்சிரம சேவை

## -ஒரு சுருக்கமான தொகுப்பு-

01.09.2017 வெள்ளிக்கிழமை

யா/ தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலயத்தில் கல்வி பயிலும் மாணவன் ஆனந்தசிவம் ரஜிகாந் என்பவருக்கு துவிச்சக்கரவண்டி வழங்கப்பட்டது.

22.09.2017 வெள்ளிக்கிழமை

யா/ தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலய சிறுவர் வகுப்பறைக்கு 3 சீலிங் மின்விசிறி வழங்கப்பட்டது.

29.09.2017 வெள்ளிக்கிழமை

யா/ அல்வாய் வடக்கு றோ.க.த.க. பாடசாலை வாணி விழாவினை முன்னிட்டு 97 மாணவர்களுக்கான பரிசுப் பொருட்கள் வழங்கப்பட்டது.

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பிரதேச செயலகத்தில் நடைபெற்ற முதியோர், மாற்றாற்றலுடையோர் தினத்தை முன்னிட்டு முதியோர்களுக்கான 30 உடுபுடவைகள் வழங்கப்பட்டது.

யாழ்ப்பாணம் மாவட்ட சமூக சேவைகள் அலுவலகம் நடாத்திய சர்வதேச முதியோர் தினத்தை முன்னிட்டு 50 உடுபுடவைகள் வழங்கப்பட்டன.

பருத்தித்துறை- வடமராட்சி வடக்கு- பிரதேச செயலகத்தில் நடைபெற்ற முதியோர் தின வைபவத்திற்காக 30 உடுபுடவைகள் வழங்கப்பட்டன.

01.10.2017 ஞாயிற்றுக்கிழமை

பொலநறுவை சமனப்பிட்டியில் அமைந்துள்ள ஸ்ரீ சாரதாதேவி அறநெறிப் பாடசாலையில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு பிரதி ஞாயிறுதோறும் மதிய உணவு வழங்கும் புதிய திட்டம் 01.10.2017 ஞாயிறன்று சந்நிதியான் ஆச்சிரம சுவாமிகளால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்த ஞாயிறு மதிய உணவுத் திட்டத்தின்மூலம் 265 மாணவர்கள் பசியாறுவது கவனிக்கவேண்டியதாகும்.

02.10.2017 திங்கட்கிழமை

மாத்தளை கலைமகள் மகா வித்தியாலய பயன்பாட்டிற்காக இரண்டு மடிக் கணனிகள் ஆச்சிரம சுவாமிகளால் நேரிற்சென்று வழங்கப்பட்டது.

குருநாகல் இந்து தமிழ் மகா வித்தியாலய அதிபர் விடுதியின் திருத்த வேலைகளுக்காக ரூபா 50,000/= சுவாமிகளால் நேரிற்சென்று வழங்கப்பட்டது.

*பக்தியே மனித வாழ்க்கையின் சாரம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஞானச்சுடர் 2017 ஐப்பசி மலர்**

# கார்த்திகை மாத வாராந்த நிகழ்வுகள்

03.11.2017 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில்

விடயம் :- "பட்டிமன்றம்"

வழங்குபவர்கள் :- செஞ்சொற் செல்வன் இரா. செல்வவடிவேல் குழுவினர்

---

10.11.2017 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

"இன்னிசை"

(பக்கவாத்திய சகிதம்)

---

17.11.2017 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

சொற்பொழிவு :- "கந்தபுராணம்" (தொடர்)

வழங்குபவர் :- திரு அ. குமாரவேல் அவர்கள்

(சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ்/ கல்லூரி வட்டுக்கோட்டை)

---

24.11.2017 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

**ஞானச்சுடர் கார்த்திகை மாத வெளியீடு**

வெளியீட்டுரை :- திரு ச. நவரத்தினராசவேல் அவர்கள்

(இளை. அதிபர்)

மதிப்பீட்டுரை :- திரு செ. பரமேஸ்வரன் அவர்கள்

239ஆவது மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிவு இல. *QD/82/NEWS/2017*

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய முகப்புத் தோற்றம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org